பெண்களின் சபரிமலை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்குளத்துகாவு பகவதி அம்மன்

CHAKKULATHAMMA

தலவரலாறும் பாடல்களும்



சக்குளத்துக்காவு ஸ்ரீ பகவதி அம்மன் கோவிலின் தோற்றம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்களின் சபரிமலை

சக்குளத்துகாவு பகவதி அம்மன்

சர்வ மங்கள மாங்கல்யே!
சிவே! ஸர்வார்த்த சாதிகே!
சரண்யே திரியம்பகே தேவி!
நாராயணி நமோஸ்துதே!

எங்கெங்கு காணினும் அம்மா உன் வடிவமாய்!
என்னென்ன கேட்டாலும் அம்மா உன் திருநாமமாய்!
என்னென்ன செய்தாலும் அம்மா உன் பூஜையாய்!
எண்ணிட அருள்செய்து காத்திடுவாய் அம்மா!

Printed and Published by
Ph: 0477-2213550 (O) 2213521 (R)

ADMINISTRATOR,
CHAKKULATHUKAVU DEVASOM.
Chakkulathukavu Sree Bhagavathy Temple,
Chakkulathukavu, Neerettupuram P.O.,
Tiruvalla-689 571. Kerala, South India.

விலை : 12.00

Printed by : K. PALANI. Tel : 0481-2429090

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்குளத்தம்மாவே சரணம்

ஆண்களுக்கு சமமாய் பெண்கள் மதிக்கப்படும் அற்புத ஆலயம் சக்குளத்து காவு பகவதி கோவில். ஆண்களெல்லாம் விரதமிருந்து, மாலை போட்டுக் கொண்டு சபரிமலை செல்கிறார்கள். பெண்களுக்கு மட்டும் அப்படி விரதமிருந்து இருமுடி சுமந்து வந்து இறைவனை வழிபட ஆசை இருக்காதா? அவர்களுக்கும் ஒரு சபரிமலை இருக்கிறது. அதுதான் **'பெண்களின் சபரிமலை'** என்றழைக்கப்படும் நீரேற்றுபுரம் **சக்குளத்துகாவு பகவதி கோவில்.**

பம்பை ஆறும், மணிமலை ஆறும் மாலை மாதிரி இருபுறமும் ஓட, சக்குளத்தம்மா கோயில் இயற்கை வளம் சூழ்ந்த பிரதேசத்தின் நடுவில் பளிச்சென்று அமைந்திருக்கிறது. எட்டுக் கரங்களுடன் கருணை பொழியும் முகத்துடன் எழிலாக அருள்பாலிக்கிறாள் தேவி. அந்தச் சன்னதியே இனிய அதிர்வலைகளால் நிரம்பியிருக்கிறது. பார்க்கப் பார்க்க பரவசம் ஏற்படுகிறது. மெய்சிலிர்க்கிறது. இயற்கையோடு இணைந்திருக்கும் தேவியாதலால் கர்ப்பக் கிரகத்தில் மேற்கூரை கிடையாது.

தேவியை ஒரு விநாடி உற்றுப் பார்த்துவிட்டு, மனதுக்குள் என்ன வேண்டினாலும், அது அப்படியே நடக்கும். நடத்திருக்கிறது என்கிறார்கள் பக்தர்கள்.

குடிப்பழக்கம் உள்ளவர்கள் குடியை நிறுத்துவதற்கும், இந்த ஆலயம் ஒரு புகலிடமாக இருக்கிறது. ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் குடிகாரர்கள் தேவியின் வாளின் மேல், 'இனி குடிக்க மாட்டேன்' என்று சத்தியம் செய்கிறார்கள். அவர்களுக்கு வெற்றிலை, மிளகு, பிரசாதம் ஆகியவை வழங்கப்படுகின்றன. அப்படி சத்தியம் செய்பவர்கள், தேவிக்கு பயந்து மீண்டும் குடிப்பதில்லை இதை மாபெரும் சமூகப் புரட்சி என்று முன்னாள் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், பாராட்டி சிறப்பித்திருக்கிறார்.

'எங்கெல்லாம் பெண்கள் பூஜிக்கப்படுகிறார்களோ அங்கெல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவதைகள் திருப்தியடைகிறார்கள். எங்கெல்லாம் பெண்கள் ஆராதிக்கப்படுகிறார்களோ அங்கே ஐஸ்வர்யம் வியாபிக்கும்' என்று கூறுகின்றன வேதங்கள்.

பெண்கள் தெய்வமாக பூஜிக்கப்படும் ஒரே கோயில் இது மட்டும்தான்.

மகத்துவம் மிக்க இத்தலத்தில் சக்குளத்து அன்னையின் கடாட்சம் நிறைந்திருப்பதை, இந்த மண்ணில் காலடி வைத்ததுமே உணர்ந்து கொள்ள முடியும்.

நம் பாதம் இம் மண்ணில் பட்டதும், தேவியின் திருப்பாதம் நம்மைத் தேடிவந்து அருள்வதை இங்கு வந்து பரவசமாய் உணர்ந்தவர்கள் ஏராளம் ஏராளம்!

பகவதியின் ஆலயத்திற்கு ஒருமுறை வந்துவிட்டால் போதும். பிறகு பக்தர்கள் தன்னை அடிக்கடி தரிசிக்கும் பாக்யத்தைத் தானே தருகிறாள் அன்னை. சக்குளத்து தேவியை ஒருமுறை தேடிவரும் பக்தர்கள் அவள் கருணை மழையில் நனைகிறார்கள். கணக்கில்லா பக்தர்கள் அவளை குலதெய்வமாய் ஏற்றிருக்கிறார்கள்.

எங்கும், எந்த இடத்திலும், எப்போதும், எவரும் 'சக்குளத்து அம்மா' என்று மனமுருகிக் கூவி அழைத்தால் போதும்... உடனே ஓடிவருவாள். பக்தர்களைத் தேடிவந்து அருள்புரிவாள் தேவி. அழைத்தவுடன் ஓடிவரும் அன்னை இவள் என்பது அனுபவத்தில் கண்ட உண்மை.

ஏழை, பணக்காரர், ஜாதி, மதம் என எந்தப் பாகுபாடும் இன்றி அனைவரும் அன்னைக்கு சமமானவர்களே.

மாறாத துன்பத்தை மாற்றிடும் தேவி, தீராத நோயை தீர்த்து வைக்கும் அம்மா, குடி மற்றும் போதையால் வாழ்க்கைப் பாதை மாறியவர்கள் மனம் திருந்திவாழ நல்லவழி காட்டுபவள் சக்குளத்து காவில் அம்மா. வெள்ளிக்கிழமை விரதமிருப்போர் வாழ்வில் வளம் சேர்ப்பவள். தேவி பகவதியின் சரித்திரம் புனிதமானது மகிமையானது!

அனைவரும் வாருங்கள், சக்குளத்தம்மன் பாதம் பணிந்து அவள் அருள் பெறுங்கள்.

அம்மா பகவதி மீது முழு நம்பிக்கை வைப்பவர்கள், எல்லா நலனும் வளமும் பெறுவது நிச்சயம்..!

கே. பழனி

சங்கணாச்சேரி.

0481-2422678 (O), 2429090 (R)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முகவுரை

அற்புத மகாசக்தியுள்ள ஆதிபராசக்தி குடிகொண்டுள்ள இந்தக் கோவிலுக்கு எல்லா இன, மதத்தவரும் வரலாம் என்பது தனிச்சிறப்பு. தீண்டாமை முக்கியமாக இருந்த காலத்திலும் இந்தக் கோவிலில் ஜாதிக்கோ, மதத்திற்கோ முக்கியத்துவம் இருந்ததில்லை. தேவியின் திருப்பாதங்களில் நம்பிக்கை வைத்து, விரும்பி இந்தக் கோவிலுக்கு வருபவர்களிடையே ஜாதி, மதம் பார்ப்பது தேவிக்கு இஷ்டமில்லை என்பது பழைய காலம் முதல் வழக்கமாக உள்ளது. பிறரை நிந்தனை செய்பவர்கள், கெட்ட எண்ணத்துடன் அவமதிப்பவர்கள் போன்றவருக்கு, தேவி கடினமான தண்டனை கொடுத்த கதைகள் நிறைய இருக்கின்றன.

பக்திக்கு மாத்திரம்தான் சக்குளத்து தேவியின் சன்னதியில் இடம் உண்டு. எல்லா மக்களும் தேவிக்குப் பிரியமுள்ளவர்களும் சமமானவர்களும்தான். அதனால்தான் மத, இன வேறுபாடு இன்றி யாவரும் தரிசனம் செய்து பிரார்த்தனைகள், நேர்ச்சைகள் நடத்துகிறார்கள்.

குழந்தை பாக்யம், திருமண யோகம், இவை கிடைப்பதற்காகவும், வேலை கிடைப்பதற்கும், மது அருந்துதல், குடும்பத்தில் கலகங்கள், துர்குணங்கள், கெட்ட நடத்தைகள், ஒற்றுமை இல்லாமை, அன்பு, ஸ்நேகம் இல்லாமல் இருப்பது. கெட்ட சகவாசம் இவை மாறி ஐஸ்வர்யமும், சமாதானமும் ஏற்பட்டு மகிழ்ச்சியோடு வாழ்வதற்கும், ஒருபோதும் தரித்திரம் உண்டாகாமல் இருப்பதற்காகவும் சக்குளத்து அம்மனை வேண்டிக்கொண்டு வெள்ளிக்கிழமை விரதங்கள் கடைபிடித்து பக்தர்கள் பல மைல்களுக்கு அப்பாலிருந்தும் வந்து கொண்டிருக்கிறார்கள்.

தீர்க்க முடியாத, பில்லி, சூன்யம், ஏவல், செய்வினை, சத்ருதோஷங்களும் இந்தக் கோவிலில் பூஜா கர்மம் மூலமும், தேவி தரிசனத்தாலும் விரத மகிமையாலும் நிவர்த்தியாகிறது. தீராத வியாதியினால் வேதனைப்படுபவர்களும், மனோவியாதினால் வாழ்நாள் முழுவதும் நாசமாகிக் கொண்டிருப்பவர்களும் சக்குளத்தம்மாவின் அனுக்ரஹத்தால் அவை நீங்கி நிரந்தரமான நன்மை அனுபவிக்கிறார்கள். தேவியின் தரிசனம் புண்ணியத்தோடு மோட்சத்திற்கு வழிகாட்டுகின்றது.

பணமும், வியாபாரமும் நல்ல வேலையும் தேவியின் அனுக்ரஹத்தால் கிடைக்கப் பெறுகின்றது. சக்குளத்து தேவியின் மகிமையினால் பக்தர்களுக்கு சகல ஐஸ்வர்யமும் கிட்டி, ஆசைகள் நிறைவேறுகின்றன.

நோயுற்றவர்கள், கருணாமூர்த்தியும், பக்தவத்ஸலையும், சர்வாபீஷ்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நாயகியுமான தேவியின் அற்புத மகாசக்தியினால் சௌக்யமும், சந்தோஷமும் ஆயுள், ஆரோக்கியமும் பெற்றவர்களாகிறார்கள். பக்தர்களுக்கு பலவித வடிவங்களிலும், பலபாவத்திலும், நாமத்திலும் காட்சியளிக்கிறாள். எந்த நேரத்திலும், கடலின் நடுவிலும் எந்தக் காட்டிலும், எந்தவித ஆபத்திலும், பக்தியுடன் தியானம் செய்தால் உடனேயே ஜகதீஸ்வரி அருள்புரிந்து காக்கிறாள். கடவுளை நம்பாது, நிந்திக்கிறவர்களையும்கூட காப்பாற்றி என்றும் சுகம் நல்கி காப்பாற்றுகிறாள்.

கார்த்திகை மாதம், திருக்கார்த்திகையன்று பக்தைகள் தேவிக்குப் பொங்கலிட்டு பூஜிக்கிறார்கள். நினைத்த காரியம் நடைபெறுவதற்காக மார்கழி 1ம் தேதி முதல் 12ம் தேதி வரையிலான 12 நாள் நோன்பில் ஜாதிமத பேதமில்லாமல், ஆண்களும், பெண்களும் விரதம் அனுஷ்டிகிறார்கள். பலர், இருமுடிகட்டி விரதத்திற்கு வருதும் உண்டு.

வர்ணனைக்கு அப்பாற்பட்ட அற்புத மகிமை கொண்ட ஜகதம்பிகையின் திருப்பாதங்களில் அனைத்தையும் சமார்ப்பணமாக்குகிறார்கள்.

பிரம்மாதி தேவர்களாலும் வணங்கப்படுகிற சர்வேஸ்வரி சநாதனியான ஜகதாம்பிகை ஆயிரமாயிரம் சூரியப்ரகாஸமுள்ள முகத்தோடு இன்பத்தை நல்கி துன்பத்தை நீக்கியருளும் ஸர்வார்த்த சாதகியாக திகழ்கிறாள். ஸ்ரீ சக்குளத்துதேவி அனுதினமும் கூடுதலான சக்தியோடு பக்தர்களுக்கு அருள்புரிந்து நம்பிக்கை பெறச் செய்கிறாள். கஷ்டங்களோடு இந்தக் கோவிலுக்கு வரும் பக்தர்கள், நிரந்தரமான அமைதியும், நிம்மதியும் பெற்று மகிழ்வடைகிறார்கள். தேவியின் கருணை விவரிக்க இயலாததாய் அனுபவித்து அறிந்த பக்தர்களே உணரக் கூடியதாய் உள்ளது.

பிரம்மன், சிவன், விஷ்ணு, சந்திரன், வருணன், சூரியன், இந்திரன் முதலான எல்லா தேவாதிதேவர்களின் அருளும் ஒன்றாய்ச் சேர்ந்து கிடைக்கிற இந்தப் புனித தலத்தின் முன்பு நின்று வணங்கும்போது நம் துக்கங்கள் எல்லாம் மறந்துபோகும்.

சரஸ்வதியும், லக்ஷ்மியும் தேவியின் அம்சமே என்று நாம் புரிந்துகொள்ள முடிகிறது. அதர்மம் தலைதூக்கும் போது கைகளில் ஏந்தி நிற்கும் ஆயுதங்களோடு சம்ஹார ரூபிணியாய் காணப்படுகிறாள். கோர ரூபிணியாய் முண்டாசுரனையும், சும்பன் நிசும்பனையும் சம்ஹாரம் செய்தாள்.

எங்கு நிறைந்திருக்கும் தேவியை துதிப்பதைவிட வேறு எதுவும் நமக்கு முக்கியமில்லை, என்பதே உண்மை. அன்று அருஉருவாய் பூமியில் அவதரித்து நூறு கண்கள் கொண்டு கருணையுடன் மகரிஷிகளை நோக்கிய சர்வேஸ்வரியான அம்பிகைதான், இந்தக் கோவிலில் குடிகொண்டிருக்கிறாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியை நினைப்பதை விட வேறு பாக்யம் இந்தப் பிறவியிலில்லை என்பது சந்தேகமே இல்லாத ஒன்று.

பக்தி நம்பிக்கையுடன் பின்பற்றப்படவேண்டும். பகவான், உத்தவர்க்கு அருளிய உபதேசத்தை பக்தி மார்க்கத்தில் நாம் கடைபிடிக்க வேண்டும்.

"கதம் வினா ரோமஹர்ஷம்

த்ரவதா சேவதா விதா, வினா நந்தாஸ்ருகலயா

ஸுத்தேஸ் பக்தயா விநாசாயா"

பகவானின் கதைகளைக் கேட்கும்போது நமக்குப் பரவசம் ஏற்படவேண்டும். மனது ஒரு நிலைப்பட்டு அமைதி பெறவேண்டும். பகவானின் திருவிளையாடலை நினைத்து சந்தோஷத்தில் கண்களில் நீர் கசியவேண்டும். இவையில்லாமல் எப்படி சுத்தமான பக்தி உண்டாகும்?

நாம் நினைத்துப் பார்க்க வேண்டிய ஒரு கேள்வி இது. நம்மிடையே பலரும் தேவைக்கேற்ப ஒரு பட்டியலுடன் கோவிலுக்குப் போகிறோம். தேவையானதைக் கேட்டுபெறவே ஆலயத்திற்குப் போகிறோம். நம் தேவையைத் தரக்கூடிய சக்தி நிச்சயமாய் தேவிக்கு உண்டு. ஆனால், இப்படி அவசியத்தின் அடிப்படையில் தேவியை நினைத்தால் அது பேராசையல்லவா? நம் தேவை உடனே பூர்த்தியாகாவிட்டால் நமக்கு சந்தேகம் ஏற்படுகிறது.

இப்படியா பக்தி செலுத்துவது? திறந்த மனதுடனும், பூரணபக்தியுடனும் தேவியை மனம் திறந்து கூப்பிடுங்கள். அதுதான் நமது தர்மம், நம் தேவை தேவிக்கு தெரியாதா? நம்முடைய எல்லாத் தேவைகளும், ஆசைகளும் நிறைவேற தேவி பார்த்துக் கொள்வாள் என்ற நம்பிக்கை நமக்கு மிகவும் முக்கியம். பகவத்கீதையில் அதை நினைவுபடுத்தும் ஒரு ஸ்லோகம் உண்டு.

"அனபேக்ஷ, சுசில்தக்ஷா
உதாசீனோ கதாவ்ருதா...'

விருப்பு வெறுப்பு இல்லாதவனாக இருக்க வேண்டும், பற்று அற்றவனும், வருத்தத்தை தூர விலக்குபவனுமாக இருக்க வேண்டும்.

ஆசைகளே கூடாது என்பது நடைமுறையில் இல்லாமல் இருக்கலாம். அதுவும், நம்போன்ற சாதாரணமானவர்களுக்கு. ஆனால், தேவையின் பட்டியல் நீண்டதாகி தேவியிடம் நம்முடைய பக்தி தாழ்ந்து போகாமலிருக்க நாம் சிரத்தையுடன் இருக்க வேண்டும். நேரம் கிடைக்கும்போதெல்லாம் கோவிலுக்குச் சென்று தேவியின் தரிசிக்கவும், இயன்றபோதெல்லாம் வெட்கப்படாமல் தேவியின் திருநாமத்தை வாய்விட்டுச் சொல்லவும் வேண்டும்.

அவசியங்கள் இல்லாதபோது நாம் சொல்லுகின்ற தேவியின் நாமம்தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அவசியப்படும்போது நம்மை காப்பாற்றுகிறது என்பதை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்.

தேவர்களுடைய எதிரியான மகிஷசுரனை அழித்து, தேவர்களை தொல்லையிலிருந்து காப்பாற்றியவள் தேவியல்லவா! அவளது சூலம் சுழன்றால் நாலு திக்குகளிலிருந்தும் வரும் ஆபத்துகள் ஓடி ஒளியும்.

சக்திசொரூபிணியான அன்னைக்கு நம்மை காப்பாற்றுவது மிகவும் சுலபமானது அல்லவா! தன் பக்தர்களை காப்பாற்றுவது அன்னைக்கு மிகவும் சந்தோஷமானதே.

"இத்தம் யதா யதா பாத,
ஜகதோ ஸு பவிஷ்யதி
ததா ததாவதீர்யாஹம்
கமிஷ்யாம்யரீ ஸம்க்ஷயம்"

'உலகில் துன்பமும் துயரமும் உண்டாகும்போதெல்லாம் நான் அவதரித்து சத்ரு சம்ஹாரம் செய்கிறேன்' என்பது தேவியின் வாக்கு.

பூரணமான பக்தியோடும் நிறைந்த மனதோடும் எப்பொழும் தேவியை தியானியுங்கள். எல்லா வரமும் தரும் அம்பிகையான சக்குளத்தம்மா கவலைகளிலிருந்தும், எதிரிகளின் உபாதையிலிருந்தும் காத்திடுவாள். அமைதியும் சமாதானமும், ஐஸ்வரியமும் வாரி, வாரி வழங்கி நம் வாழ்நாளை அர்த்தபூர்வமாக்குவாள். தேவி சரணம்!

ஆதிபராசக்தியே நம:

சக்குளத்துகாவிலம்மா!

சம்சார சாகரத்தில் புயலில், அகப்பட்ட கப்பல் போல் அலையும் நமக்கு மன அமைதியல்லவா அவசியம்! அதற்காக உள்ள ஒரே வழி, கடவுள் அனுக்ரஹம் மட்டும்தான்.

பக்தியினால் மட்டுமே அது சாத்தியமாகிறது! சுகத்திலும், துக்கத்திலும், நாம் உறுதியோடு தேவியின் கால்களைப் பிடிக்க வேண்டும். களங்கமில்லாத பக்தியினால் மட்டுமே மோட்சத்தைப் பெற முடியும். ஜாதி, மத பேதமில்லாமல் எல்லா வீடுகளிலும் காலையிலும், மாலையிலும், குத்துவிளக்கேற்றி, நீரும், பூக்களும் சமர்ப்பித்து கொஞ்ச நேரமாவது இறைவழிபாடு செய்யவும், மஹாலக்ஷ்மியின் வடிவமான தேவியை துதிக்கவும், ஐஸ்வரியமும், சந்தோஷமும், சமாதானமும், மன அமைதியும் உண்டாகும். தரித்ரமும் துக்கமும் உண்டாகாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒன்றேயான பராசக்தி, உலக நன்மைக்காகவும் பக்தர்களைக் காப்பதற்காகவும் அவர்களுடைய விருப்பங்களை நிறைவேற்றுவதற்காகவும் கோடானுகோடி வடிவங்களிலும், நாமங்களிலும், அவதரித்து பிரபஞ்சத்தையும், பக்தர்களையும் காத்து ரட்சிக்கிறாள்.

விஷயங்களுக்கும் விசாரங்களுக்கும் அப்பாற்பட்ட பராசக்தியை, ஈஸ்வரனை சங்கல்பம் செய்து வைப்பவை கோவில்கள். தூணிலும், துரும்பிலும், கல்லிலும், புல்லிலும் தெய்வத்தை ஆராதனை செய்யலாம். தரிசிக்கலாம். தேவியில்லாத ஒரு பொருளும் இல்லை.

இந்தக் கலியுகத்தில் பிறந்திருக்கும் நாம், மிக பாக்கியசாலிகள். அதனால், எல்லோரும் இயன்ற அளவு எல்லாக் கோவில்களுக்கும் போகவேண்டும். தெய்வ தரிசனம் செய்ய வேண்டும். நற்பேறு பெற பிரார்த்தனை செய்ய வேண்டும். கோவிலுக்குப் போகாதே என்று யார் தடுக்கிறார்களோ அவர்கள் மூட பக்தியினால் அஞ்ஞானக் கடலில் மூழ்கி மாயாபந்தத்தில் சிக்கி தண்டனை அனுபவிக்கிறார்கள்.

இறைவனும் இறைவியும் ஒன்றுதான், இரண்டல்ல. எல்லாக் கோவில்களிலும், நாமஜபம் மிக சப்தத்துடன் உச்சரியுங்கள். சுகம் வரும்போது தெய்வத்தை மறப்பதும் துக்கத்தில் நிந்தனை செய்வதும் கூடாது. தேவி நிச்சயம் தோன்றுவாள். பராசக்தி, சக்குளத்து காவிலம்மா, அனைவருக்கும் அனுக்ரஹம் செய்வாள்!

ஆலய வரலாறு

இந்த பிரபஞ்சம் உற்பத்தியானதற்கும், நிலைத்து நிற்பதற்கும் காரணமாக இருப்பது ஓர் அற்புத சக்தியே. அந்த அற்புத சக்தியாக இருப்பவர் ஈஸ்வரன் ஒருவனே. அவரே சர்வ வியாபியானவர். சர்வசக்தியுள்ளவர் என்பதை எல்லோரும் நம்புகிறார்கள். பஞ்சேந்திரியங்களுக்கு அப்பாற்பட்ட ஈஸ்வரனுடைய சக்தியை தெளிவுபடுத்துவதும், விரிவாகச் சொல்வதும் இயலாத காரியம். ஈஸ்வரன் (ஈஸ்வரி) உடலுக்கும், மனதுக்கும், புத்திக்கும், விஷய விசாரங்களுக்கும் அப்பாற்பட்டவர். நித்யமானவர், ஏகமானவர், பரமசாந்தமுள்ளவர். விஸ்வ ரூபிணியான உன் உருவம் நினைத்துப் பார்க்கவோ, தியானம் செய்யவோ பிரமிப்பூட்டுவது.

இந்தியாவில் மற்ற இடங்களை ஒப்பிடும்போது கேரளத்தில் உள்ள பல கோவில்களுக்கு மிக புராதனப் பெருமை உண்டு. அப்படிப்பட்ட கோவில்களில் ஒன்றுதான் நீரேற்றுபுரம் சக்குளத்துகாவு பகவதி க்ஷேத்ரம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செம்பகசேரி ராஜாவின் காலம் முதல், புகழும் பெருமையும் பெற்ற பிரசித்தமான பகுதி, ஆலப்புழை ஜில்லாவில் உள்ள தலைவடி என்ற ஊர். இங்குதான் மிகவும் பிரசித்தமான புண்யதீர்த்தமுடைய நீரேற்றுபுரமும், சக்குளத்து தேவி கோவிலும் இருக்கிறது. 'பத்தனம்திட்டை' ஆலப்புழை ஜில்லாவில் முடிவில்தான் இது இருக்கிறது. ஐஸ்வர்ய தேவதையால் கனிவுடன் அனுக்ரஹம் செய்யப்பட்ட இந்த கிராமத்தின் அழகுக்குக் காரணம், பரந்த நெல்வயல்களும், சாந்தமாக ஓடும் நதிகளும்தான்.

மிகவும் பிரபலமான நதிகளான பம்பை ஆறும் மணிமலை ஆறும் இந்தக் கோவிலின் இரண்டுபுறமும் சேர்ந்து அமைதியுடன் ஓடி சக்குளத்து அம்மாவின் பாதாரவிந்தத்தைத் தழுவி மிகப் புண்ணியமான நதிகளாக மாறுகின்றன. ஆதிபராசக்தியான வனதுர்க்கை, கலியுக வரதாயிணியான ஸ்ரீ சக்குளத்து தேவியாக இங்கு குடிகொண்டிருக்கிறாள்.

திருவல்லா இடத்துவா பாதையில், நீரேற்றுபுத்தில் சக்குளத்து காவு கோவில் உள்ளது. பல மைல் தூரம் பரந்து கிடக்கும் வயல்களின் கரையில், பழங்கால வாஸ்து சாஸ்திரங்களின் மகுடமான கோவிலைக் காணலாம். திருக்கோவிலின் கர்ப்ப கிரஹத்தில் மேற்கூரை இல்லை. இந்த தேவியின் திருநாமத்தைச் சொல்ல ஆரம்பிக்கும் போதே ஓடி வருபவள் என்று உணர்ந்தவர்கள் சொல்கிறார்கள்.

இன்றைய சக்குளத்து காவின் பழைய நிலைமை, மிக பயங்கரமானது. இந்தக் கோவில் இருக்குமிடம் கொடிய பாம்புகள் நிறைந்த வனமாக இருந்ததாம். பெரிய பெரிய மரங்களும் கொடிகளும் நிறைந்த இந்தக் காட்டில் சூரிய ஒளி கூட நுழைந்ததில்லை என்கிறார்கள். நடுப்பகலில் கூட காது அதிர்ந்து போகும் சப்தங்களும், வவ்வால்களின் சிறகொலியும் இப்பிரதேசத்தை பயங்கரமானதாக்கியதால், இங்கு எவரும் வந்ததில்லை.

ஒருநாள், வேடன் ஒருவன், தன் மனைவி குழந்தைகளுடன் விறகு வெட்டுவதற்காக இந்த பயங்கரமான காட்டிற்கு வந்தான். வழியில், வேடனுக்கு எதிரே ஒரு பாம்பு சீறி வந்தது. பயந்துபோன அவன், தன் கையிலிருந்த கோடரியால் வேகமாக வெட்டினான். ரத்தம் சிந்தி பாம்பு இறந்து விடும் என்ற அவன் எண்ணம் பொய்யானது. பாம்பு தப்பித்து காட்டுக்குள் ஓடி மறைந்தது.

பாம்பு தப்பி ஓடியதால் வேடன் பயந்து போனான். அடிபட்ட பாம்பை கொல்லாமல்விட்ட ஆபத்தை நினைத்து அவன் வருந்தினான். அடிபட்ட பாம்பு தன்னைக் கொத்தி கொன்று விடுமென்று பயந்தான். மரணத்தை எதிர்பார்த்தவன், பயமிகுதியினால் பாம்பைக் கண்டுபிடித்து கொல்ல தீர்மானித்தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காடு முழுவதும் பாம்பைத் தேடியவன், கடைசியில் காட்டின் நடுவில் ஒரு குளமும் அதன் கரையில் ஒரு கரையான் புற்றும் இருப்பதைப் பார்த்தான். புற்றின் மேல், அவன் வெட்டிய பாம்பு இருப்பதையும் பார்த்தான். பயமும், பழிவாங்கும் எண்ணமும் மேலோங்க, பாம்பை வெட்டினான். ஒரு முறையல்ல, இரண்டு முறையல்ல, பல முறை வெட்டினான். ஆனால், ஒரு வெட்டுகூட பாம்பின் மேல் படவில்லை. ரத்தமும் வரவில்லை. வேடன் வேகமாக கோடரியைச் சுழற்ற, திடீரென்று அங்கிருந்து மறைந்தது பாம்பு. கோடரி புற்றின் மீது பட்டு உடைந்தது. அதிர்ந்து போனான் வேடன். அடுத்த நிமிடம், உடைந்த புற்றிலிருந்து வெள்ளமாய் நீர்வரத் தொடங்கியது. இதற்கிடையே வேடனைத் தேடி அவன் மனைவியும், மகனும் வந்தார்கள். அவர்களும் திடுக்கிட்டு நின்றார்கள்.

திடீரென்று ஒரு முனிவர் தோன்றினார். 'குழந்தைகளே! பயப்படாதீர்கள்! பாலும், தேனும் சேர்ந்தது போல் நிறம் வரும்போது, இப்படி நீர்வழிவது நிற்கும். இந்தப் புற்றில் பராசக்தி குடிகொண்டிருக்கிறாள். அவள் சயனித்திருந்த தண்ணீர்தான் ஓடிக்கொண்டிருக்கிறது. இந்தப் புற்றை உடைத்துப் பார்த்தால் அருஉருவான விக்ரகம் ஒன்று தென்படும். அதனை, வனதுர்க்கை என்று பெயரிட்டு பிரதிஷ்டை செய்து வணங்கினால், உங்களுக்கும் இந்த நாட்டுக்கும் நன்மை உண்டாகும்" என்றார்.

பிறகு அவரே புற்றை உடைத்து, சிலையை வெளியில் எடுத்து ஸ்தாபித்தார். வேடனும், மனைவிமக்களும் விழுந்து வணங்கினார்கள். அப்போது முனிவர் மறைந்தார். வேடன் உடனேயே பூக்களும், மாலைகளும் கொண்டுவந்து அலங்கரித்தான், துதித்தான். அன்றிரவு, வேடனின் கனவில் நாரதர் தோன்றினார். 'முனிவர் உருவில் வந்து தேவியின் விக்ரகத்தை பிரதிஷ்டை செய்தது நான் தான்' என்றார்.

பொழுது புலர்ந்தது. தேவியின் விக்ரத்தைப் பற்றி தெரிந்துகொண்டு பலர் வர ஆரம்பித்தார்கள். தொடர்ந்து தேவிக்கு பிரார்த்தனைகளும் நேர்ச்சைகளும் செய்யத் தொடங்கினர். வேடனும், அவன் குடும்பமும் சிறிது காலம் அங்கேயே இருந்து பூஜை செய்து வந்தார்கள். கரையான் புற்றிலிருந்து சுயம்புவாய்த் தோன்றி நாரத மகரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட விக்ரஹமே இப்பொழுதும் சக்குளத்து அம்மன் கோவிலின் மூலஸ்தானத்தில் காட்சி தருகிறது.

காலம் ஓடியது. சக்குளத்து காவு, முக்கிய வழிபாட்டுத் தலமாயிற்று. பூஜை, புனஸ்காரங்களுக்கு உரிய நிபந்தனைகளும் வந்தது. இன்றைய 'பட்டமனை' வீட்டு குடும்பத்தார், குளத்தை உருவாக்கி, கோவில் கட்டினார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3000 ஆண்டுகளுக்கு முன்பு நாரத முனிவரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட, சிவ ஆகமப்படி உள்ள விக்ரகத்தை வேத சாஸ்திரபடி கோவிலில் பிரதிஷ்டை செய்தார்கள்.

பட்டமனை குடும்பத்தார்களுள் முக்கிய பூஜாரியான தாமோதரன் நம்பூதிரியின் சிறுவயது அனுபவம், சக்குளத்து அம்மாவின் கருணையைப் பிரதிபலிக்கத்தக்கது.

முன்பெல்லாம், சில நாட்களில் 'திரளி நைவேத்யம் செய்வார்கள். அடையும், பழமும் உள்ள முக்கியமான நைவேத்யம் அது. குழந்தையாயிருந்த தாமோதரன் நம்பூதிரி, தன் அப்பாவிடம் தினமும் நைவேத்யம் கேட்பார். சில நாட்கள் அடையும் பழமும் தரும் அவர், அப்படி இல்லாத நாட்களில் 'உள்ளே இருக்கும் அம்மாவிடம் கேள்' என்பார். உள்ளே இருக்கும் அம்மாதான் தனக்குப் பிரசாதம் தருகிறாள் என்று நம்பினார் தாமோதரன் நம்பூதிரி.

எப்பொழுதும் போல் ஒருநாள், குழந்தை கோவிலுக்கு வந்தபோது அப்பா பிரம்மஸ்ரீ நீலகண்டன் நம்பூதிரி வெளியில் சில பேருடன் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டார். அன்றும் அப்பாவிடம் அடையும், பழமும் கேட்டார். 'உள்ளே இருக்கும் அம்மாவிடம் கேள்' என்று சொன்னார் தந்தை. குழந்தையான தாமோதரன் நம்பூதிரி, கர்ப்பகிரகத்தின் மேல் ஏறிநின்று, 'அம்மா பழம் தா' என்று இரண்டு மூன்றுமுறை கேட்டார். சிறிது நேரத்தில் உள்ளே இருந்து பதில் வந்தது. "குழந்தாய்! நீ வேண்டிய பழம் இப்போது கிடைக்கும்" அந்த அசரீரி வார்த்தைகளை, அவர் தந்தையும் பிற பக்தர்களும் கூட கேட்டார்கள்.

சில நிமிடங்களில், 'திரளி' நைவேத்யத்துகான பொருட்களுடன் இரண்டு மூன்று பேர் கோவிலுக்கு வந்தார்கள். குழந்தைக்கு மிக சந்தோஷம். தேவையான பழங்களும் கிடைத்தது. தேவிக்கு குழந்தைகள் மீதுள்ள அன்பு, நிதர்சனமாயிற்று. காணாமற்போன குழந்தைகளை திரும்ப பெறவும், பாலாரிஷ்டம் மாறிடவும் மகப்பேறு உண்டாவதற்கும் பல பெற்றோர்கள் வேண்டுதல் செய்வது பழக்கத்தில் வந்தது.

குழந்தைக்கு புத்தி, சிரத்தை உண்டாவதற்கும் பிரார்த்தனை செய்கிறார்கள். கூப்பிட்டவுடன் வரும் தேவி என்கிறார்கள்.

சக்குளத்தாம்மாவின் மகிமையால் அவள் ஆலயத்தின் பக்கத்திலிருக்கும் இடங்களுக்கும் பெருமை சேர்ந்தது. காட்டின் நடுவிலிருக்கும் குளத்தின் தண்ணீர் சர்க்கரை போல் இனித்தது. அதனால் சர்க்கரைக்குளம் என்று பெயர் வைத்தார்கள். சர்க்கரைக்குளம் நாளடைவில் சக்குளம் ஆகியது. கரையான் புற்றிலிருந்த விக்ரகத்தோடு வந்துகொண்டிருந்த ஊற்று தண்ணீர் போகிற இடத்துக்கு 'நீரேற்றுபுரம்' என்ற பெயர் வந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இத்தலத்தில் புனருத்தாரணம், 1981ல் நடத்தினர். அப்போது, எட்டுக் கைகளுடன் கூடிய வனதுர்க்கையின் விக்ரகத்துடன் சேர்த்து பிரதிஷ்டை செய்திருக்கிறார்கள், சிவன், ஐயப்பன், விஷ்ணு, கணபதி, முருகன், யக்ஷி, நாகதேவதைகள், வனதேவதைகள் இப்படி உபதேவதைகளின் பிரதிஷ்டையும் நடத்தி இருக்கிறார்கள்.

சக்குளத்தம்மாவின் புராண வரலாறு

சும்பன், நிசும்பன் என்ற அரக்கர்களோடு தொடர்புடையது தேவியின் வரலாறு. பிரம்மாவிடம் பெற்ற வரத்தால் நிகரற்ற பலத்தோடு வாழ்ந்து கொண்டிருந்தனர், சும்பர், நிசும்பர். நிகரற்ற சக்தி வாய்ந்த ஒரு பெண்ணின் மூலமே தங்களுக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்ற வரம் பெற்றிருந்தனர். அசுர சாம்ராஜ்யத்தின், சக்தி வாய்ந்த அரசர்களாக வாழ்ந்து வந்தார்கள். தேவாசுர யுத்தத்தில் தோல்வி அடைந்து பாதாளத்தில் ஒளிந்து வாழ்ந்த எல்லா அசுரர்களையும் வலிமைமிக்கவர்களாக்கினார்கள். அதிவீரமிக்க சண்டமுண்ட சகோதர்கள் கூட இவர்களை வணங்கினார்கள். இரக்தபீஜன், அவர்களுடைய சேனாபதியானான். இரக்தபீஜனுடைய ஒவ்வொரு துளி ரத்தத்திலிருந்தும் அவனைப்போல ஒருவன் உற்பத்தியாவான் என்பதால், தேவாசுர யுத்தத்திலும் இவர்களே வென்றனர்.

இந்திராதி தேவர்கள், கின்னரர், கிம்புருடர், கந்தர்வர்கள் எல்லோரும் அபயம் தேடி வனாந்திரங்களுக்கு வந்தார்கள். மிகப் பரிதாபகரமான இந்த நிலைமை கண்டு நாரதர், தேவர்களின் நிலைமையை தன் பிதாவான பிரம்மாவிடம் தெரியப்படுத்தினார். உயர்வும், தாழ்வும் உலகத்தின் நியதி என்பதை பிரம்மா, நாரதரிடம் சுட்டிக்காட்டினார். "இந்திராதிகளை ஆபத்திலிருந்து காப்பாற்ற, பராசக்தியால் மட்டுமே முடியும்" என்றார்.

தேவர்கள் இமயமலையடிவாரம் வந்து பராசக்தியை வழிபட்டனர். அவர்கள் வேண்டுகோளை ஏற்று காட்சியளித்த பார்வதி தேவி, தேவர்களுக்கு சக்தியும், சரணமும் தருவதாக வாக்களிக்கிறாள். அப்பொழுது தேவியுடைய சரீரத்திலிருந்து மிகப்ரகாசமுள்ள ஓர் ஒளி தோன்றி கார்மேகவண்ணமுள்ள தேவியாக மாறுகிறது. அவளே பத்ரகாளி.

காட்டில் தங்க ஊஞ்சலில் தனியாக ஆடிக்கொண்டிருந்த தேவியை, சண்டமுண்டர் பார்த்தார்கள். அற்புதமான அந்த அழகு அவர்களை வசீகரித்தது. சும்ப நிசும்பர்களிடம் சென்று அவளழகைப் புகழ்ந்து கூறினர். அதைக் கேட்டு மதிமறந்த சும்பன் தன் மந்திரியான சுக்ரீவனை திருமண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆலோசனை நடத்துவதற்காக தேவியிடம் அனுப்பினான். பலமான யுத்தம் செய்து யுத்தத்தில் 'தன்னை தோற்கடிக்கக் கூடிய வீரனையே திருமணம் செய்து கொள்வேன் என்று சொல்லி அனுப்பினாள், தேவி. யுத்தம் செய்வதற்காக முதலில் தும்ர லோசனனை அனுப்பினான், சண்டமுண்டரையும் அனுப்பினான். அவர்களைக் கண்டு, கோபக்னியால் ரத்தநிற கண்களும், நீண்ட நாக்கும் கொண்டு அவர்களை எதிர்கொண்டு அம்புகளையும், யானைகளையும் அசுரப்படைகளையும் வாரி விழுங்கி, ரணபூமியில் நிறைந்து நின்றாள், அம்பிகை சண்டமுண்டரை வதைத்த தேவிக்கு சண்டிகை, சாமுண்டி என்ற பெயர் வந்தது.

பிறகு ரக்தபீஜனுடன் யுத்தம் செய்து அவனுடைய ஒவ்வொரு துளி ரத்தத்திலும் உண்டான ரக்தபீஜர்களை வாரிவாரி விழுங்கினாள். கோபத்துடன் எதிர்ப்பட்ட சும்பனின் கழுத்தைக் கொய்து அழித்தாள். தம்பி இறந்த செய்தி கேட்ட நிசும்பன், பல ஆயுதங்கள் தரித்து, பதினாயிரம் கைகளோடு யுத்த பூமிக்கு வந்தான்.

சண்டிகா அவனுடைய் பதினாயிரம் கைகளையும் வெட்டி எறிந்தாள். பிறகு திரிசூலத்தால் அவனை வதைத்து, பத்ரகாளியினுள் ஐக்கியமாகி பின்னர் துர்க்கையோடு இணைந்தாள்.

இழந்தவற்றை மீண்டும் பெற்ற தேவர்கள், மனமுருகி தேவியைப் பிரார்தித்தார்கள். அங்கு வந்த நாரதமுனிவர், சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹார செயல்களுக்கு சக்தியும், சாந்தியுமாய் தேவி பிரபஞ்சம் எங்கும் நிறைந்து நிற்பாள் என அறிவுறித்தினார். சர்வேஸ்வரியுடைய அம்சமாகத் தோன்றிய தேவியருள் ஒருத்திதான் நீரேற்றுபுரம் சக்குளத்துகாவில் குடிகொண்டிருக்கும் துர்க்கா பகவதி.

அழைத்தவுடன் ஓடிவரும் அன்னை

எல்லா இன, மதகாரர்களுக்கும் அபயம் தருபவளாக, கோரிக்கை கேட்டு அருள் புரிபவளாக அம்மா காட்சி தருகிறாள். அளவிட முடியாத சூர்யகிரணங்களாய், நூறு நூறு தாமரை இதழ்களாய் தேவியின் கிரண அருட்காட்சி நம்மை உணர வைக்கிறது. இருளை நீக்கும் அக்னி ஜ்வாலையாக, அஞ்ஞானத்தை நீக்குகிறது. தேவியின் நாமஜபத்தால் எத்தனை எத்தனையோ அற்புதங்கள் நடக்கின்றன. தேவியின் தரிசனமே எல்லா துக்கங்களையும் போக்குகிறது.

குழந்தைப்பேறின்றி, பல முயற்சிகள் செய்தும் பலனின்றிப் போன தம்பதிகளுக்கு, சந்தானலஷ்மியாய் அருள்புரிந்து குழந்தை பாக்யம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொடுக்கிறாள். தீரா வியாதிகள் தீருவதோடு மனநிலை சரியில்லாதவரும், குருடரும், செவிடரும் தேவியின் அற்புத சக்தியால் சுகமடைகிறார்கள். பூத ப்ரேத பிசாசுகளால் பாதிக்கப்பட்டவர்கள், நஷ்டமடைந்தவர்கள், கரை காணாத துக்கக்கடலில் முழ்கியவர்கள் இவர்களையெல்லாம் காப்பாற்றுகிறாள் தேவி.

கெட்ட பழக்கமுள்ளவர்களும் போதைக்கு அடிமைப்பட்டவர்களும் சந்நதியில் வந்து தரிசனம் செய்கிறார்கள்.

தேவியின் ஆயுதத்தை (வாள்) தொட்டு சத்தியம் செய்யும் இவர்களிடமிருந்து கெட்டபழக்கம் ஓடி மறைந்து விடுகிறது. ஆயுதம் தொட்டு சத்தியம் செய்யும் பழக்கம் இந்தக் கோவிலில் மட்டுமே உண்டு. இந்த வழிபாடு, எல்லா மலையாள மாதம் முதல் வெள்ளிக்கிழமையன்றும் நடக்கிறது. ஒவ்வொரு குடும்பத்திலும் ஐஸ்வர்யமும், சந்தோஷமும் வருவதற்கு தேவியின் தரிசனமும், நாம ஜபமும் மாத்திரம் போதும் என்று, அனுபவித்து உணர்ந்த அநேகம் பக்தர்கள், மீண்டும், மீண்டும் கோவிலுக்கு வருகிறார்கள். திருமணம் கைகூடாதவர்கள், தேவிக்கு விரதமிருந்து மாங்கல்ய பாக்யம் அடைந்து மகிழ்கிறார்கள்.

பெண்களிடமும், குழந்தைகளிடமும் தேவிக்கு மிகுந்த அன்பும் கருணையும் உண்டு என்பதற்கு பல உதாரணங்கள் இருக்கின்றன. பெண்கள், மனம் நொந்து போய்க் கூப்பிட்டால், உடனே ஓடிவந்து அனுக்ரகிக்கிறாள் தேவி.

எண்ணிலடங்காத வீடுகளில் தேவியின் படத்தை வைத்து பூஜிக்கிறார்கள். திருநாமம் ஜபிக்கிறார்கள். கோவிலில் சொல்லும்படி வழிபாடுகள் செய்வது கல்விக்கும், வேலை வாய்ப்புகளுக்கும் மிகவும் பலன் தருகிறது என்று நம்புகிறார்கள்.

மிருக சம்பந்தமான தோஷங்கள் நீக்குவதற்கு கோவிலில் மண்ணினால் செய்த மிருகங்கள் இருக்குமிடத்தில், உருவம் கொண்டு வைத்தால்போதும். தேவியின் நாமத்தை நமபிக்கையோடு வீட்டில் எழுதி வைத்தால், பூத ப்ரேத பிசாசுகள் துர்தேவதைகள் நெருங்குவதில்லை. தேவியின் நாமஜபம் துக்கங்களைப் போக்கி அஷ்ட ஐஸ்வர்யமும் தருகிறது.

எப்பொழுதும் தேவியை தியானம் செய்யுங்கள். தேவியின் உருவத்தை மண்டபத்தில் ஆவாஹனம் செய்யுங்கள். நாமஜபங்களால் துதித்து வாழ்வில் வளம் காணப்பெறலாம்.

களங்கமில்லாத பக்தி, அன்பு நிறைந்த பக்தி எல்லோருக்கும் உண்டாகட்டும். கூப்பிட்டதும் ஓடிவருவாள் சக்குளத்து தேவி. அழைத்ததும் வரும் தேவி, அனைவரையும் காக்கட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மகத்துவம் வாய்ந்த மண்

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் இத்தலத்தில் நிகழ்ந்த சம்பவம், சக்குளத்து தேவி அமைந்துள்ள இந்த மண்ணின் மகிமையை விளக்குகிறது.

புற்றிலே மறைந்து கிடந்த தேவியின் லிங்க ரூப விக்ரகம், பாம்பைத் தேடி வந்த வேடனால் கண்டுபிடிக்கப்பட்டது. நாரதரால் அந்த மூல விக்ரகம் ஸ்தாபிக்கப்பட்டது.

அன்று வேடனாகவும் வேடத்தியாகவும் வந்து, இவ்வுலகம் பயன்பெற தேவியின் திருவுருவை தேடியெடுத்தவர்கள், சிவனும் பார்வதியுமே என்று கூறப்படுகிறது. அவர்கள் மகனாக அவதரித்தவர் விநாயகன்.

இத்தலம் மகிமை மிக்கது என்பதாலேயே தேவியின் விக்ரகத்தை இங்கே நிறுவினார்கள்.

தெய்வ அனுக்ரகமும் முனிவர்கள் பரம்பரையின் அனுக்கிரகமும் பரிபூரண மாக நிறைந்த சுற்றுப்புறம். இதன் சுற்றுப்புறத்திலுள்ள ஒவ்வொரு மண் துகளும் அம்மனின் கடாட்சம் நிரம்பியது என்பதால், மாணிக்கத்தின் மதிப்புடையது, முற்காலத்தில், பல்வேறு இடங்களில் திருப்பணி சமயத்தில் இங்கிருந்து ஒரு கைப்பிடி மண் கொண்டு போய்க் கொண்டிருந்தார்கள் பல ஸ்தாபனங்களுக்கும் தேவியின் பிரசாதமாய் ஐஸ்வர்யத்திற்காக மண்ணைக் கொண்டுபோய் கொண்டிருந்தார்கள். தேவியின் சக்தி நிறைந்த கோவிலின் மண் என்றும் குறையாத மகத்துவம் மிக்கதாய் விளங்குகிறது.

சக்குளத்து காவில் யக்ஷி

சக்குளத்து காவில் யக்ஷியின் கதை பிரபலமானது. கோவிலின் கிழக்குப்புறம் ஆலமரம் ஒன்றும், பனைமரம் ஒன்றும் இருந்தன. பனையில் பயங்கரமான யக்ஷி இருந்தது. அதன் [illegible] காசங்களும் பலத்த சத்தங்களும் அனைவரையும் நடுங்க வைத்தது. மக்கள், அதை நினைத்து, மிகவும் பயந்தார்கள்.

ஆற்றில் குளிப்பதற்காக வருபவர்களையும், யாத்திரிகர்களையும் ரத்தம் குடிக்கும் யக்ஷி கொன்று குவித்தது. தவவலிமை பெற்ற யோகிகள், யக்ஷியை கட்டுபடுத்துவதற்கு வந்தார்கள். ஆனாலும் பலனில்லை. பெரிய பெரிய மாந்திரீகர்கள் கூட யக்ஷியிடம் தோற்று, யக்ஷியின் உணவானார்கள். நரபலி வாங்கும் யக்ஷிக்கு முடிவை உண்டாக்க, பட்டமனை வீட்டின் சிறுபெண்தான் காரணமானாள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நினைவு தெரிந்த நாள் முதல் சக்குளத்து தேவியின் உருவை மனதில் தியானித்து வந்த அப்பெண்ணின் நாவில், எப்பொழுதும் தேவியின் திருநாமம்தான் நிறைந்திருக்கும். அந்தப் பெண், பக்தியின் முழு உருவமாயிருந்தாள்.

வெள்ளிக்கிழமை தோறும் உண்ணா நோன்பிருந்தாள். அப்படி ஒருநாள், விரதமிருந்தபோது, யக்ஷி இருந்த பனைமரத்தின் அருகில் இருந்த குளத்தில் குளிக்க இறங்கினாள். திடீரென்று பலத்த காற்றும், மழையும் இடியும் வர, இருள் சூழ்ந்தது. பயங்கர சப்தம் கேட்டது. அப்பெண் நடுங்கினாள். யக்ஷியைப் பார்த்து பயந்து, 'அம்மா சக்குளத்தம்மா' என்று கூவி மயக்கமடைந்தாள். களங்கமில்லாத சிறுபெண், தூய்மையான பக்தியால் கூப்பிட்ட இந்தக் குரல் பிறருக்கும் கேட்டது. கோவிலிலும் கேட்டது. குரல் கேட்டதும், யக்ஷி பெண்ணைப் பிடித்ததும் ஒரே நேரமாய் இருந்தது.

கோவில் கதவு தானாகத் திறந்தது . மிகப் பிரகாசமான ஒரு ஒளி, கோவிலில் இருந்து புறப்பட்டது. ஆலமரம் வரை சென்றது. சினம் கொண்ட தேவி, சின்னப் பெண்ணுக்கு அபயம் கொடுக்க விரைந்தாள். தன் பக்தையைக் கொல்லுவதற்காக வந்த யக்ஷியை அழிக்க, தேவி வாளெடுத்தாள். ருத்ரரூபிணியான சக்குளத்து அம்மாவிடம் மன்னிப்பு கேட்டது யக்ஷி.

"தேவி, எனக்கு வசிப்பதற்கு ஒரு இடம் தா. நான் எவருக்கும் தீங்கிழைக்காமல் இருப்பேன்" என்றது.

மன்னிப்பு கேட்ட யக்ஷியை கொல்லாமல் பயங்கரமான அதன் வடிவை மாற்றினாள் தேவி. கோடி சூர்ய ப்ரகாசம் போல் ஒளியுள்ளவளாக அழகான வடிவெடுத்தாள். தன் கோவிலில் கன்னிமூலயில் யக்ஷிக்கு இடம் கொடுத்தாள். தன்னை தரிசிக்க வரும் பக்தரை ரட்சிக்க வேண்டும்மென்று யக்ஷியிடம் சொன்னாள்.

சக்குளத்து காவு தேவி கோவிலில் இன்றும் யக்ஷியம்மாவைக் காணலாம். தென்மேற்குப் பக்கம் யக்ஷி கோவில் உள்ளது. அதற்கும் சென்று வணங்குகிறார்கள். மனதில் எழும் அச்சம், பிறபயம் நீங்குகிறது. ரோக பீடைகள் தீர்கிறது. நிராசையால், துக்கத்தினால் வேதனையடைந்த பக்தர்கள், இங்கு வந்து நிவாரணமடைகிறார்கள். பழக்குலை, வரபொடி, தேங்காய் இவைகளை இங்கு வைத்து வழிபடுகிறார்கள். பயமும், ரோகமும் மாற இந்த வழிபாடு மிகச் சிறந்தது. பல குழந்தைகளையும், பெரியவர்களையும் தேவி காப்பாற்றி இருக்கிறாள்.

யக்ஷி கொலை செய்ய நினைத்த சிறுமியின் வீட்டில், மாந்திரீகர்கள் பலர் இருந்தார்கள். அவர்கள் தேவியின் சிறந்த பக்தர்களாக இருந்தார்கள். ஜாதி,

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

மத, வித்யாசமில்லாமல், உதவி நாடி வருபவர்களுக்கு இந்த மாந்திரீகர்கள் உதவி செய்திருக்கிறார்கள்.

எங்கும் எதிலும் தேவியே

தீயில் பொறியாக, தண்ணீரில் நீர்குமிழியாக, எள்ளில் எண்ணெய்போல், இந்த உலகத்தில் சக்தியாக தேவி இருக்கிறாள். ஆதியும் அவள், அந்தமும் அவள். வேதமும் அவளே, சாஸ்திரமும் அவளே! தேவியை நினைப்பது மிகவும் புண்ணியமானது. சுகதுக்கங்களுக்கும் அவளே காரணம் ஆகிறாள். இதை உணரும்போது மனித ஜன்மம் சாபல்யம் பெறுகிறது.

முடிந்தவரை புண்ணியஸ்தலங்களுக்கும் கோவில்களுக்கும் நாம் போகவேண்டும். தரிசன நேரங்களில் முறைப்படி வழிபாடு செய்து கும்பிட்டு வருவது மஹா பாக்கியம். இலை, நீர், மலர், என நைவேத்தியம் எதுவாக வேண்டுமானாலும் இருக்கட்டும், மனநிலை, மனோபாவம் இவைதான் முக்கியம்.

பூமி முழுவதும் தண்ணீர் இருந்தாலும், சில இடத்திலுள்ள தண்ணீரைத்தான் நாம் குடிக்க முடிகிறது. கிணறுகள் தோண்டுவது போலதான், இறை உணர்வை ஊட்ட, கோவில்களும் புராணப் புத்தகங்களும் ஏற்படுத்தப் பட்டிருக்கின்றன. ஆனால், இதை நாம் புரிந்து கொள்வதில்லை.

தமோ குணமுள்ள மனிதர்கள், நல்ல காரியங்களிலிருந்து நம்மை வழிமாற்றுகிறார்கள். கோவில்களுக்குப் போவதை தடுப்பதும், புராணங்களை இழிவு படுத்துவதும் அவர்களுக்கு வழக்கம். நாம் இந்தக் குழியில் விழக்கூடாது. அக்னியை புகையும், கண்ணாடியை அழுக்கும் மறைப்பதுபோல், மனதை அஞ்ஞானம் மறைத்திருக்கிறது. அது மாறவேண்டுமானால், இறை நினைவு ஒன்றால்தான் முடியும் என்பதை அறியவேண்டும். களங்கமில்லாத தர்மம் செய்யவேண்டும்.

நிலையற்ற மனித வாழ்வில், பகவத் காரியங்களில் ஆத்மதிருப்தி பெறவும். சத்சங்கங்களை ஏற்படுத்தி கோவில்களைப் பாதுகாக்கவும், கோவில் நியமங்களை எடுத்துரைத்து, அறிவைப் பிரகாசப்படுத்தி அகந்தையை அகற்றவும், பல தடவை நம் இறைவழிபாடு செய்தும் பக்தி செலுத்தியும் பரிபூரணமாவதில்லை. நம் பிரார்த்தனையில் அலட்சியம் நிறைந்து, மன ஒருமைப்பாடு குறைவது தான் இதற்குக் காரணம்

'சொந்தக் காரியத்திற்காக மாத்திரம் பிரார்த்தனை செய்ய நினைக்காதே. சுகத்திலும், துக்கத்திலும், மானத்திலும், அவமானத்திலும் ஒரே மாதிரியாக பகவானை கும்பிட வேண்டும்' என்று நம் ஆச்சாரியர்கள் உபதேசிக்கிறார்கள்.

 In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனித வாழ்நாளில் பலமுறை கடினமான சோதனைகளையும் துக்கங்களையும் நாம் சந்திக்க நேரிடும்.

எதையும் தாங்கும் சக்தியும், தியாக புத்தியும் நமக்குத் தரும்படியாக இருக்க வேண்டும். நம் பிரார்த்தனை இந்த பாவத்தில் தேவியைச் சரணடைந்தால் சந்தேகமே இல்லாமல், பரம புருஷார்த்தமான மோட்சம் தேவி தருவாள். மனமென்னும் வனத்திலிருக்கும், காம, குரோத, மோகம் என்னும் மிருகங்களை ஒழித்து, கோடி சூரிய பிரகாசமுள்ள தேவியை மனதில் இருக்கும்போது நாம் புனிதர்களாக ஆகிறோம்.

பிரம்ம வித்யா ரூபிணியான சக்குளத்தம்மன் என்றும் உங்களுடன் இருப்பாள். பயத்தை மாற்றி தைரியத்துடன் வாழ்நாளில் முன்னேறுங்கள். எந்தெந்த உருவத்தில் நீங்கள் த்யானம் செய்கிறீர்களோ, அந்த உருவத்தில் உங்கள் மனதில் வசிப்பேன் என்ற மகாவாக்யம்போல், எல்லா தேவன், தேவியையும் உங்களுக்குள் ஆராதிக்கலாம். எந்த நாமத்தையும் ஜபிக்கலாம். எந்த நதியும் கடைசியில் கடலில் சேருவதைப்போல் எந்தவித த்யானமும் திருநாமமும் ஒரே சக்தியில்தான் முடிவடைகிறது.

சர்வசக்தியான சக்குளத்தம்மா, எல்லோரையும் காக்கட்டும்.

துர்சக்தியை அழித்த துர்க்கை

'பட்டமனை' வீட்டினர், குடும்ப பாரம்பரியமாக தேவியின் பக்தர்களாக இருந்தார்கள். சாந்தசீலர்களும், பூஜாரிகளும், மாந்திரீகர்களுமாக இருந்தார்கள். சத்கர்மங்கள் மட்டுமே அவர்கள் செய்து வந்தார்கள். ஏழைகளையும் அநாதைகளையும் காப்பாற்றுகிறவர்களாக இருந்தார்கள். நல்லுபதேசங்கள் செய்து பலருக்கு நல்வழி காட்டினார்கள்.

"கோமரம் சங்கு" என்ற துர்மந்திரவாதி, தீயசெயல்களை மட்டும் செய்ததோடு, செய்வினை அபிசார ப்ரயோகம் செய்து பலரை நாசப்படுத்தியும் ஆள்மாற்றாட்டங்கள் செய்தும், பலரிடம் இருந்து பணம் பறிந்து வந்தான். போதைப் பொருட்கள் உபயோகிப்பது, துர்நடவடிக்கைகளில் ஈடுபடுவதும் இதெல்லாம் இவனுடைய பழக்கமாயிருந்து. அவன் பெயரைக் கேட்டாலே பலர் பயந்து கேட்டதையெல்லாம் அவனுக்குக் கொடுத்து வந்தார்கள். பலரையும், பலவழிகளில் அவன் பயப்படுத்தியிருந்தான். இவைகளுக்கெல்லாம் அவனுக்கு உதவியது, "மருதை" என்ற துர்தேவதை. யானை, நாய், மாடு, பூனை, மனிதன், ப்ரேதம் முதலிய எல்லா ரூபத்திலும் இந்த துர்தேவதையைப் ப்ரயோகிப்பான். இதனால், தன்னைவிட பெரிய மாந்திரீகன் கேரளாவில் கிடையாது என்ற அகம்பாவம் அவனுக்கு இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த நேரத்தில் ஒருநாள், மிக சாமர்த்தியசாலியான 'பட்டமனை' வீட்டு பெரிய பூஜாரிக்கு, தொலைவில் ஓர் இடத்திற்கு 'மஹா சுதர்சன' ஹோமத்திற்காக போக வேண்டி வந்தது. ஓடத்தில் பயணம் செய்ய வேண்டும். ஹோமம் செய்ய வேண்டிய நாளில் அதிகாலையில் மஹாகணபதி ஹோமம் செய்து, மாலை திரிகால பூஜையும் மஹாசுதர்சனஹோமும் நடத்தி திரும்பலாம் என்று நினைத்து பெரிய பூஜாரியும், உதவி செய்யும் ஆளும் ஓடக்காரனும் புறப்பட்டார்கள். 'கோமரம் சங்கு'வின் வீட்டு வழியாகத்தான் போகவேண்டும்.

இந்த விவரம் சங்கு எப்படியோ அறிந்துகொண்டான். பூஜாரியை மாட்டிவிட சரியான சமயம் என நினைத்தான். தன் சொற்படி கேட்கும் துர்தேவதையான 'மருதை'யை ஆண் யானையின் உருவத்தில் கரையில் நிறுத்தினான். பெரிய பூஜாரியின் வரவைத் தெரிந்து கொண்ட மருதை பூஜாரியைக் கொல்லவேண்டும் என்ற எண்ணத்தில், மதமிளகிய யானைபோல் கலவரம் உண்டாக்கியது.

மிக இருட்டாக இருந்ததால், பூஜாரிக்கு யானையைத் தெரியவில்லை. சப்தம் கேட்ட பூஜாரி, ஓடத்தை நிறுத்தச் சொன்னார். யானையின் பிளறல் சத்தம் கேட்க, தேவி சக்குளத்தம்மனை நினைத்தார். அவருக்குப் புரிந்தது, இது, கோமரன் சங்குவின் வேலைதான். மாரண மருதையை ஏவியிருக்கிறான். இதை மாற்றாமல் இங்கிருந்து போகமுடியாது.

எல்லோரும் பயமிகுதியால் நடுங்க ஆரம்பித்தனர். என்ன செய்வது என்று அலறினார்கள்.

"பயப்படாதீர்கள்! தேவி, நம்மைக் காப்பாற்றுவாள். மனதில் சக்குளத்து அம்மாவை தியானியுங்கள். சொன்ன பூஜாரி கைகூப்பினார். நீரை எடுத்து பிரார்த்தனை செய்தார். 'பராசக்தியே, இந்த அடிமைகளைக் காப்பாற்று! துர்தேவதை உபாசகனான சங்குவின் மருதை, யானையாக வந்து எங்களைத் தடை செய்துவிட்டது. உன்னை எப்போதும் தியானம் செய்யும் எம்மைக் காப்பாற்றுவாயாக!

யானையின் வடிவில் வந்திருக்கும் இந்த மருதையை உனக்கு அடிமையாக, இந்த பூமி உள்ளகாலம் வரை உன் காலடியில் இருந்து போகாமல் பார்த்துக்கொள்! உன்னை நினைப்பவர்களுக்கும், தரிசனம் செய்யவரும் பக்தர்களுக்கும் பணிவிடை செய்வதற்காக 'ஆனை மருதை'யை உனக்கு சமர்ப்பிக்கிறேன். துர்மாரண தோஷங்களை மாற்றி காப்பாற்றுவாயாக!

தேவி வனதுர்க்கையே நம:

ஸர்வமங்கள ஸ்வரூபிணியே நம:

இப்படியாக தியானித்து, கையிலிருந்த தண்ணீரைத் தெளித்தார். பயங்கர

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சப்தத்துடன் யானை அங்கிருந்து போய்விட்டது. பூஜாரி, செல்ல வேண்டிய இடம் சென்று பூஜை செய்து நல்ல படியாகத் திரும்பினார். 'ஆனைமருதை'யை தேவியின் அடிமையாக்கி அடங்கினார். பழக்குலை, சர்க்கரை, இளநீர் இவையெல்லாம் நைவேத்தியமாக சமர்ப்பித்தார்.

துஷ்டனான கோமரம் சங்கு, ஆனைமருதையை திரும்பப்பெற பல யுக்திகளைப் பிரயோகித்தான். எல்லாம் பயனற்றுப் போனது. தீராத வியாதியும், தரித்திரம், துக்கம் எல்லாம் பிடித்து வருந்தினான். கடைசியில் சக்குளத்து தேவியின் பக்தனாகி, பூஜாரியிடம் மன்னிப்பு கேட்டான். அவர் சொன்னார், "சங்கு! மந்திரங்கள் புனிதமானவை. மனிதர்களுக்கும், உலகிற்கும் நன்மை செய்வதற்கானவை. அவற்றை, கெட்ட வழியில் பிரயோகிப்பவன் துர்மந்திரவாதியாவான். யாரானாலும் தண்டனை அனுபவிக்க வேண்டிவரும். பகவதியை சரணடைவாய். அம்மா உன்னைக் காப்பாற்றுவாள்!"

பெண் பூஜை (நாரி பூஜை)

"யத்ர நார்யஸ்து பூஜ்யந்தே ரமந்தே தத்ர தேவதா:
யத்ரை தாஸ்துநா பூத்யந்தே சர்வாஸ்தத்ரா பலா: க்ரியா"

எங்கெல்லாம் பெண்கள் பூஜிக்கப்படுகிறார்களோ, அங்கெல்லாம் தேவதைகள் திருப்தியடைகிறார்கள். ஆராதிக்கப்படும் பெண்ணும், ஆதரிக்கப்படும் பெண்ணும் ஐஸ்வர்யத்தின் அஸ்திவாரம். அவமானப்படும் பெண் மூன்று உலகங்களுக்கும் நாசத்தின் காரணமாகிறாள்.



லதா ரஜினிக்கு முக்கிய காரியதரிசி ராதாகிருஷ்ணன் நம்பூதரி பாதபூஜை செய்கிறார்...

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெண்கள் பராசக்தியின் அம்சம். அவர்களின் கண்ணீர் பூமியில் விழக்கூடாது. இந்த உலகமும் மூலப்ரகிருதியும் தேவியாய் ஆதரிக்கப்படுகிறது. கஷ்டங்களையும், துக்கங்களையும்தான் ஏற்று, வாழ்க்கையைக்கூட குழந்தைகளுக்காக விட்டுக்கொடுக்கும் பெண், (அம்மா) சந்தான ரட்சகியாகிறாள். பதிவிரதையான மனைவி ஸ்தானத்தில் சகலமும் சகிக்கும் பெண், ஜகதீஸ்வரிக்கு சமம். அன்பு அரவணைப்பு தந்து மனதுக்கு மகிழ்ச்சி தரும் குழந்தை, சாக்ஷாத் ஈஸ்வரிதான். பராசக்தியான தேவி இப்படி, இந்த உலகம் முழுவதும் அகமும், புறமும் நிறைந்து அனுக்ரஹிக்கிறாள். அதற்காகத்தான் நாரிபூஜை நடத்துகிறார்கள்.

சக்குளத்து காவிலம்மாவின் திருசன்னதியில் ஆண்டு தோறும் பெண்களின் பாதங்களைக் கழுவி இந்த பூஜை நடத்தி வருகிறார்கள். இந்த நேரம், சக்தி ஸ்வரூபிணியாய், துர்க்கா பகவதி அஷ்ட ஐஸ்வர்ய ரூபிணியாய் பெண்களிடம் குடிகொண்டு, அவர்களின் துக்கங்களை மாற்றி அனுக்ரஹிக்கிறாள்.

பெண்களை பயமுறுத்துவதும், இம்சை செய்வதும், பட்டினி போடுவதும், துரோகம் செய்வதும், வஞ்சனை செய்வதும் தவறு. எல்லா ஆண்களும் இந்த உண்மையினை உணரவேண்டும். மகிழ்வான, நிறைவான ஒரு குடும்பம், தேவி அனுக்ரஹத்தால் உண்டாகும்.

ஜாதி, மத, பேதமில்லாது எல்லா பெண்மணிகளும் நாரி பூஜையில் பங்கு பெறலாம்.

பெண்பூஜை, ஆண்டுதோறும் மார்கழி மாதம் முதல் வெள்ளிக்கிழமையில் நடத்தி வருகிறார்கள். லட்சக் கணக்கான பெண்கள் இதில் பங்கு கொள்கிறார்கள்.

இப்படிப் பெண்களின் பாதம் கழுவி, ஆராதிக்கும் சடங்கு இந்தக் கோவில் தவிர வேறு எங்கும் நடப்பதில்லை. பெண்மையை ஆராதிப்பதும், மகளிருக்கு மரியாதை கொடுப்பதும் பாரதப் பண்பாட்டில் முக்கியமானது.

முதல் பெண் பூஜை ஏற்ற பகவதி

சக்குளத்தம்மாவின் புகழ் மெல்லப் பரவிய சமயத்தில், பக்தர்கள் கூட்டமும் பெருகத் துவங்கிற்று.

அந்தக் காலத்தில், தேவி பூஜையின்போது, பெண்கள் பார்க்க அனுமதியில்லாமல் இருந்தது.

அப்படி ஒரு சமயத்தில் ஒருநாள், வயது முதிர்ந்த பெண்ணொருத்தி, தான்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓரமாய் நின்று பூஜையைப் பார்க்க விரும்புவதாகக் கெஞ்சினாள்.

யாரும் அனுமதிக்கவில்லை. எவ்வளவோ கெஞ்சியும், தேவி பூஜையைப் பார்க்க அவள் அனுமதிப்படாததால் மனமேயில்லாமல் வெளியேறினாள் கிழவி.

அடுத்த விநாடி, அங்கே புயல் காற்று வீசியது. பெருமழை பெய்தது. விளக்குகள் அணைந்தன. கலசங்கள் உடைந்தன.

பலவித அபசகுனங்கள் தெரியவே, பூஜாரி தெய்வபிரசன்னம் பார்த்தார்.

"தேவியும் பெண்தானே... ஏன் தேவி பூஜையில் பெண்களை அனுமதிக்க வில்லை? இப்போது வந்த வயதான பெண் வேறு யாருமல்ல நான்தான்" என்று சொன்னது தேவிவாக்கு.

பூஜாரி பதறிப் போனர். "பரிகாரம் என்னதான் தாயே?" கெஞ்சினார்.

"இதே தினத்தில், இந்த ஆலயத்திற்கு வரும் எல்லாப் பெண்களையும் பூஜை செய். அவர்களின் பாதங்களைக் கழுவி, மலர்கள் போட்டு தலைகுனிந்து வணங்குங்கள். அன்றைய தினம் வரும் ஆயிரக்கணக்கான பெண்களில் ஒருத்தியாக நானும் இருப்பேன்" என்றாள் தேவி சக்குளத்தம்மா.

இதோ இப்போதும் அந்த நாரி பூஜை என்னும் பெண்கள் பூஜை விழா இங்கே நடந்து கொண்டிருக்கிறது.

பொங்கல் உற்சவம்

பகவதியின் லட்சக்கணக்கான பக்தைகள், கோவிலின் முன்பு திரளாகக் கூடி, புதிய பானைகளில் பொங்கல் வைக்கும் வைபவமே பொங்கல் உற்சவம். வருடந்தோறும் கார்த்திகை மாதத்தில் நடக்கிறது இந்த உற்சவம். பக்தைகள் வைக்கும் பொங்கலை பூஜாரி, தேவிக்கு நைவேத்யம் செய்கிறார். பிறகு திருப்பிக் கொடுக்கிறார். அதை அவர்கள் எல்லோருக்கும் கொடுத்து வீட்டிற்கும் கொண்டு போகிறார்கள்.

இஷ்ட காரியசித்தி, ஐஸ்வர்யம், அமைதியான வாழ்வு இவையெல்லாம் கிடைக்கப்பெற, பொங்கல் இடுகிறார்கள். அநேக லட்சம் பேர் ஒருமித்து தேவியின் நாமங்களைச் சொல்லிக் கொண்டு தயாராக்கும் பொங்கல், தேவிக்கு அமுதமாகிறது. பதினைந்து வயதிற்குட்பட்ட ஆண்குழந்தைகளும் பொங்கல் இடலாம். எல்லா வருஷமும் கார்த்திகையன்று பல லட்சம் பக்திகள் கூடி அனுசரித்து வருகிற வழிபாடுதான் பொங்கல்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொங்கல் உற்சவ மகாத்மியம்

மிக சக்தி வாய்ந்த நீரேற்றுபுரம் சக்குளத்துகாவு ஸ்ரீ பகவதிக்கு வருஷந்தோறும் லட்சோபலட்சம் பக்தர்கள் கூடி நடத்தி வருகிற பொங்கல் தோன்றிய வரலாறு, அந்த அன்னையின் அன்பை வெளிப்படுத்துவது.

துர்க்காதேவி குடிகொள்ளும் இந்தக் கோவில் அமைந்திருந்த இடம் ஆதியில் பயங்கரக்காடாக இருந்தது.

இந்தக் கோவில் உருவாகக் காரணமாயிருந்த வேடனும், அவன் குடும்பமும் காட்டிலேயே வசித்தார்கள். மண் பாத்திரத்தில்தான் அவர்கள் சமைத்து சாப்பிட்டார்கள். தேவிக்குப் படைத்த பிறகே வேடன் குடும்பத்தினர்



50 கி.மீ. சுற்றளவில், சாலையின் இருமருங்கிலும் பத்து லட்சத்திற்கும் மேலானவர்கள் கூடி பொங்கலிடும் காட்சி....

சாப்பிட்டார்கள். ஒருநாள் காலை விறகு வெட்டபோன வேடன், சில காரணங்களால் தாமதித்து திரும்பினான். அதனால் தேவிக்கு நைவேத்யம் கொடுக்க முடியவில்லை. இன்று தேவி பட்டினிதான் என்ற மிகுந்த வருத்தத்தோடு பயபக்தியுடன் தேவியின் பாதத்தில் சாஷ்டமாக விழுந்து மன்னிப்பு கேட்டார்கள்.

பிறகு அம்மாவுக்கு நைவேத்யம், செய்ய தயாரானபோது மரத்தடியில் பானை நிறைய சூடான பொங்கல் சோறு தாயராகயிருந்தது. வேடத்தி ஆச்சார்யமாகப் பார்த்தாள். யார் சமைத்தார்கள்?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அசரீரியாக தேவி சொன்னாள், "தினந்தோறும் எனக்கு உணவிடும் உங்களுக்காக இன்று நானே பொங்கல் சமைத்தேன்... உண்டு பசியாறுங்கள்"

வேடன் குடும்பம் பக்தியோடு கைகூப்பி வணங்கியது.

"எந்த நிலையிலும் என்னை நினைப்பவர்களுக்கு நான் சிநேகிதியாகவும், இருக்கிறேன்! பக்தியோடு எவர் எங்கிருந்து பிரார்த்தித்தாலும் அவர்களுடன் நான் இருக்கிறேன்" என்றாள் தேவி.

அன்று முதல் தேவிக்கு மண் பாத்திரங்களில் சமைத்து நிவேதனம் செய்து சமர்ப்பிப்பதை வழக்கமாகக் கொண்டனர். சில சமயங்களில் தேவியும் அவர்களுக்காக உணவளித்தாள். இப்படியாக தேவியும், பக்தைகளும் ஒன்று சேர்ந்து தயாரிக்கும் பொங்கல்தான், சக்குளத்து காவில் பொங்கல் உற்சவம். பக்தர்கள் தயாரிக்கும் பொங்கலை, ஜகன்மாதாவான ஈஸ்வரி சந்தோஷத்துடன் ஏற்றுக்கொண்டு, அவர்களுக்கு சர்வ ஐஸ்வர்யமும் தருகிறாள். அப்போது பக்தர்களும் தேவியும் ஒன்றாகிவிடுகிறார்கள் என்பது பொங்கலின் மகத்துவம். இந்தப் பொங்கல் திருவிழாவில் பங்கேற்க ஜாதி, மதபேதமின்றி எல்லோரும் வருகிறார்கள். பொங்கல் வைக்கும்போது தேவியும் தங்களுடன் இணைந்து இருப்பதாக நம்புகிறார்கள்.

பொங்கல் உற்சவம் நடத்திவிட்டு மகிழ்ச்சி பொங்கச் செல்கிறார்கள்.

தேவிக்குப் பிடித்த திருக்கார்த்திகை

1981ல் இக்கோவிலில் அதிசயமாய் நடந்த ஒரு நிகழ்ச்சியைத் தொடர்ந்து, கார்த்திகை மாதத்து கார்த்திகை, விசேஷ நாளாக அங்கீகரிக்கப்பட்டது.

மண்டல காலத்தில், நிர்மால்ய தரிசனத்திற்காக தினமும் ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வருவார்கள். 11.12.81 வெள்ளிக்கிழமையன்று அதிகாலை 3.30 மணிக்கு சில பக்தர்கள் கோவிலின் முன்பு கைகூப்பியவாறு தொழுது கொண்டிருந்தபோது, எங்கும் நறுமணமுள்ள புகை பரவ, கோவிலின் மேற்புறம் தோன்றிய மிகப் பிரகாசமான ஒளியை, அவர்கள் பார்த்தார்கள். மேற்கூரையில்லாத கோவிலில் திருடர்கள் யாராவது ஏறிப் போய் உள்ளே இருப்பார்கள் என்று நினைத்து, பூஜாரியிடம் சொன்னார்கள்.

குளித்து முடித்த பூஜாரி, நடையைத் திறந்தார். பகவதி சன்னதியில் கண்ட அற்புதமான காட்சி எல்லோரையும் பரவசப்படுத்தியது. தீபங்கள் தாமாகவே ஒளிவிட, தேஜோமயமான தேவி விக்ரகம் குங்குமம், தங்க ஆபரணங்கள் அணிந்து, திருஆயுதம் தரித்து பெரிதாகத் தோன்றியது. சாக்ஷாத் தேவிதான் தோன்றியிருக்கிறாள் எனத் தோன்றியது. சில நிமிடமே இந்தக் காட்சி நீடித்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகு பழைய நிலை அடைந்தது.

உடனே பிரசன்னம் வைத்துப் பார்த்தார்கள். பிரசன்னத்தில், கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திர நாள் தேவியின் விளையாட்டு நாள் என்று புரிந்தது. அன்று முதல், திருக்கார்த்திகை, தேவியின் விசேஷ நாட்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

திருக்கார்த்திகைக்கு திவ்ய அபிஷேகம், பொங்கல் படைப்பு, லட்சதீபம் ஏற்றுதல், சொக்கப்பனை கொளுத்துதல் போன்ற பல சிறப்பு பூஜைகளும் நடத்துகிறார்கள். அன்று, நாடெங்கிலுமிருந்து பக்தர்கள் இங்கு வந்து கூடுகிறார்கள்.

பாவங்களை பஸ்மமாக்கும் சொக்கப்பனை

உயரமான ஒரு தூணில், வாழை நாரும் பாக்கு மர இலைகளும் கட்டி பழைய ஓலைகளும் கட்டி தயாராக்குவதுதான், சொக்கப்பனை. இதை, கெட்டவைகளின் பிரதிபலிப்பாகக் கருதி, நாட்டின் பாவங்களை அதில் ஆவாஹிக்கிறார்கள்.

தேவியை ப்ரதோஷ மண்டபத்தில் எழுந்தருளச் செய்து, பந்தலில் கிழக்குப் பார்த்து அமைக்கிறார்கள். தேவியின் திருப்பார்வை நோக்கில், கார்த்திகை ஸ்தம்பத்தில் அக்னி ஏற்றுகிறார்கள். அந்தத் தூண் எரிந்து முடிந்தவுடன் கோவிலிலும், சுற்றுப்புறத்திலும் நன்மையின் தீபங்கள் ஏற்றுவார்கள். அப்போது, 'தீபாவளி' போல் எங்கும் ஒளிவெள்ளமாய்த் திகழும். நன்மையின் ஆதிபத்யம் ஏற்படுகிறது. அளவற்ற பக்தியும், அற்புத சக்தியும், தீமைகள் விலகுவதும் நிகழும் இவ்விழாவில் பக்தர்கூட்டம் நிரம்பி வழிகிறது.

கார்த்திகைத் திருநாளில் சந்தியா காலத்தில், கார்த்திகை ஸ்தம்பம் ஏற்றி, முடிவடைந்ததும் தேவியை கோவிலின் உள்ளே கொண்டு சென்று எழுந்தருளச் செய்கின்றனர். உடன் தீபாராதனை நடக்கிறது. இந்த சொக்கப்பனை எரிய விடுகிற தேவி கோவில், கேரளத்தில் இது ஒன்றுதான்.

மகத்துவம் மிக்க மருந்து தீர்த்தம்

எல்லா வெள்ளிக்கிழமையும் சக்குளத்து அம்மாவின் சன்னதியில் வைத்து மருந்து கஷாயம் இலவசமாக கொடுக்கப்படுகிறது. ஏராளமான பச்சிலை மருந்துகள் கலந்து கஷாயம் தயாரித்து தேவிக்கு நைவேத்யமாக சமர்ப்பணம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செய்யப்படுகிறது. உரிய மூலிகை பூஜைகள் செய்து எடுக்கிற இந்தக் கஷாயம், ரத்த சுத்தி உண்டாவதற்கும், விஷங்கள் மாறுவதற்கும், படிப்பு நன்றாக வருவதற்கும், சொரி, சிரங்கு முதலியவை குணமாகவும், மனபிரமைகள், தலைவேதனை, மந்தநிலை, வயிற்று நோய்கள், இன்னும் பல தீராத வியாதிகள் விலகுவதற்கும் அருமருந்தாகக் கருதப்படுகிறது. ஜாதி, மதபேதமில்லாமல், வெகு தூரத்திலிருந்தும் பலர் இந்த மருந்து கஷாயத்தை அருந்துவதற்காக இங்கு வருகின்றனர்.

நாக பூஜை

ஒவ்வொரு வருடமும் புரட்டாசி மாதம் ஆயில்ய நட்சத்திர நாளில் சன்னிதானத்தில், நாகராஜாவிற்கும், நாக யக்ஷிக்கும் நீரும், பாலும் சமர்ப்பிக்கிறார்கள். ஆசாரவிதிகளோடு சர்ப்பபூஜை நடத்துகிறார்கள். நாகதோஷங்கள் எல்லாவற்றிற்கும் பரிகாரமென்று நம்பிக்கையுடன் பிரார்த்தனையும், நேர்ச்சையும் செலுத்துகிறார்கள். பலரும் கூடி பூஜை நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்கிறார்கள். நாக தோஷம் முதலான தோஷங்கள் விலகி மகிழ்வும், நிம்மதியும் அடைகின்றனர்.

திவ்ய அபிஷேகமும் உச்ச தீபாராதனையும்

கேரளாவிலுள்ள மற்ற கோவில்களில் காணமுடியாத சடங்குகளில், திவ்ய அபிஷேகமும், உச்சதீபாராதனையும் இக்கோவிலில் நடைபெறுகின்றன. திவ்ய அபிஷேகத்திற்கு, எண்ணெய்க் காப்புக்குப் பிறகு இளநீர், பன்னீர், மஞ்சள், குங்குமம் இவைகளை பிரத்யேகமான அபிஷேகம் செய்கிறார்கள். பிறகு தீபாராதனைக்காக நடை அடைக்கிறார்கள். அலங்காரம் செய்து நடை திறக்கிறார்கள். அப்பொழுதுள்ள தரிசனத்துக்காக கரைகாணாத கூட்டம் கூடுகிறது. மன அழுக்குகளைக் கழுவிப் போக்குகிற புண்ய தரிசனம், தேவியின் திவ்யதரிசனம்.

12 நாள் விரதமும் இருமுடியும் அதன் மகத்துவமும்

ஆண்டுதோறும் மார்கழி மாதம் 1ம் தேதி முதல் 12ம் தேதி வரை பன்னிரண்டு நாட்கள் கால அளவில், விரதம் இருக்கிறார்கள். வயது வேறுபாடின்றியும் ஆண், பெண், இன, மத பாகுபாடு இன்றியும் அனைவரும் இந்த விரதம் ஏற்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மார்கழி 1ம் தேதி மாலை போட்டுக்கொண்டு விரதம் ஆரம்பிக்கிறார்கள். 12 நாளும் காலை, மாலை குளித்து, வீட்டில் விளக்கேற்றி, தேவியைப் பிரார்த்திக்கிறார்கள். எல்லா சைவ ஆகாரங்களும் சாப்பிடலாம். அசைவ உணவு சாப்பிடாமல் இருப்பதோடு போதைப் பொருட்கள், சூதாட்டம் இதையெல்லலாம் நிறுத்த வேண்டும்.

பிரம்மசர்யம் கட்டாயமாக கடைபிடிக்க வேண்டும். பழையது, எச்சில் இதெல்லாம் கூடவே கூடாது. முடி வெட்டுதலும், நகம் வெட்டுதலும் கூடாது. வியாதிக்காக மருந்து சாப்பிடுபவர்களும், அதை அனுசரித்து விரதம் மேற்கொள்ள வேண்டும். நல்லதையே எண்ண, பேச வேண்டும். மனோசுத்தி, சரீரசுத்தியோடு களங்கமில்லாத சிநேகபூர்வமான பக்தியும் வேண்டும்.

12 நாள் விரத காலத்தில் முடிந்தளவு கோவில் தரிசனமும், புராணங்களைப் படிப்பதும், தான தர்மம் செய்வதும் மிக நன்மை பயக்கும். கோவில், சந்நதியில், விரதம் இருப்பவர்களும், இருமுடி கட்டுகள் சமர்ப்பிக்கிறவர்களும் பலர் இருக்கிறார்கள். இந்த நோன்பில் மிகப் பிரதானமாக 11-ம் நாள், பிரசித்தமான கலச அபிஷேகங்களும் பக்தர்கள் வழிபாடாக நடத்துகிறார்கள். 12ம் நாள் குழந்தைகளும் ஆண்களும், பெண்களும் தேவிக்கு காவடி எடுக்கிறார்கள். இதை, 'அம்மச்சி காவடி' என்று சொல்கிறார்கள். 12 நாள் விரதமிருக்க முடியாதவர்கள், ஏதாவது ஒருநாள் இங்கு வந்து பிரார்த்தனை செலுத்துகின்றனர். விரதமிருப்பவர்களின் வீடுகளிலும் கடைகளிலும் சக்குளத்து அம்மாவின் படம் வைக்க வேண்டும்.

இந்தப் பன்னிரண்டு நாள் விரதம் அனுஷ்டிப்பதன் நன்மைகள் அளவிட முடியாதவை. சர்வ ஐஸ்வர்யங்களும், எல்லா காரிய வெற்றிகளுக்கும், திருமணம், புத்திரபாக்யம், வேலை, கல்வி, செல்வம் பெறுவதற்கும், குழந்தைகளுடைய நல்ல எதிர்காலத்துக்கும் இந்த விரதம் மேற்கொள்கிறார்கள். தவிர தீயபுத்தி, கெட்ட பழக்கம், போதைப்பொருள் உபயோகம், சூதாட்டம், மது அருந்துதல், முன்கோபம், குருட்டாம்போக்கு, குடும்பத்தில் ஒற்றுமையில்லாமல் இருப்பது, பரஸ்பர சிநேகம் இல்லாதது. தீராவியாதி முதலியவை விலகி, சமாதானமும், அமைதியும், ஒற்றுமையும் பெற 12 நாள் விரதம் பயனளிக்கிறது.

அற்புத மகாசக்தியான சக்குளத்தம்மாவை எந்த நிமிஷமும் எங்கிருந்து கூப்பிட்டாலும் உடனே ஓடி வருகிறாள். அதனால், 'கூப்பிட்ட உடன் வருபவள்' என்று இவளைப் போற்றுகிறார்கள். சம்சார சாகரத்தில் கரைகாணாமல் அலையும் பாவப்பட்டவர்களுக்கு தேவின் நாமமும், நோன்பும் பாவங்களைத் தீர்த்து மோட்சத்தை கொடுக்கிறது. ஒருமுறை வருவோர், எல்லா வருஷமும் இந்த விரதம் அனுஷ்டிக்க பாக்கியம் கிடைக்க வேண்டுமென தேவியைப் பிரார்த்தித்து திரும்புகிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கலசமும் முக்கியத்துவமும்

ஆண்டுதோறும் மார்கழி ஒண்ணாம் தேதி முதல் பன்னிரண்டாம் தேதி வரையுள்ள விரதத்தை அனுசரித்து வருகையில், மார்கழி பதினொன்றாம் தேதி நடத்திவரும் புண்ணியமும் தேவிக்கு மிகப் பிரியமானதுமான பூஜை, கலச அபிஷேகம், பல இடங்களிலிருந்தும் இன, மத பேதங்கள் மறந்து, பலரும் இந்த வழிபாடு நடத்துகிறார்கள்.



ஒரே நாளில் நடக்கும் ஒரு லட்சம் கலச பூஜை

மாங்கல்யம், ஆயுள், ஆரோக்கியம், சமாதானம், சந்தோஷம் பெறவும், நோய்கள் குணமாகவும், வீடு, மனை, பொருள் இவைகளுக்கெல்லாம் சுத்தி ரக்ஷாதிகளுக்கும், சர்வ ஐஸ்வர்ய அனுக்ரகம் பெறவும் கலச வழிபாடு நடத்தி வருகிறார்கள்.

ஒரே நாளில் லட்சக்கணக்கான கலச அபிஷேகம் நடக்கிறது. கேரளத்தில், ஒரே நாளில் இத்தனை கலச அபிஷேகம் நடத்தும் கோவில் வேறு இல்லை. பக்தர்கள் இந்த வழிபாடு செய்வதற்கு முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்படுகிறது. பன்னிரண்டு நாள் நோன்பில் பிரதான நாளான பதினொன்றாம் நாள் நடத்தும் இந்தக் கலச அபிஷேகத்தைக் காண எல்லா ஊர்களிலிருந்தும், ஏராளமான பக்தர்கள் வருகிறார்கள்.

கூவியழைத்து கூட்டுப் பிரார்த்தனை

தீராத் துயர்களுக்கு முடிவுகட்ட, பக்தர்கள் இத்தலத்தில் கூவி அழைத்து பிரார்த்திக்கிறார்கள். எல்லா மலையாள மாதமும் முதல் வெள்ளிக் கிழமையன்று தேவியின் உற்சவ மூர்த்தியை வெளியே கொண்டு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வருகிறார்கள். பீடத்தில் ப்ரதிஷ்டிக்கிறார்கள்.

இந்த நேரத்தில், பக்தர்கள் ஒருமித்த குரலில் தேவியின் நித்ய பிரார்த்தனையை உரக்கச் சொல்லுகிறார்கள். குடிப்பழக்கத்திற்கு அடிமையானவர்கள், அதிலிருந்து விடுபட திருஆயுதம் தொட்டு சத்தியம் செய்கிறார்கள். இந்த சந்தர்ப்பத்தில் குடியை நிறுத்தியவர்கள் பலர். மங்கல்ய பாக்யம், சந்தானபிராப்தி கிட்டவும், தீராத துக்கங்கள், தொல்லைகள் விலகவும், குடும்ப ஒற்றுமை சந்தோஷம், ஐஸ்வர்யம், திருப்தி இவை உண்டாவதற்கும், பக்தர்கள் லோக நாயகியான தேவியை வேண்டி உரத்த குரலில் கூப்பிட்டுச் சொல்லி பிரார்த்திக்கிறார்கள்.

பிறகு வெளிப்புறத்தில் தேவியின் பிரதட்சணம் உண்டு. பக்தர்களும் தேவியுடன் வலம் வந்து பிரார்த்திக்கிறார்கள். பராசக்தியுடைய கடாட்சம் தங்களோடு வீட்டுக்கு வருகிறது என்பதுதான் இந்தச் சடங்கின் அர்த்தம்.

பிறகு உச்ச பூஜை நடக்கும். எல்லோரும் சேர்ந்து உச்சக் குரலில் தேவியைக் கூப்பிட்டுச் சொல்வது புண்ணிய நோக்கம். அது, பக்தர்களுக்கு தேவி கருணாகடாக்ஷம் சொரியும் நேரம். போதைப் பொருட்கள், சூதாட்டம் பிறகெட்ட பழக்கங்கள் விலகுவதற்கும், குடும்ப சமாதானத்திற்காகவும், குழந்தைகள் நல்லபடியாக வளருவதற்கும், நாட்டுக்கும், வீட்டிற்கும் நன்மை தர வேண்டியும், தேவியின் திருஆயுதம் தொட்டு சத்தியம் செய்யவும் வரும் பக்தர் கூட்டம், அநேகமாயிரம்.

முதல் வெள்ளிக்கிழமைகளில் நடைபெறும் இப்புனித நிகழ்ச்சியைப் பார்க்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பக்தி நிறைந்த இந்தச் சடங்கு வேறெந்தக் கோவிலிலும் காணமுடியாத ஒன்று.

குடிபழக்கத்தை விடுவதற்கு, திரு ஆயுதம் தொட்டு சத்தியம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

களமெழுத்தும் பாட்டும்

சக்குளத்து தேவிக்கான வழிபாடுகளில் மிக முக்கியமானது களம் எழுத்தும், பாட்டும். சத்ரு சம்ஹாரியான தேவியின் திருவுருவை, வண்ணப்பொடிகளால் வரைந்து, தேவியை அதில் ஆவாஹித்து பிரஸன்ன பூஜை முதலியவை செய்து, பாட்டும் குரவையும் கொண்டு தேவியை பூஜிக்கிறார்கள். இஷ்ட காரிய சித்திக்காக பக்தர்கள் இந்த வழிபாடு நடத்துகிறார்கள்.

'நிரபர'

தேவியின் கருணா கடாக்ஷத்தால் தனம், தான்யம் சேரவும், கைத்தொழில் முதலியவை விருத்தியாவதற்கும், ஆயுள் ஆரோக்கியம், சௌக்யத்திற்காகவும் தேவியின் திருப்பாதங்களில் 'நிரபர' சமர்ப்பிக்கிறார்கள். இப்படி சமர்ப்பிப்பவர்கள் குடும்பம் அனைத்து வளமும் நலமும் பெறுகிறது.

சந்தானபாக்யம் தரும் சக்குளத்தம்மா

தேவியின் கடாட்சம் நிறைந்து நிற்கும் மகத்தான கோவில்தான் ஸ்ரீ சக்குளத்து காவு தேவி கோவில். மனித வாழ்க்கையில் துக்கங்கள் போக்கும் மகா மந்திரம்தான் தேவி தரிசனமும் வெள்ளிக்கிழமை விரதமும், கூப்பிட்டு சொல்லி பிரார்த்தனையும்.

மனிதர்களுக்கு துக்கங்கள் பலவிதம். துக்கங்களின் தீ ஜ்வாலையில் வெந்துருகி சிரமப்படுவோர் அநேக பேர். அதில் ஒன்று, குழந்தைப்பேறு இல்லாத வருத்தம்.

"பும் நாம நரகாத் த்ரயதே இதி புத்ர" இது வாக்யம். பெற்றோரின் ஆன்மாவுக்கு பித்ரு கர்மங்கள் செய்து சாந்திகிட்டச் செய்ய, பூமியில் புத்திரர்கள் கட்டாயம் வேண்டும்!

பல வைத்தியங்களும், பூஜைகளும் செய்தும் வம்சவிருத்திக்காக குழந்தைப்பேறு பெறும் பாக்கியம் இல்லாத அநேகலட்சம் தம்பதிகளுண்டு. சாஸ்திரம் தடையாகும்போது அல்லது சாஸ்திரத்திற்கு சக்தி கொடுக்கவும், தெய்வ சக்தியே வழிகாட்டும் என்று புரிந்து கொள்ளுகிறவர்கள், சக்குளத்து அம்மாவின் பாதங்களில் சரணம் அடைந்து துக்கம் தீர வரம் கேட்பது தினமும் நடக்கும் நிகழ்ச்சி.

தேவியின் நாமங்களைச் சொல்லிகொண்டு அவர்கள் கடின விரதமிருக்கிறார்கள். விவரிக்க இயலாத தேவியின் அருளைப் பெற்று துக்க நிவர்த்தியுடன் சந்தோஷமாய்த் திரும்புகிறார்கள். வெளிநாட்டினரும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியின் சக்தியை உணர்ந்து கொள்ள பல சந்தர்ப்பங்கள் உண்டாகியிருக்கிறது.

சர்வ சக்தியுள்ள தேவியின் மகிமையைக் கேட்டு மலபாரிலிருந்து ஒரு நாயர் தம்பதிகள் கல்யாணம் ஆகி பதினைந்து வரும் கடந்தும் குழந்தை பாக்கியமில்லாததால் கண்ணீருடன் தேவியைத் தேடி வந்தார்கள். கோவிலில் சொன்னபடி நெய்யும், தேனும் தந்து வணங்கினார்கள். பக்தியோடு திவ்ய ஔஷதம் சாப்பிட்டார்கள். வெள்ளிக்கிழமைகளில் தேவியை மறக்காமல் விரதமிருந்து பக்தியுடன் வழிபட்டார்கள்.

பிறகு இந்த தம்பதியர், அநேகம் வழிபாடுகளுடன் கோவிலுக்கு வந்தார்கள். அவர்களுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்திருந்தது. அன்புமிகுந்த பிரார்த்தனைப் பொருளுடன் வந்து தேவியைக் காண்டு தொழுதபோது, அவர்கள் கண்களிலிருந்து ஆனந்தக் கண்ணீர் தாரை, தாரையாய் ஒழுகிற்று. ஸர்வ மங்கள ரூபிணியான தேவி கனிந்து அருள்புரிந்தால், இந்த புவனத்தில் நடக்காதது எது? அதன்பிறகு இந்தத் தம்பதிகளுக்கு ஒரு பெண்குழந்தையும் பிறந்தது. குழந்தைகளோடு மகிழ்வாய் இருக்கும் இவர்கள், இன்றும் தவறாது தேவியை தரிசிக்க வருகிறார்கள். முடிந்தவரை வழிபாடுகள் செய்கிறார்கள்.

உள்ளுணர்வோடு கூப்பிடும் யாரானாலும் சக்குளத்தம்மா கைவிடமாட்டாள். கலிகால தோஷங்களை நிவர்த்தித்து வாழ்வில் சாந்தியும் ஐஸ்வர்யமும் கிடைக்க, தன் சன்னதிக்கு வரும் எல்லா பக்தர்களையும் தன் குழந்தைகளாகவே எண்ணி, தாயின் அன்புடன் அவர்களை ரட்சிக்கிறாள். கருணை மழை பொழிகிறாள். வாழ்க்கையில் அர்த்தமும் ஐஸ்வர்யமும் கொடுக்கிறாள்.

மது நமது எமன்

மது ஒரு விஷம். அது வீட்டிற்கும், நாட்டிற்கும், உலகத்திற்கும் நாசத்தை விளைவிக்கக் கூடியது. போதைப் பொருள்களும், சூதாட்டமும் விட்டுவிடுங்கள். மனசாந்தியை மீண்டும் பெறுங்கள். பெற்ற தாயாரையும், சகோதர்களையும் பிரித்துப் பார்க்கும்படி செய்யக் கூடியது மது. மனதை மயக்கக் கூடியது. அறிவை அழிக்கக் கூடியது. இந்த விஷத்தை நீ அகலச்செய், உன்னைக்காக்க ஸர்வஐஸ்வரிய ப்ரதாயினியான சக்குளத்து காவிலம்மா அன்னையிருக்கிறாள்.

சூதாட்டம், குடி முதலியவைகளால் எத்தனையோ குடும்பங்கள் பட்டினி கிடக்கின்றன. அதைப்பற்றி குடிகாரர்கள் சொல்லும் நியாய வாதங்கள் அஞ்ஞானத்தினால் வந்தவை. குடியினால் உனக்கு நன்மை கிடையாது. குடும்பத்தைப் பரிதவிக்கவிட்டு ஆபத்தை எதிர்நோக்கிப் போவதை நினையுங்கள்.

குடித்தும் சூதாடியும் அகம்பாவத்தினால் பராக்கிரமம் காட்டி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உற்றார்க்கும், ஊரார்க்கும் பயத்தை உண்டாக்கி, நாடும் நகரமும் நடுங்க வைத்தவர்கள், இன்று வாடிக் கிடக்கிறார்கள். கொடிய நோய்களுக்கு அடிமைப்பட்டு, நகரக் கூட முடியாமல் பிறரைச் சார்ந்து வாழவேண்டி வருகிறது. செய்த தவறுகளை நினைத்து இவர்கள் வருத்தமடைகிறார்கள். சமூகத்தின் வெறுப்பைச் சம்பாதிக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களைக் காப்பாற்ற எவராலும் முடியாது. அதனால், இந்த நிமிஷமே சபதம் செய்! இறக்கும்வரை குடிக்க மாட்டேனென்று! அடுத்த ஜன்மத்தில் மதுவையும், சூதாட்டத்தையும் கேட்கக் கூட இடமளிக்காதே என்று சர்வலோக நாயகியும், சக்குளத்தம்மாவையும் சாட்சியாக்கி பிரார்த்தனை செய்! குற்ற உணர்வால் அலைகடலாக மாறியிருக்கும் உன் மனதில், தேவி அமைதியின் அமுதம் பொழிவாள், நிச்சயம்!

கல்யாணம் என்ற பெயரில், யாரெல்லாம் ரத்தத்தைத் தண்ணீராக்கு கிறார்கள்! நிறைய வட்டிக்கு கடன் வாங்கி, வீட்டை விற்றும், வாசலை விற்றும் மற்றவர் முன்பு கைநீட்டியும் பணம் பெற்று கல்யாணம் நடத்துகிறார்கள். அப்படி ஆரம்பிக்கப்படும் குடும்ப வாழ்க்கை, மதுவின் ஆபத்தில் தகருகிறது. குடிகாரன் நல்ல குழந்தைகள், நல்ல வாழ்க்கை, நல்ல குடும்பம் முதலியவற்றை தரைமட்டமாக்குகிறான். வாழ்வில் மகிழ்ச்சி, அதையடையும் கனவுகள் எல்லாம் நாசமடைகின்றன. அவர்களுக்கு மகிழ்ச்சியான வாழ்க்கை கிடைப்பதே இல்லை.

குடிகாரனால் எப்பொழுதும் தொல்லையும், முன்கோபமும், சந்தேகக் கண்களும், மனைவியை வேட்டையாடுகிறது. முடிவில்லாத பயங்களும், காயங்களும் ஒவ்வொரு பெண்ணையும் வதைக்கிறது. பதிவிரதையான பெண்ணின் சாபம் தனக்குக் கிடைக்குமென்பதை குடிகாரர்கள் உணர வேண்டும். குடிகாரனோடு உள்ள தாம்பத்திய வாழ்க்கை சுடுசட்டியில் விழுந்த பல்லியைப் போல பெண்களைத் தவிக்கச் செய்யும்.

நிம்மதியற்ற வாழ்க்கையில் கொஞ்சம் அன்பு கிடைக்கும்போது, பாசத்திற்கு பெண் மனது மாறுவது இயல்பாகிவிடக் கூடும். விபத்து ஏற்பட்டும், தற்கொலை செய்துகொண்டும் எத்தனையோ பெண்கள் இறக்கிறார்கள். தீ வைத்தும், விஷம் கொடுத்தும், அடித்தும் எத்தனையோ பெண்கள் கொலை செய்யப்படுகிறார்கள். சகோதரர்களே! இதனாலாவது நீங்கள் போதையை விடுங்கள்! சக்குளத்துகாவு தேவியை சரணம் அடையுங்கள்.

அப்பாவின் குடிப்பழக்கம், குழந்தைகளை வழிதவற வைக்கிறது. மதுவிற்கு அடிமையாகி சொந்தக் குழந்தைகளிடம் கூட அவமரியாதை அனுபவிப்பவர்கள் எத்தனையோ பேர். குடிகாரனான தந்தை வரும்போது பயந்து அழுது கத்துகிற குழந்தைகள் பலர் இருக்கிறார்கள். குடிகாரனான தந்தையிடம், அன்பு மறந்துபோய், பாசம் நீங்கி பயமாய் மாறுகிறது. அப்பா என்ற பேரைக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கேட்டாலே நடுங்குகிறார்கள். இந்தத் துன்பத்தால், அவர்கள் மந்தபுத்தியாயோ, வியாதியுள்ளனாயோ மாறுகிறார்கள். திருடனாக மாறுகிறார்கள். அதனால், நீ நினைத்துப் பார், தலைமுறை நன்மை பெற சத்தியம் செய்! கெட்ட வழி போவதில்லை என்று!

தாங்க முடியாத வேதனை சகித்து பெற்றெடுக்கும் குழந்தையை, தான் பட்டினிகூட கிடந்தும் தியாகம் செய்து வளர்க்கிறாள் பெண். குழந்தைக்காக அனைத்தையும் சகிக்கும் பெண்மணியை, குடிகாரக் கணவன் கொடுமைப் படுத்துகிறான். தாங்க முடியாத பயத்துக்கு இடையிலும், தன் ரத்தத்தைப் பாலாக்கி தாய் குழந்தைக்கு கொடுக்கிறாள். குழந்தை அழுதால், தாய்க்கு சகிக்க முடியாது. வியாதி வந்தால் மனம் தகரும்.

போதை வசப்பட்டவன் குழந்தைகளிடம் பாசம் காட்டுவதில்லை. மாதா, பிதாவை மதிப்பதில்லை. பெற்ற தாயாருக்கு ஒரு நேர உணவுகூட கொடுப்பதில்லை. அம்மா என்று அழைப்பதில்லை. பெற்றெடுத்த அன்னையின் கன்னத்திலடிக்கிற எத்தனையோ பேர் பூமியிலிருக்கிறார்கள். மகாபாவியான அவர்கள், எத்தனை ஜன்மங்கள் எடுத்தாலும் இந்தப் பாவம் தீராது.

தன் தாயாரை கெட்ட வார்த்தையால் அழைக்கும் நாவும் புத்தியும் கெட்டு, பாவமுள்ளவை ஆகிறது! யாராலும் தடை செய்ய முடியாத தண்டனை கிடைக்கும். உன் சந்ததிகள் உன்னுடன் இந்தப் பழியைத் தீர்த்து கொள்வார்கள். அம்மா என்று அழைக்கும் பாக்யம், பூர்வ ஜன்ம பூஜையாகும். உன்னை வளர்த்த அம்மாவுக்காக நீ குடிப்பதை நிறுத்து.

லோக மாதாவான ஜகதீஸ்வரி, இதற்காக உனக்கு அனுக்ரகம் செய்யட்டும். அறிவில்லாமல் செய்த பிழைகளெல்லாம் தேவி பொறுத்தருள்வாள். இன்று முதல் தேவி உன் வாழ்க்கையில் பிரகாசம் தருவாள். பிழைகளுக்காக வருந்தி மன்னிப்புக் கேள், காப்பாற்றுவாள்!

எத்தனையோ பேர், குடிப் பழக்கத்தால் மனம் தடுமாறி தாயாரையும், சகோதர, சகோதரிகளையும், குழந்தைகளையும் கொடுமைப்படுத்துகின்றனர். குடிபோதை பிரித்துப் பார்க்கும் அறிவும், நினைவும், தர்மமும், சத்யமும் இல்லாமல் அழியச் செய்வது. மிகவும் பயங்கரமானது.

குடிகாரனுக்குப் பெண்ணை திருமணம் செய்து வைக்காதீர்கள். ஒரு பெண்ணின் வாழ்க்கையை நாசம் செய்யாதீர்கள். நன்கு தெரிந்து கொண்டோ, விசாரிக்காமலோ மணமுடித்து வைக்காதீர்கள். ஒரு குடிகாரன் உண்டாக்கும் வாழ்க்கை, தற்கொலையைவிட கொடூரமானது.

நல்லவனாக, மற்றவர்களுக்கு தீங்கு செய்யாமல் வாழவும், நிலையற்ற இந்த வாழ்க்கையில் மற்றவர் துக்கத்திற்கு காரணமாகாமல். நல்ல வாழ்க்கை வாழ, உன்னை ஜகதீஸ்வரியிடம் அர்ப்பணம் செய். எல்லாமான சக்குளத்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காவிலம்மாவை சரணம் அடைவாய்!

அவள், சந்தோஷம் தந்து, போதையில் வாழ்க்கைப் பாதை மாறாமல் காப்பாள்.

வெற்றிலை பிரசன்னம் (ஜோதிடம்)

சக்குளத்து காவு தேவி ஆலயத்தின் முக்கிய காரியதரிசியும், பகவதியின் முழு அனுக்ரகம் பெற்றவருமான **பிரம்ம ஸ்ரீ ராதாகிருஷ்ண நம்பூதிரி** அவர்கள் வெற்றிலை பிரசன்னம் பார்ப்பதில் வல்லவர்.

ஏழு வெற்றிலையும், ஒரு பாக்கும் கொண்டு, இவர் பிரசன்னம் பார்ப்பது, மிகப் பிரசித்தி பெற்றது.

நடப்பது, நடக்கப் போவது பற்றி மிகமிகத் துல்லியமாகக் கணித்துக் கூறக்கூடிய இவர், நம்மைப்பற்றி நாமே அறியாத தோஷங்களையும் கண்டறிந்து அதற்குப் பரிகாரமும் சொல்வார்.

பிரச்னைகள் தீரவும், நிம்மதி பெறவும் இவரிடம் வெற்றிலை ஜோதிடம் கேட்டு வருவோர் ஏராளம். உள்ளூர் மட்டுமன்றி, வெளிநாடு, வெளி மாநிலங்களில் இருந்தும் ஜாதி மத பேதமின்றி, ஆண், பெண் வேறுபாடின்றி பலரும் வந்து இவரிடம் வெற்றிலை பிரசன்னம் கேட்டுப் பயனடைகின்றனர்.



வெற்றிலை பிரசன்னம் பார்க்கும் பிரம்ம ஸ்ரீ ராதாகிருஷ்ணன் நம்பூதிரி

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

திங்கள், செவ்வாய், வெள்ளி தவிர பிற நாட்களில் மட்டுமே ப்ரசன்னம் பார்க்கும் இவர், தினமும் குறிப்பிட்ட எண்ணிக்கையில் உள்ள நபர்களுக்கு மட்டும் வெற்றிலை ஜோதிடம் சொல்கிறார். எனவே, முன்கூட்டியே நேரப்பதிவு (Appointment fix) செய்துகொள்வது நல்லது.

பக்தர்களின் சந்தேகங்களை, பாகுபாடு ஏதுமின்றி காலை 4 மணி முதல் மாலை 6 மணி வரை எப்போதும் இவரிடம் கேட்கலாம்.

சக்குளத்து காவில்லம்மாவின் சக்தி அனுக்ரகம் பெற்று பிரம்மஸ்ரீ ராதாகிருஷ்ண நம்பூதிரி சொல்லும் வெற்றிலை ப்ரசன்னம், வாழ்வில் வெற்றிக்கு வழிவகுக்கும்.

வெள்ளிக்கிழமை விரதம் அனுஷ்டிக்கும் விதம்

எல்லா விரதத்திற்குமே பிரம்மசரியம் முக்கியமானது! அசைவ உணவுகளும், போதை வஸ்துக்களும் கூடாது. காலை, மாலை குளிக்கவும். வியாதியினாலோ பிற காரணங்களாலோ குளிக்க முடியாத நிலையில் உள்ளவர்கள் மட்டுமே குளிக்காமல் விரதம் அனுஷ்டிக்கலாம்.

ஆகாரத்திற்கும் வரைமுறை கிடையாது. ஆண்களும், பெண்களும் இந்த விரதத்தை அனுஷ்டிக்கலாம். வயது வரம்பு கிடையாது! உணவு முறையில் சுத்தம் தேவை.

மாதத்தில் எல்லா வெள்ளிக்கிழமையும் இருப்பவர்கள், (பெண்கள்) மாதவிடாய் வந்தால் குளித்துவிட்டு விரத சுத்தமுடன் இருக்கவும். மாதத்தில் ஓரிரு வெள்ளிக்கிழமைகளில் மட்டும் விரதமிருப்பவர்கள், முதல் மாதம், எப்போது ஆரம்பித்தார்களே, அதே முறையில் அனுஷ்டிக்கவும். மனசுத்தியும், பக்தியும் தேவை. பிறப்பு, இறப்பு முதலிய அசுத்தம் வந்தால், விரதம் முடங்கும். விரதம் முடங்கினால், திரும்பவும் முதலிலிருந்து அனுஷ்டிக்கவும். தொடர்ந்து அனுஷ்டிக்க வேண்டும்.

சாதாரண விரதம்

ஏதாவது ஒரு வேளைமட்டும் அரிசி உணவு(பச்சரிசி) உப்பும், மிளகாயும் சேர்த்து சாப்பிடவும். காலையும், மாலையும் அரிசியில்லா ஆகாரம் சாப்பிடவும்.

உபவாசம்

ஒன்றும் சாப்பிடாமல், தேவியின் திருநாம ஜபம் செய்யவும்.

கடின விரதம்

பழவகைகளோ அல்லது அரிசி சேர்க்காத பலகாரமோ ஒருவேளை மட்டும் சாப்பிடவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தினசரி வழிபாடு

எல்லா உயிர்களிலும், சகல வஸ்துக்களிலும் நிறைந்திருக்கும் லோக மாதாவே! சக்குளத்துக் காவிலம்மா! நீயே இந்த உலகத்தில் எங்கும் நிறைந்த ஆதிபராசக்தி!

ஒன்றுமே அறியாதவனும், நிரபராதியுமான இந்த அடிமையின் பிரார்த்தனையைக் கேட்டு மனமிரங்கு தேவி! 'தீராத நோயும், தொல்லை தரும் பிணியும் என் குடும்பத்தில் உண்டாகாமல் இருக்க வேண்டும்! உடல் ஊனம், ஆபத்துகள், (எங்களுக்கும், எங்கள் வம்சத்தார்க்கும்) ஏற்படாமல் காப்பாற்றுவாயாக. உன் அருளால், ஆயுளும் ஆரோக்யமும் வளரவேண்டும். நன்மையுடன் மாங்கல்ய பாக்யம், சந்தானபாக்யம், நல்ல புத்தியும், எல்லா கலைகளும், படிப்பும் பக்தியும் தந்து எங்களை ஆதரிப்பாயாக.

ஆதிபராசக்தியான சக்குளத்துக்காவிலம்மா! என் குடும்பத்திலுள்ளவர்களுக்கு துர்புத்தியும், கெட்ட பழக்கங்களும் ஏற்படாமல் காத்து எங்கள் குடும்பம் கெடுவதற்கு வழி நேராமல் பார்த்துக்கொள். நல்ல நண்பர்களும், ஒற்றுமையும், சந்தோஷமும் எப்போதும் எங்கள் குடும்பத்தில் உண்டாக வேண்டும். தேவி துர்க்கையே, தேவி சக்குளத்து அம்மா!

நீ இல்லாமல் ஒரு காரியமும் உலகத்தில் இல்லை. உடன்பிறந்தவரிடையே கூட ரத்தபாசம் மறந்து, முன்கோபத்தால் சண்டையிட்டு வசித்துக் கொண்டிருப்பவர்களிடையே, அன்பும், அமைதியும் ஒற்றுமையும் தந்து ஆதரிப்பாயாக! வாழ்வு எது என்பதை அறியாமல், அலைகின்ற நாங்கள், நேரான பாதையில் செல்ல வழி செய்வாயாக.

சக்தி ஸ்வரூபிணியான சக்குளத்தம்மா! எதிரிகள் பயமும், முன்வினைப் பாவங்களும், பேய், பிசாசுகளும் எங்களைத் தொடாமல் நீ காப்பாற்றுவாயாக! எங்களையும், சந்ததிகளையும் போகிற இடத்திலும், தங்குகிற இடத்திலும், கருணையின் உருவமான பகவதியே கண்கண்ட தெய்வமாக துணையாய் இருந்து காக்க வேண்டும்.

குடும்பத்தையும் குழந்தைகளையும் காத்து அருள வேண்டும். அஷ்ட ஐஸ்வர்ய ஸ்வரூபமான சக்குளத்து காவிலம்மா! பெற்றவளும் நீயே, வளர்த்தவளும் [illegible]யே, தாய் தந்தையும் நீயே, காப்பவளும் நீயே. அழிப்பவளும் நீயே. மகிமை [illegible]ந்தவளே, மூடத்தனத்தால் ஆங்காரம் வளர்ந்து, அஞ்ஞானக் கடலில் [illegible]ணாமல் அலைகின்ற அநாதையான இந்த அடிமையை, நீதான் [illegible]க் கரை சேர்க்க வேண்டும்!

[illegible]ம் பாதையில், உழன்று, சம்சார சாகரத்தில் மூழ்கி, 'நான், நீ,

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

என்னுடையது, உன்னுடையது' என்று அலைகிற அஞ்ஞானிகளுக்கு, உன்னுடைய தத்துவத்தை எப்படிப் புரிந்து கொள்ள முடியும்? பிறருக்கு துரோகம் செய்வது, வஞ்சனை செய்வது போன்ற எந்தவித கெட்ட எண்ணமும் என் மனதிலும் செயலிலும் தோன்றாமல் இருக்கச் செய்!

லோகமாதாவே! இந்த அடியேனிடம் கருணைகொள். நீதான் உலகின் தாய்! கதியில்லாமல் அலைகின்ற இந்த அடியேனைக் காத்து ரட்சிக்க வேண்டும்.

தேவி சக்குளத்து காவிலம்மா, அடியேனுடைய வேதனையை நீ அறியவில்லையா? துர்க்கா பகவதிதேவி, பக்தி இல்லாதவர்களையும் வரப்ரசாதியான நீ காக்க வேண்டும். இந்த உலகத்தில் நீ இல்லாமல் வேறு யாருமில்லை. மாயையினால் என்னுடையதாகத் தோன்றும் அனைத்தையும் உன் திருப்பாதங்களில் சமர்பித்து, சரணடைகிறேன். எனக்கு இனியும் ஒரு ஜன்மம் உண்டானால், அது உன்னால் ஆக வேண்டும். கோடானுகோடி வடிவங்களிலும், நாமங்களிலும் விளங்கும் தேவியே, உன்னை வணங்கி அடி பணிகிறேன். தூணிலும், துரும்பிலும், கல்லிலும், புல்லிலும், மற்ற எல்லா உயிர்களிலும் உன்னையே நான் காண்கிறேன்.

சத்திய ரூபிணியான ஜகன்மாயே உன்னை எப்படிப் பிரார்த்திக்க வேண்டும், உனக்கு எப்படி பூஜை செய்ய வேண்டும் என்பதும் அறியாதவன் நான். அதனால், இந்த அடிமையுடைய எல்லாக் குற்றங்களையும் மன்னித்தருள வேண்டும். காண்பது, கேட்பது, சொல்வது, செய்வது எல்லாம் அம்மா பராசக்தி, நீ மாத்திரமே! ஜீவாத்மா நீயே. பரமாத்மாயும் நீயே.

தாயே, என் குடும்பத்திலுள்ளவர்களுக்கு பக்தியும், அறிவும், அன்பும் தரவேண்டும். தீராத வியாதியைத் தீர்த்தருள வேண்டும். எல்லா கஷ்டங்களையும், உன் நாமத்தால் சாம்பலாக்க வேண்டும் உடலிலும், மனதிலும் பலமும், தைரியமும் தரவேண்டுமம்மா!

சக்குளத்து காவிலம்மா! நலமும், மகிழ்ச்சியும் வரும்போது உன்னை மறக்கவும், துக்கங்கள் கூடும்போது உன்னை நிந்திக்கவும் என் மனதில் தோன்றக்கூடாது. சுகத்திலும், துக்கத்திலும் கூடயிருப்பவளான அம்மா, உன் பாதம் எங்களுக்குச் சரணமாய் வரவேண்டும். பொறாமை எண்ணம் தோன்றாமல் இருக்க வேண்டும். என் வீட்டிலுள்ள மரத்தின் இலைகூட மற்றவர்களுக்குத் தொல்லை தரக்கூடாது. என்னுடைய உடலும், மனதும், புத்தியும் பிறருக்கு உபகாரமாய் இருக்க வேண்டும். பரிசுத்தமான பக்தி உண்டாக வேண்டும். எந்த நிமிஷமும் எல்லாம் துறந்து எல்லோரையும் பிரிந்து போகவேண்டிய மனிதர்களாகிய எங்களுக்குள், மதவேறுபாடுகள் தோன்றாமல் இருக்க வேண்டும். நிலையான பக்தியும், அன்பும் எப்போதும் தரவேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மதுவும், சூதாட்டமும், முன்கோபமும் என்னிடம் வரவே கூடாது. சக்குளத்துக் காவிலம்மா! இனி என் வாழ்நாளை உன் சரண கமலத்தில் சமர்ப்பிக்கிறேன். ஒருபோதும் உன் திருநாமத்தை நான் மறக்க மாட்டேன். அன்பு நிறைந்த தேவி! என்னை உன் குழந்தையாகக் கருதி காத்தருள வேண்டும்.

இந்தப் பிராத்தனையை தினமும் சொல்பவர்களும், கேட்பவர்களும் சகல பாவங்களும் தீர்த்து மோட்சம் அடைகிறார்கள்.

சக்குளத்து தாய் தந்த தாலி
(ஆர்.கே. நம்பூதிரி)

சம்சார பந்தத்தின் வரம்புகளைக் கடந்து ஆன்மிகம் நம்முள் எப்போது குடிபுகுகிறது என்பது, ஒருவரும் சொல்ல முடியாத ஒன்று. இந்த பூமியில் பலவித துர்பாக்கியங்களில் சிலவற்றை நாம் அனுபவித்தே தீரவேண்டிய நிலை சில சமயம் உண்டாகும். தீர்மானிப்பவள் சர்வேஸ்வரியே.

அம்மாவின் மகாசக்தியால் இதுமாதிரி சில அனுபவங்களும், அனுக்கிரகங்களும் நான் கண்டறிய முடிந்தது. இந்த மாதிரி விஷயங்களை ஒருபோதும் சொல்லக்கூடாது என்று நினைத்தாலும், சந்தேக முள்ளவர்களின் நிவர்த்திக்காகவும் அவர்களுடைய மனதில் தேவியின் சக்தியைப் பற்றி நம்பிக்கை கூடுதலாகும் என்றும் நினைத்து சிலவற்றை எழுதுகிறேன்.

சிறு வயது முதல், சக்குளத்தம்மாவை மனதில் துதித்து, நாமங்கள் சொல்லி வளர்ந்துவந்த ஒரு எளிமையான பக்தனாக இருந்தேன். தேவியை பூஜை செய்யும் வாய்ப்பு எத்தனையோ நாட்கள் எனக்குக் கிடைத்தது. அபிஷேகம் முடிந்து கதவடைத்து கொஞ்சநேரம் தேவியை பிரார்த்திப்பது எல்லா நாட்களிலும் எனக்கு வழக்கமாய் இருந்தது.

தேவி பாகவதத்தில் சொல்வதுபோல், சரணம் அடைந்தவர்களுக்கும், தீனர்களுக்கும் என்றும் சரணமளிக்கும் சாஷாத் நாராயணியே தேவி. அந்த தேவியிடம், நான் வேண்டிக் கொள்வேன், "அம்மா, ஜகதாம்பிகே, சர்வ சராசரங்களுக்கும் துக்கங்கள் மாற்றி சுகங்கள் தரவேண்டும்!" தீராத வியாதியைத் தீர்க்க வேண்டும்! எல்லோருக்கும் களங்கமில்லாத பக்தியைக் கொடுக்க வேண்டும்! உன்னை வேண்டியும், அர்ச்சனைகளும், வழிபாடுகளும் செய்யும் பக்தர்களுக்கு எல்லா பாக்கியங்களையும் கொடுக்க வேண்டும். சரியான முறையில் பூஜிக்கவும், பிரார்த்திக்கவும் எனக்குத் தெரியாது. என்றாலும் என் பூஜைகள் இந்த உலகத்துக்கு நன்மையை உண்டாக்க வேண்டும்."

இப்படிச் சொல்லி சாஷ்டாங்க நமஸ்காரம் செய்த பிறகுதான் கதவுகளைத்

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

திறக்கிறேன். பூஜாரிகளான என் சகோதர்களும் இப்பொழுதும் இப்படித்தான் செய்கிறார்கள்.

ஒருநாள்... இப்படி நடையடைத்து விட்டு பிரார்த்தித்துக் கொண்டிருந்த போது... மூல விக்ரகத்தில் சாத்தியிருந்த ஒரு தாலி, பீடத்தில்தெறித்து விழுந்தது. அங்கிருந்து என் மடியில் விழுந்தது. ஒருவேளை, தேவி எனக்குத் தந்ததாயிருக்குமோ, இந்தத் தாலி! நான் அதை எடுத்து, என் பூணூலில் கட்ட நினைத்தேன். தந்தை திட்டுவாரோ என்ற பயம்! அதனால், கோவிலின் முற்றத்தில் ஒரு மூலையில் அந்தத் தாலியை புதைத்து மூடிவைத்தேன்.

நாட்கள் கடந்தன. நடந்தவை முழுவதும் மறந்துவிட்டது. வாழ்கையின் பல கவலைகளில் அலைந்து கொண்டிருந்தேன். பல அங்கலாய்ப்புகள்! கல்வி மிகவும் குறைவு. பெரிய வேலைக்கு வாய்ப்பு ஒன்றுமில்லை. கேரளாவை விட்டு வெகுதூரம் ஒரிஸ்ஸாவில் சின்னச்சின்ன வேலைகள் செய்து பிழைத்து வந்தேன். சம்பளம் குறைவுதான். பலதும் நஷ்டப்பட்டது. ஒன்று மாத்திரம் தான் நான் நிலையாக சம்பாதித்திருந்தேன். அது, தேவியிடமுள்ள பக்தி! வாழ்க்கைக் கடலில் என் ஓடத்தை பக்திதான் காப்பாற்றியது.

எத்தனையோ முறை தேவியைக் கூப்பிட்டேன். பலப்பல நாமங்கள் சொல்லி தியானித்தேன். இல்லாவிட்டால் ஒரு வெள்ளிக்கிழமையன்று அந்தக் கனவை நான் கண்டிருக்க முடியுமா? ஆமாம்! ஒரு பெரிய பாம்பு, ஒரு தாலியைக் கொண்டு வருவதாய் நான் கனவு கண்டேன். மற்றொரு வெள்ளிக்கிழமையும் அதே கனவு! பலமுறை கனவு தொடர்ந்தது. "இது நீ மறைத்து வைத்த தாலி" என்று பாம்பு சொல்வது போல் தோன்றியது.

என்ன அற்புதம்! பாம்பின் உருவம் மாறி, வயதான பெண்மணி அதிமதுரமான குரலில் என் காதில், "குழந்தாய், நீ முன்பு குழித்து மூடி வைத்த தாலிதான் இது. உனக்கு நான் தந்த இந்தத் தாலியை மறந்துவிட்டாயா? இதில் என் அம்சம் இருக்கிறது. இதைப் பரிசுத்தமாய், ஜாக்கிரதையாய் காப்பாற்றிகொள்!" சொன்னாள். பழைய கதை எனக்கு நினைவு வந்தது.

என்னை அறியாமலே நான் கேட்டேன், "அம்மா! பகவதி, இந்தத் தாலியை நான் கழுத்தில் அணிந்து கொள்ளவா?" வாத்சல்யம் நிறைந்த ஒரு சம்மத பாவத்துடன் தேவியின் வடிவம் மறைந்தது.

ஏதோ புண்ணியத்தினால் வெள்ளிக்கிழமை இரவு நான் கண்ட திவ்யமான தேவியின் உருவம் என் முன் ஜன்மத்தின் நினைவுக் குறிப்புகளாய் என் முன்னால் தோன்றுகிறது. ஏதோ சாத்வீக சத்யம் என்னில் நிறைந்தது. "உன்னுடைய வழி,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேறென்று! அந்தப் பாதை பரிபூர்ண்மாக தயாராக இருக்கிறது."

நான் ஒரிஸ்ஸா வேலையை விட்டுவிட்டேன். இன்னதென்று புரியாத ஒரு குரலின் ஒலி கேட்டு நான் நாடு திரும்பினேன். பல வருஷங்களுக்கு முன்னால் கோவிலின் முற்றத்தில் குழித்து மூடியிருந்த தாலியை எடுப்பதற்காக நான் தோண்டினேன். அந்தக் குழியில் படுத்திருந்தது, தங்க நிறமான ஒரு பாம்பு! பயந்துபோய் குழியை மூடிவிட்டு வீட்டுக்கு போனேன். மறுநாள் காலை தேவியின் காலில் விழுந்து வணங்கி தாலியைப் பார்க்கப் போனபோது, ஆச்சர்யம்! ஓர் இலை மீது வைக்கப்பட்டிருந்தது பளிச்சிடும் தாலி! மனதில் தேவியின் ஆயிரம் நாமங்கள் உயர்ந்து எழுந்தபோது நான் அஞ்சலி செலுத்தி நின்றேன். அந்த தாலியை, பக்தியுடன் கயிற்றில் கோத்துக் கட்டிக் கொண்டேன்.

மூன்று வாரம் பலவித சோதனைகளாயிருந்தது. உடலும் மனமும் தளர்ந்து போய்விட்டதோ! என்ற எண்ணம். தேவியின் உருவத்தை மனதில் கொண்டு நாமத்தை நாவால் ஜபித்து, அந்த நாட்களைக் கழித்து வந்தேன். அற்புதமான ஞானம் என்னைக் கவர்ந்தது போல் தோன்றியது. அமைதியும், உற்சாகமும் எனக்குத் திரும்பக் கிடைத்ததுபோல் தோன்றியது. எங்கு பார்த்தாலும் தேவியின் திருஉருவமே தெரிகிறது. எந்த வாக்கியத்திலும் தேவியின் நாமம்தான் கேட்கிறது.

அதற்கு பிறகுதான் வெற்றிலை ஜோதிடத்தில் நிறைய ஈடுபடுவதற்கும், பலரையும் கெட்ட பழக்கத்திலிருந்து மாற்றுவதற்கும் என்னால் முடிந்தது! இன்றும் தேவி கனிவுடன் தந்த அந்தத் தாலியை அணிந்திருக்கிறேன். ஏதோ புண்ணியத்தினால், தேவியின் திருக்கையில் ஒரு நிமித்தமாய் மாறும்போது ஏதோ திவ்யதாரையில் அத்தாலியின் சைதன்யம் எனக்குள் நிறைகிறது. எல்லாம் தேவியின் கடாக்ஷம்தான்.

காட்டு யானையிடமிருந்து காத்தாள் பகவதி (ஆர்.கே.)

ஒரு காலத்தில், வளமாக இருந்த எங்கள் குடும்பம், நடுவில் வறுமை என்னவென்று அறியத் தொடங்கியது. பணத் தட்டுப்பாடு அதிகமாக இருந்தது. என் சிறு வயதில், தரித்திரம், துக்கம் என எல்லாவித கொடுமைகளையும் எத்தனையோ நாட்கள் அனுபவித்திருக்கிறேன். இருள் அடைந்த அந்த நேரத்திலும், பிரகாசமாக விளங்கியது ஒன்றுமட்டும். ஆமாம், உலகத்தை விளையாட்டுப் பொருளாக மாற்றுகிற தேவியின் நாமமும், வடிவமும் மாத்திரமே என் சுவாசமாக இருந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஏ கிருஷ்ணா, மீண்டும்மீண்டும் எனக்கு துக்கத்தைத் தருவாய்!' என்று குந்திதேவி பிரார்த்தித்ததாக கேள்விபட்டிருக்கிறேன். துன்பங்கள் நம்மை தெய்வத்தோடு நெருங்கச் செய்கின்றன.

பணத்தட்டுபாடு அதிகமாயிற்று. வாழ ஒரு வழிதேடி, வேலை தேடிப் போனேன். ஒரிஸ்ஸாவில் சின்னச்சின்ன வேலை, கொஞ்சம் சம்பளம். மூன்று வேளை உணவுக்குக் கூட பத்தாத நிலை. குசேலனைப் போலவும், வனவாசத்தில் பாண்டவர்களைப் போலும் நாட்களைத் தள்ளி வந்தேன்.

இப்படி இருக்கும்போது, ஜே.கே. பேப்பர்மில் கம்பெனிக்காக, மூங்கில் சேகரிக்கின்ற காட்டில் வேலை. ஒரிஸ்ஸா சம்ஸ்தானத்தில் 'புல்பாளி ஜில்லாவில் கோட்டுகாடு என்ற இடத்தில் காட்டிற்குள் இருந்தது வேலை. அந்த சமயத்தில், பல கிராமங்களில் அலைந்தேன். கேஸரிகுடா, கண்டியாகுடா, ஸ்வரூபத்தர், ரெடிகுமா, ஸூப்பாமா, அடிப்பத்தர் போல எத்தனையோ கிராமங்கள். பயங்கர விலங்குகள் வசிக்கும் காடுகளின் வழியே அலைய வேண்டி வந்தபோது, வாழ்கையில் எல்லாமே போய்விட்டதுபோல் ஓர் உணர்வு, மரணத்தின் நினைவு தழுவுவதுபோல் ஓர் அவஸ்தை. ஆனால், வாழ்வில் பகவான் இச்சைப்படி எதையும் அனுசரிப்பதுதானே மனித தர்மம்?

ஒருநாள், காட்டாளர்களுடன் வேலை இடத்திற்குப் போக வேண்டி வந்தது. நடுப்பகலில் கூட இருட்டாக இருந்தது. காட்டின் ஆழ்ந்த இடத்தில் நடந்துபோய்க் கொண்டிருக்கிறோம். நரிகளின் சப்தமும், கடுவா, கரடி போன்ற பயங்கர மிருகங்களின் அலறுதலும் பயத்தை அதிகரித்தது.

கரடி கடித்துத் துப்பிய பீடி இலைகளும், கிந்து என்ற மரத்தின் பழங்களும் வழியெங்கும் சிதறிக் கிடந்தது. வனக்காவலர்கள் முன்னறிவிப்பு தந்தார்கள். காட்டு யானைகள் ஆபத்துகளைத் தரும், ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். எப்போதும் நான், தேவியைப் பிரார்த்தித்த பிறகுதான் யாத்திரை புறப்படுவேன். அன்று எதனாலோ அந்தமுறை தவறிப் போயிருந்தது. அது மனதில் பயத்தை அதிகரிக்கக் காரணமாக இருந்தது.

மனம் ஒரு நிலையாக இல்லை. நான் தேவியை நினைக்க மறந்துவிட்டேன். மன்னித்தருள்வாய்! என்று தியானித்துகொண்டே ஓர் அருவியைக் கடந்து முன்னேறினேன். எங்கிருந்தோ ஒரு குரல், "குழந்தை நீ திரும்பிப் போ" என்றது. அதை அலட்சியப்படுத்திக் கொண்டு முன்னால் நடந்தேன். பிறகு பயங்கரமான அந்தக் காட்டில் ஒரு மலையின் ஏற்றம் தெரிந்தது. ஒருபுறம் மலை, மறுபுறம் பயங்கர பாதாளம்.

என்கூட இருந்த ரோடிஷா, கிர்தோ, நிஸுங்காமாஜி, விருந்தாவன் முதலிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பல ஆட்களும் ஒரு மாமரத்தின் அடியில் மாங்காய் பொறுக்கிக் கொண்டிருந்தார்கள். கூட உள்ளவர்களை விட்டுவிட்டு நான் மட்டும் முன்னால் போனேன். சிறிது தொலைவு போனபோது சமதளமாயிருந்தது ஓர் இடம். ஓய்வெடுக்கத் தகுதியான இடம். அங்கு நெருங்கியதும், திடீரென்று நாலு பக்கமும் திடுக்கிட வைக்கும் ஓர் அலறல் கேட்டது.

மூடுபனியின் காரணமாக முதலில் ஒன்றும் கண்ணுக்கு தெரியவில்லை. ஆனால், உடனேயே அந்தத் திடுக்கிட வைக்கும் சத்தத்தை புரிந்துகொண்டேன். எனக்கு மிகவும் அருகில், குரூரமான கண்களுடன் பெரிய யானை ஒன்று வந்து கொண்டிருந்தது. பயத்தில் என் காலும், கையும் செயலற்று விட்டது! "ஓடு!" என்று என் முதுகில் தட்டி யாரோ சொல்வதுபோல் தோன்றியது. எல்லாவற்றையும் எறிந்து விட்டு ஓடத் தொடங்கினேன்.

மிக நெருக்கத்தில் பின்னால் வந்தது, அந்த ஒற்றையானை. அதன் பிளிறல், காட்டைப் பிளந்தது. அரை கிலோமீட்டர் வரை ஓடினேன். வழிமுடிந்து விட்டதுபோல் தோன்றியது. பரிதவித்து நின்றபோது, இடதுபக்கம் ஆழமான ஒரு குழி தென்பட, ஒன்றும் யோசிக்காமல் அந்தக் குழியில் குதித்தேன். என்னை அறியாமல், "சக்குளத்தம்மா சக்தி ஸ்வரூபிணி" என்று அலறினேன்.

அம்மாவின் அனுக்ரகத்தினால், அருவிக் கரையிலுள்ள கருங்கற்களுக் கிடையே மண் திட்டையில் நான் விழுந்தேன். மண் திட்டையில் என் வலதுகை ஒரு கல்லின் இடுக்கில் சிக்கியது. ஒற்றையானை அருவியிலிருந்து சாய்வான பாகத்திலிறங்கி வந்தது. கையை சிரமப்பட்டு எடுத்தேன், அடுத்திருந்த கரையில் சில வேர்கள் தெரிந்தது. அதைப் பிடித்துக் கொண்டு, மரத்தில் ஏறினேன். அடிப்பத்தர் என்ற கிராமத்தின் ஒரு பாகம் அது. யானையின் சப்தமும் என் நாமஜபமும் கேட்டு காட்டாளர்கள் ஓடி வந்தார்கள். அவர்கள் சத்தம் ஏற்படுத்தி யானையை விரட்டினார்கள்.

கிராமத்தை அடைந்த நான் தலைசுற்றி விழுந்தேன். மயக்கம் தெளிந்தபோது இனம்புரியாத பயம் என்னை ஆட்கொண்டது போல் தோன்றியது! இரவு முழுவதும் அவஸ்தைப்பட்டேன், நான். அழுதுகொண்டே தேவியிடம் முறையிட்டேன், "உன் சோதனைகளை என்னால் தாங்க முடியவில்லை. நீ சோதனை செய்தாலும் உன் பாதாரவிந்தங்களை நான் விடப் போவதில்லை. உன் நாமத்தை ஜபித்துக் கொண்டே நான் இறந்தாலும் நான் தன்யனாவேன்" எனத் துதித்தேன்.

பின்னிரவில் சிறிது உறங்கினேன். சாதாரணமாக இல்லாமல் அந்த உறக்க மயக்கத்தில் நான் ஒரு காட்சியைக் கண்டேன். என் பாட்டியைப்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

போல் ஓர் உருவம் தோன்றியது. முன்பாக வந்து அவள் கேட்டாள், "குழந்தாய், இதெல்லாம் தேவியின் திருவிளையாடல். நீ தேவியை வெறுக்கிறாயா?"

எனக்கு பக்தியும், நம்பிக்கையும் தரவேண்டும் அம்மா! என பிரார்த்தித்தேன். தீராத துக்கம் வந்தாலும் என் பக்தி வளர வேண்டும் என்று அழுதுகொண்டே சொன்னேன். ஒரு நிமிடத்தில் காட்டானையால் மிதிபட்டு மரணமடைந்திருக்க வேண்டிய நான், கொடூரமான வனத்தில் அற்புதகரமாய் தேவியால் காப்பாற்றப்பட்டேன். மரணத்தை கண்முன்னால் காட்டி, களங்கம் தீர்த்து என்னைக் காப்பாற்றிய தேவியின் திருப்பாத கமலங்கள்தான் இந்த அடிமையின் பாக்கியம்.

என்னைப் பரிசோதித்து, கண்ணீரின் உப்பும், உயிரின் கசப்பும் தோன்றச் செய்தது. தேவி வேண்டுமென்றே செய்ததுபோல்தான் தோன்றியது. மீண்டும் ஒரு தாலி தந்தது போல் தோன்றியது. வெகுதூரத்திலிருந்து என்னை சக்குளத்து காவில் வரச் செய்தாள். என்னை அன்னையின் திருப்பாத சேவகனாக மாற்றியது, ஈஸ்வரியின் லீலைதான்.

அற்ப புத்தியுள்ள நாம் மூடர்கள். அம்பிகையின் கையில் இருக்கும் பொம்மைகள்தான் நாமெல்லாம். விஸ்வ ஸ்வரூபிணியான தேவியின் முன்பு, அந்தக் கோவில் நடையில் நிற்கும்போது ஒன்றே ஒன்றைமட்டும்தான் கேட்பேன், "தேவி இனியும் ஒரு ஜன்மமுண்டாவதானால் என்னை உன் நித்திய பக்தனாக்குவாய்!"

அன்னையை வணங்கும் அயல்நாட்டுக்காரர்

சக்குளத்துதேவி விளங்கும் தலத்தின் சுற்றுப்புறம், என்றும் தேவியின் திவ்யசக்தியால் சோபித்துக் கொண்டிருக்கிறது. கண்ணாடிபோல் தெரியும் கோவில் குளம், சாமரம்போல் வீசுகின்ற மரங்கள், தேவியின் திருவடிகளில் விழுந்து கும்பிடுவதுபோல் அமைந்த அழகான செடிகொடிகள், இயற்கையின் அழகியதோற்றம், பழங்காலத்துக் கோவில் என சுற்றுபுறங்களில் தேவியின் அருட்கடாட்சம் நிறைந்து நின்றிருக்கிறது.

ஒருசமயம் கோவிலின் சுற்றுப்புறத்தில் சில பரதேசிகள் தங்கியிருந்தார்கள். அவர்களுடன் மலையாளி ஒருவரும், அவர் மனைவியும் இருந்தார்கள். வெளிநாட்டுக்காரர் ஒருவருக்கு இந்தக் கோவிலின் பூஜை நாமஜபம் விசித்ரமாக தோன்றியது, கல்லை பூஜை செய்யும் இந்த முட்டாள்தனத்தை என்ன சொல்வது என்று ஆங்கிலத்தில் அவன் சொன்னான். இதெல்லாம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மூடநம்பிக்கை, வெறும் முட்டாள் தனம் என்று சிரித்தான்.

'பட்டமனை' வீட்டிலிருந்து பக்தியும், பொறுமையும் நிறைந்த வயதான ஒருவர் வந்திருந்தார். அவர், தேவிக்கு எப்போதும் பூஜை செய்பவர். சிறந்த தேவி பக்தர். தேவியின் பூஜாரியாகவும் அவர் இருந்தார்.

பரதேசிகளின் கூட வந்த மலையாளியிடமிருந்து அவருக்கு வெள்ளைக்காரனின் வார்த்தை புரிந்தது. அவர், அவனிடம் சொன்னார், "இது வெறும் கல்லில்லை. சக்தி ஸ்வரூபிணியான சாக்ஷாத் துர்க்காதேவியின் கடாட்சம் நிறைந்த விக்ரஹம் இது".

"அப்படியானால், இந்தக் கல்லை உடைத்து தூர எறிவேன்" என்றான் வெள்ளையன். வயதான பூஜாரி, பொறுமையுடன் உபதேசிக்க முயன்றார். "தூணிலும், துரும்பிலும், என்னிலும், உன்னிலும், தெய்வம் அடங்கியிருக்கிறது. எல்லா இடத்திலும் எனக்கு தேவியை காணமுடிகிறது. பராசக்தியான துர்க்காவின் சங்கல்ப பிரதிஷ்டைதான் இது" என்றார்.

வெள்ளைக்காரன் குலுங்கிச் சிரித்தான்!

"துர்க்கையாகவும், சரஸ்வதியாகவும், சாமுண்டியாகவும், பராசக்தியாகவும், சிவனாகவும், விஷ்ணுவாகவும் நாங்கள் ஆராதிக்கிறோம்" என்றார் திருமேனி. "ஒருசிலரால் பார்க்க முடியாததை வேறு சிலரால் பார்க்க முடியும். அதனால், பக்தர்களின் விசுவாசத்தை போக்கடிக்காதே" என்றார்!

ஆனால், இந்த உபதேசமெல்லாம் நீர்மேல் எழுத்தாகியது. குரூரமான கேள்விகள் கேட்டு, மீண்டும், மீண்டும் கெட்ட வார்த்தைகள் உபயோகித்து பழித்து வந்தான் அவன்.

திருமேனி, கோவிலின் முன்பு நின்று தியானத்திலிருந்தார். அவர் கண்களிலிருந்து கண்ணீர் ஒழுகிக் கொண்டிருந்தது. தான் உபாசனை செய்யும் தேவியை அஞ்ஞானியான ஒருவன் திட்டுவது அவர் மனதைப் புண்படுத்தியது.

பெரிய காரியம் சாதித்து விட்டதைப் போன்ற திருப்தியுடன் அவன் திரும்பிப் போக ஆரம்பித்தான். அவனுக்கு திடீரென்று தலைசுற்றல் வர, மரத்தடியில் சிறிதுநேரம் இளைப்பாறினான். திரும்பவும் நடக்க முயன்றபோது கால் தடுக்கி விழுந்தான். ஒரு கல்லில் மண்டை இடித்து, நெற்றியிலிருந்து ரத்தம் வரத் துவங்கியது. யாரோ தன்னை மேலே தூக்குவதும், கீழே எறிவதுமாக அவனுக்குத் தோன்றியது. பைத்தியம் பிடித்ததுபோல் அலறினான். மனதில் தேவியின் மூலவிக்ரகம் தோன்றி அதிலிருந்து தீப்பிழம்புகள் புறப்பட்டு அதன் நடுவிலிருந்து ஏதோ ஒரு சக்தி தன்னைப் பிடித்து உலுக்கிதாய்க் கண்டான். உடம்பில் ஒரே எரிச்சல். ஓடிப்போய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தண்ணீரில் குதித்தான். எங்கு பார்த்தாலும் தேவியின் விக்ரகம். எங்கிருந்தோ ஒரு குரல். நான் கல்லில் இருக்கிறேன்!' இதைக்கேட்டு பைத்தியம் போல் கத்தினான். "நான் கல்லிலிருக்கிறேன். நான் கல்லிலிருக்கிறேன்!"

உடனிருந்த பரதேசிகளும், அவன் மனைவியும் கதற ஆரம்பித்தனர். தேவியின் கோபம்தான் அவனை ஆட்டுவிக்கிறது என்பது அவர்களுக்குப் புரிந்தது. இதற்கிடையில் அவன், கோவில்முன் சென்று தலையிலடித்துக் கொண்டு, "என்னைக் காப்பாற்று தேவி, என்னை மன்னித்துவிடு தேவி" என்று இடைவிடாது கூவினான்.

ஓர் அசரீரி வாக்கு கேட்பதாகத் தோன்றியது, "நீ மூன்று நாள் இங்கு விரதமிரு!" ஒளிவட்டத்துக்குள் தேவி தோன்றுவதைக் கண்டான். "நீ இல்லை என்று மறுத்த எல்லா நாமங்களிலும் நான் அடங்கியிருக்கிறேன். விஷ்ணுவும், சிவனும், பிரம்மாவும், சரஸ்வதியும், லக்ஷ்மியும், பார்வதியும் நான்தான்.

எந்த விதத்தில் என்னை தியானித்தாலும் என் பக்தர்களுக்காக நான் காட்சி தருகிறேன். எண்ணிலடங்காத என் நாமங்களும், வர்ணனைக்கு அப்பாற்பட்ட என் வடிவங்களும் மூடர்கள் அறிவதில்லை. என்னை உணர்ந்தவர்கள், என்னிடம் அபயம் தேடுகிறார்கள். நீ அகம்பாவத்தோடு இருந்தாலும், அபயம் கேட்டதனால் உன்னை நான் விட்டிருக்கிறேன்" என்றாள் தேவி.

கனவிலிருந்து எழுந்தாற்போல் உணர்ந்தான் அவன். அபூர்வமான ஏதோ ஒரு சக்தி தன்னைத் தடவியதால் தனக்கும் மறுஜன்மம் கிடைத்தது போல் உணர்ந்தான். தன் அறிவில்லாத செய்கைக்கு மனம் நொந்து, தேவியிடமும், பூஜாரியிடமும் மன்னிப்புக் கேட்டான். சாதுவான பூஜாரி சொன்னார், எல்லா மதத்தவரும் ஒரே சக்தியை அடையத்தான் பல வழிகளிலும் வந்து சேருகிறார்கள். பல நதிகளும் கடலில் வந்து சேருவதைப்போல. நீ சந்தோஷத்தோடு போய்வா!"

கடலுக்கு நடுவேயும் காப்பாள் அன்னை

நீண்ட நாட்களுக்கு முன்பாக, கொச்சி கடற்கரையில் நிகழ்ந்த ஒரு சம்பவம்.

அடைமழை, கொந்தளிக்கும் கடல். மீனவர்கள் குடிசையிடையே ஒரு வெளிச்சம். கமலாக்ஷி, ராந்தல் விளக்கின் திரியை சிறிது உயர்த்தினாள். நடுநிசியாகியும் பப்பன் வரவில்லை. "கடற்கரையில் அவன் குடித்துக் கொண்டிருப்பான்." கடையில், கமலாக்ஷி கஞ்சிக் கலயத்துடன் இரண்டாவது மகன் அப்புவிடம் சொன்னாள். அவளுடைய ஒரே மகன் அப்பு. நான்கு வருடமாக கை, கால் தளர்ந்திருக்கிறான். கண்ணும் தெரியாது. பேசவும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியாது. மூத்தபெண் ஒன்பதாம் வகுப்பும், மூன்றாவது பெண் மூன்றாவது வகுப்பும் படிக்கிறார்கள்.

அப்புவிற்காக கமலாக்ஷி போகாத கோவிலில்லை. தேவாலயமும் இல்லை. எல்லா இடத்திலும் பிரார்த்தனை செய்து பார்த்தாள். ஆனால், ஒருவிதத்திலும் அப்புவை நல்லபடியாக்க முடியவில்லை. பல டாக்டர்களிடத்திலும் காட்டினார்கள். ஒரு பலனும் இல்லை. பின்பு கடற்கரையிலுள்ள கல்யாணி சொன்னாள், "நீரேற்றுபுரத்திலுள்ள சக்குளத்துகாவிற்கு போய், பூஜாரியிடம் எல்லாம் சொல். உன் மகனின் நிலைமை மாறும்" என்றாள்.

"நீ தைரியமாகப் போ. சக்குளத்து தேவி, பல அற்புதங்களைக் காட்டுகிறாள். மனம் திறந்து தேவியைக் கூப்பிடு. உடன் வருவாள். கூப்பிட்டவருக்கு அபயம் தருகிறாள் என்று சொல்கிறார்கள்" என்றும் சொன்னாள்.

இதைக்கேட்ட கமலாக்ஷி, "நாளைக்கே நான் அங்கு போகிறேன். கணவனிடம் கேட்டால் சம்மதிக்க மாட்டான். பரிகாசம் செய்வான். எனவே, போய் வந்தபிறகு விபரம் சொல்லிக் கொள்கிறேன்" என்றாள்.

அன்று இரவு, மிகவும் தாமதமாக வந்தான் பப்பன். மிகவும் குடித்திருந்தான். சாப்பிடவுமில்லை. கமலாஷி அவனிடம் பணம் கேட்டாள். அப்பு விஷயமாக ஒரு இடத்திற்கு போகிறேன் என்றாள். அதற்கு பப்பன், "உனக்கு வேறு வேலையே இல்லையா? எல்லோரும் கைவிட்ட இவன் நிலை, இனிமேல் மாறாது. வீணாகப் பணத்தை செலவு செய்யாதே! கடலில் எத்தனை முறை வலை எறிந்தால் 100 ரூபாய் கிடைக்கும்! தெரியுமா? அதனால் பணத்தை விரயமாக்க, நான் ஒரு காசு கூட தரமாட்டேன்!" என்றான்.

கமலாஷி கெஞ்சினாள். கடைசியில் வெறும் 100 ரூபாயை வெறுப்போடு தந்தான் பப்பன். மறுநாள் பப்பன் மீன் பிடிக்கச் சென்ற பிறகு, கமலாக்ஷி குளித்து சுத்தமாக சக்குளம் சென்றாள்.

அன்னையின் சன்னதி முன்நின்று, "அம்மா எனக்கு அனுக்ரகம் தா!" என வேண்டினாள். கல்யாணி சொன்னபடி பூஜாரியைப் பார்த்தாள். அவரிடம் எல்லா விபரங்களையும் சொன்னாள். பூஜாரி, கமலாக்ஷியை ஆசுவாசப்படுத்தினார். "தேவி மீது மனதார நம்பிக்கை வை. இருபத்தெட்டு வெள்ளிக்கிழமைகள் விரதம் மேற்கொள். இந்த எண்ணெயையும், விபூதியையும் உன் மகனுடைய உடலில் தேய்த்து விடு. தைரியமாய் போ. தேவி எப்போதும் துணை இருப்பாள்!" என்றார்.

தேவியை தரிசித்துவிட்டு திரும்பினாள். மாலை வீட்டுக்குச் சென்று பப்பனிடம் விபரம் சொன்னாள். அவனுக்கு நம்பிக்கை ஒன்றும் ஏற்படவில்லை. பூஜாரி சொன்னதுபோல் விபூதி, எண்ணெயை தேய்த்து வந்தாள். தயங்காமல்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விரதமும் இருந்தாள். எல்லா வெள்ளிக்கிழமையும் சக்குளம் போனாள். முதல் வெள்ளிக்கிழமையன்று தினவழிபாடு வேளையில் குழந்தையை கோவில் நடையில் படுக்க வைத்தாள். சுற்றும் மறந்து, 'அம்மா' என்று அலறி விட்டாள். அற்புதம் நிகழ்ந்தது. குழந்தை 'அம்மா' என்று முதன்முறையாகக் கூப்பிட்டது. மூன்று நாட்களில் முழுகுணம் அடைந்தான் அவள் மகன்.

இதைத் தொடர்ந்து பப்பனுக்கு மனத்திருப்பம் உண்டாயிற்று. கெட்டபழக்கத்தையெல்லாம் விட்டு தேவியை மிகவும் நம்பினான். இன்றும் மீன் பிடிக்கப்போகும்போது தேவியின் திருவுருவை கும்பிட்டு விட்டுத்தான் போவான். கடலம்மனும், சக்குளத்தம்மனும் ஒன்றுதான் என்பது அவனுடைய நம்பிக்கை.

ஒருசமயம், மீன்பிடிக்க பப்பன், கடலுக்குள் போனபோது, அபரிமிதமான காற்று, மழை வந்து கடல் திடீரென்று கலங்கியது. நண்பர்களெல்லாம் கரைக்கு வந்துவிட்டார்கள். ஆனால், பப்பன் வரவில்லை. அவன் ஆழ்கடலில் இருந்தான். மிகுந்த காற்று, ஓடம் வட்டமிடுகிறது. கடல் கொத்தளிக்கிறது. எந்த நிமிஷமும் தான் இறந்து விடுவொமென்பது புலனாயிற்று பப்பனுக்கு.

மரணத்தோடு போராடிக் கொண்டிருப்பதற்கு இடையில் சக்குளத்தம்மா, துர்க்காதேவி, கடலம்மா என வாய்விட்டு அலறினான். கரைக்கு வந்தவர்கள், பப்பன் இறந்துவிட்டானென்று அறிவித்தார்கள். மனைவியும், மக்களும் அதை நம்பவில்லை. சக்குளத்தம்மா அவனைக் காப்பாற்றுவாள் என நினைத்தார்கள்.

'அம்மா துர்க்காதேவியே, சக்தி ஸ்வரூபிணியே என் கணவனைக் காப்பாற்று! மகாமாயே அற்புத சக்திகளைத்தரும் தேவியே, என் குழந்தைகளுக்கு தந்தையைத் திரும்பக்கொடு!' என்று தேவியின் படத்தின்முன் கதறியழுதாள். திடீரென்று, படத்திலிருந்து ஓர் ஒளி கடலில் பாய்வதாகத் தெரிந்தது. பப்பன் தன் நினைவு இல்லாமல் ஓடத்தில் கவிழ்ந்து கிடந்தான். அவன் மனதில் சக்குளத்தம்மாவின் உருவம் தெரிந்தது. யாரோ ஆணையிட்டது போல கடல் சாந்தமடைந்தது.

பப்பனுடைய இறந்த உடலாவது கிடைக்குமா என்று பார்க்க நண்பர்கள் வந்தார்கள். ஆனால், ஒரு விபரமும் தெரியவில்லை. அவன் குடும்பத்தினர் கடற்கரையில் நின்றார்கள். கடல் சாந்தமானபோது பப்பனுக்கு மயக்கம் தெளிந்தது. கண்திறந்து பார்த்தபோது அழகான பெண்ணொருத்தி கடலிலிருந்து தோன்றி மறைவது தெரிந்தது. அவன் பசி, தாகம் எல்லாம் போய்விட்டது. அவன் ஓடம் கரையை அடைய நகர்ந்தது. ஜனங்கள் அவன் இறந்து விட்டானெனக் கருதி கரையில் நின்றார்கள்.

கமலாக்ஷி, நம்பிக்கையோடு கணவன் வரவை எதிர்பார்த்துக் காத்திருந்தாள். எல்லோரையும் திகைப்பிலாழ்த்தி பப்பன் ஓடம் கரைசேர்ந்தது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எவராலும் நம்பமுடியவில்லை. சக்குளத்தம்மா காப்பாற்றினாள் என்று பப்பன் சொன்னான்.

சக்குளத்தம்மா கூப்பிட்டவுடன் ஓடி வருபவள், அவளே எங்கள் பிரார்த்தனையைக் கேட்டாள் என்றாள். எல்லோரும் தேவியைத் துதித்தார்கள். பப்பன் குடும்பத்தோடு சக்குளம் சென்றாள். திருமேனியைப் பார்த்து நடந்ததையெல்லாம் கூறி தேவியை துதித்தும் பாடினார்கள்.

பக்தர்களை காக்கும் சக்குளத்தம்மா, ஜகதீஸ்வரி எல்லா ஆபத்திலிருந்தும் காப்பாற்றும் தேவி! எல்லோரையும் என்றும் காப்பாற்றுவாயாக!

போதை மாற்றி, நல்ல் பாதை காட்டும் தேவி

குடிகாரனும், கெட்டவழியில் செல்பவனுமான கணவனின் தொல்லை சகிக்க முடியாமல் அவன் மனைவியும், மக்களும் வேதனை அடைந்தார்கள். அவனது வயதான தாயாரும் மகனின் செய்கைகளால் துயரம் அடைந்திருந்தாள். தாய், மனைவி, மகள், மகன் எவரையும் அவன் சும்மாவிடவில்லை.

சண்டைகள் மாத்திரமல்ல, வியாதியும், தரித்திரமும் கூட குடும்பத்தைப் பாதித்தது. முழுவதுமாக சீர்குலைந்தது. பல நாட்கள் சாப்பிடுவதற்கு ஒன்றுமில்லாமல் திண்டாடினார்கள். மனைவி மிக சிரமப்பட்டுக் கொண்டுவரும் பணத்தையும் சீரழித்தான். பட்டினியும், வியாதியும், மனவேதனையுமாக வயதான தாயார் இறந்தாள். குழந்தைகளின் எதிர்காலமும் சீர் குலைந்தது. தற்கொலைக்குத் தயாரானாள் மனைவி. எல்லாவிதத்திலும் அவள் விரக்தியடைந்த சமயத்தில், சக்குளத்து காவிலம்மாவின் பக்தை ஒருத்தி அவளுக்கு ஆறுதல் சொன்னாள்.

அவளும் சக்குளத்து காவிலம்மாவின் நாமஜபத்துடன் வெள்ளிக்கிழமை விரத்தை ஆரம்பித்தாள். பக்தி இரட்டிப்பாகியது. கடைசியில் மனம் மாறிய கணவன், சக்குளத்து காவில் வந்து தரிசனம் செய்தான். இனிமேல் தான் குடிப்பதில்லை என்று சபதம் செய்தான். வாதரோகமும் போய்விட்ட அந்த மனிதன், இப்போது மற்றவர்களையும் நல்வழிப்படுத்திக் கொண்டிருக்கிறான். மனம் நொந்து கூப்பிடும் பக்தர்களுக்கு அபயம் கொடுத்து கருணாகரியான தேவி கருணை மழை பொழிவாள் என்பது தெளிவாக்குகிறது.

பக்தர் குறைதீர்க்கும் பகவதி

திருமணம் தடைப்படும் எத்தனையோ பெண்களின் திருமணம், தேவியின் கருணையால் நடக்கிறது! குழந்தை இல்லாமல் வேதனையடையும் பல குடும்பங்கள், சக்குளத்து காவிற்கு வந்து, விரதமிருந்து குழந்தைப்பேறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அடைகிறார்கள். மகிழ்ச்சி அடைந்த பக்தர்கள், பிரார்த்தனையும் செலுத்து கிறார்கள். எந்த ஆபத்திலும் தேவி காக்க வருவாள். எந்தத் தொழிலும் தேவியின் கடாக்ஷத்தால் வெற்றி பெறுகிறது. பக்தர்களிடையே ஜாதிமத பேதமில்லாமல் நம்பிக்கை இருக்கிறது.

தன் பக்தர்களைப் பிறர் நிந்தனை செய்வதையும், அச்சுறுத்துவதையும் தேவி பொறுத்துக் கொள்வதில்லை. அவர்களுக்கு கடுமையான தண்டனைகளைத் தருகிறாள்.

ஒருமுறை, அன்னையின் சந்நதியில் நின்று கைகூப்பி வணங்கிக் கொண்டிருந்த ஒரு பெண்மணியை, ஒரு பொல்லாதவள் தள்ளிப்போகச் சொன்னாள். அது தேவிக்குப் பிடிக்கவில்லையோ, என்னவோ, வீட்டிற்குப் போவதற்குள் அவளுக்கு தண்டனை கிடைத்தது. கால் கழுவ குளத்திலிறங்கிய அவள், கால் தடுக்கி விழுந்து கால் ஒடிந்தது. நீண்டநாள் வைத்தியம் செய்யவேண்டி வந்தது! கால் ஒடிந்து கிடந்த அவள் கனவில் வந்து, "நான் இல்லாத ஒன்றில்லை. எல்லோர்க்கும் அன்னை நானே. எனக்கு எல்லாம் ஒன்றுதான்! வித்யாசம், நிந்தனைகள் இதெல்லாம் கூடாது. அதனால் உனக்குத் தந்த தண்டனைதான் இது! உன் தோஷமெல்லாம் இதோடு போய்விட்டது. இனி காலமெல்லாம் என்னை நினைத்து வாழ்வாயாக!" என்றாள் அம்மா.

தன் பக்தரை நிந்தனை செய்தால் கடுமையான தண்டனை தருவாள் என்பதற்கு இன்னொரு உதாரணம்.

கிறிஸ்தவ பெண்மணி ஒருத்தி, சக்குளத்து காவிற்கு ஒருமுறை வந்தாள். கண் சரியாகத் தெரியாத அவள், உடல் உபாதையால் மிகவும் நொந்திருந்தாள். தன் கஷ்டங்களுக்குப் பரிகாரமாய் பதினெட்டு வெள்ளிக்கிழமைகள் விரதம் கடைபிடித்து, கோவிலில் தந்த எண்ணெயைத் தேய்த்துக் குளித்து பத்தியாயிருந்தாள். நாள் போகப்போக, வியாதி குறைந்து வந்தது. கடைசியில் வியாதி முழுவதும் குணமாகியது. அவள் தேவியின் பாடலைப் பாடுவது வழக்கமாயிருந்தது. அவளுடைய மகன் இதைப் பார்த்தான். அதோடு, அவளிடமிருந்த தேவியின் கீர்த்தனைப் புத்தகத்தையும் எடுத்துப் பார்த்தான். பிறகு கிழவியைத் திட்டவும், தேவியை பரிகசிக்கவும் செய்தான்.

'அன்று மாலை, சைக்கிளில் போன அவனுக்கு விபத்து ஏற்பட்டது. நினைவில்லாது பலநாள் மருத்துவமனையில் இருக்க வேண்டியதாயிற்று. பின் நினைவு வந்த போதும் அவன், "என் புத்தகத்தை ஏன் கிழித்தாய்?" என்று மட்டும் கேட்டுக்கொண்டே இருந்தான். கடைசியில், தன் தாயாரின் சொல்லை ஏற்று சக்குளத்து காவிற்குப் போனான். தேவியின் தரிசனத்தாலும், பிரார்த்தனையாலும் அவன் புத்தி சரியாயிற்று.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒருநாள், அவன் கனவில் தேவி தோன்றி சொன்னாள், "உன் தாயாரானாலும் என் பக்தைதான். அவளை 'கேலி செய்ததால், உனக்கு இப்படி ஏற்பட்டது. எல்லா இடத்திலும் காண்பது நான்தான்! ஆண், பெண், அம்மா, அப்பா எல்லாம் இறைவன்தான். என் பக்தர்கள் என்னை எந்த விதத்திலும், எந்த பாவத்திலும், உருவத்திலும் ஆராதிக்கலாம். யாரையும் தடை செய்யகூடாது. அதனால், நாற்பத்தொரு நாள் விரதமிருந்து, என்னிடமும், உன் தாயிடமும் மன்னிப்புக் கேள். உனக்கு இனி ஆபத்தொன்றும் வராது."

இந்த பக்தன், இன்றும் கோவிலுக்கு வந்து வழிபாடு நடத்தி ஆராதிக்கிறான்."

தேவியின் அற்புதங்கள் இன்னும் நிறைய இருக்கிறது. ஒருமுறை, "ஜான்மத்தாய்" என்ற உபதேசியின் மகள் "ஸானி" என்பவள், தீராத நோய்க்கு அடிமையானாள். சிகிச்சை, பிரார்த்தனை பலதும் நடத்தினார்கள். சரியாகவில்லை. இந்த வேளையில், அவள் தாய் சக்குளத்து தேவியின் மகாத்மியம் அறிந்தாள். அன்னையின் பாதார விந்தங்களில் அபயம் தேடினாள். தொடர்ந்து பதினெட்டு வெள்ளிக்கிழமைகள் விரதம் இருந்து, தேவியின் நாமத்தைச் சொல்லிக் கொண்டிருந்தாள். வழிபாடுகள் நடத்தினாள். அதிசயப்படும்படி அந்தப் பெண் பரிபூரண சுகமடைந்தாள்.

தீராத வியாதியிலிருந்து தன்னைக் காப்பாற்றிய தேவியின் உத்தம பக்தையானாள். சில நேரம் கோவிலுக்கும் வந்தாள். இந்த விபரமெல்லாம் அவள் தந்தைக்கு தெரியாது. யதேச்சையாக அவர் ஒருநாள், தேவியின் படத்தைப் பார்த்தார். அந்தப் படம் வீட்டிலிருப்பது அவருக்குப் பிடிக்கவில்லை. கோபத்தினால் அவர் மகளைத் திட்டிவிட்டு போட்டோவை எரிந்தார். பிறகு சிரித்தார். இனிமேல் கோவிலுக்குப் போகக் கூடாது! இந்த ஆசாரம் நமக்குள்ளதல்ல! போகக் கூடாது என்றும் கட்டளையிட்டார்.

அன்று இரவு, படுக்கையில் படுத்த உபதேசிக்கு தூக்கம் வரவில்லை. கனவுகள் அவரை வேட்டையாடத் துவங்கின. நிம்மதியில்லாமல் ஆயிற்று. பாம்புகள் தன்னைச் சுற்றிக் கொண்டிருப்பதுபோல் தோன்றியது. வீட்டுக்குத் தீ வைக்கிறார்கள். ஜ்வாலையாய் எரியும் தீயில் தனித்திருப்பது போல் தோற்றம். வாய் விட்டலறத் தோன்றினாலும் சப்தம் வெளிவரவில்லை. பயங்கரமான சூழ்நிலையில் தூக்கமில்லாமல் இரண்டு, மூன்று நாள் கழிந்தது. காப்பாற்றிக் கொள்ள முயன்றார், நடக்கவில்லை. ஒரு வழிகாண அவர் தீர்மானித்தார்.

சக்குளத்தம்மாவை சரணடைந்தார். அசரீரியாக தேவி சில உபதேசங்கள் செய்வதுபோல் தோன்றியது. "எந்த மதக்காரர்களானாலும் ஏதோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு விதத்தில் என்னை வந்தடைகிறார்கள். வஞ்சனையும், வயிறு நிறைப்பதற்கான பணத்தையும் காட்டி நம்பிக்கை இழக்கச் செய்து மதம் மாற்றப்படுதலும் பகவானை நிந்திப்பதாகும். நீ என் பக்தர்களை நிந்தனை செய்யாதே! அப்படிச் செய்பவர்களை நான், தண்டித்து தான் சரியாக்குகிறேன்" என்றாள். அன்று முதல், வெளிப்படுத்திக் கொள்ளாமல் தேவியை வணங்கி வழிபாடும் நடத்தி வருகிறார் உபதேசி.

ஆவிக்கு அருளிய அன்னை

கடந்த காலத்தை நினைத்துப் பார்க்கும்போது தேவியின் கருணை மிகுந்த ஒரு கதை ஞாபகம் வருகிறது. பல ஆண்டுகளுக்கு முன்னால், வெகுதூரத்தில் பாலக்காடு கிராமம். அங்கு அழகிலும், படிப்பிலும் நிறைந்திருந்த உமா என்ற பெண், தேவியின் பக்தையாயிருந்தாள். உமாவின் அப்பா கழுத்தில் அணிவதற்காகக் கொடுத்த துர்க்கா யந்திரத்தை ரட்சையாகத் தரித்திருந்தாள். மாலைவேளைகளில் தேவியை நினைத்து கிழக்கில் விளக்கேற்றி பிரார்த்திப்பது அவர்கள் குடும்ப வழக்கம். ஆனால், பணத்தட்டுப்பாடுடைய குடும்பம்தான்.

மகாதேவ சர்மா என்பவர் உமாவை விரும்பினார். உமா அவரிடமிருந்து விலக நினைத்தாள். ஆனால், அவள் தன் மனைவியாக வருவது தன்னுடைய மிகுந்த பாக்யம் என்று தேவியை சாட்சியாக வைத்து அவர் சத்தியம் செய்ததை, அவள் முழுவதுமாக நம்பினாள். அவர்கள் தம்பதிகளானார்கள்.

உண்மையில், மகாதேவன் ஒரு கொடுமைக்காரன். மனசாட்சியில்லாமல் துர்மந்திர வாதங்கள் செய்து பலருக்குத் தீங்கு செய்திருக்கிறான். துர்தேவதைகளையும், துர்மாரணங்களையும் வணங்கி வந்த குடும்பத்தில் பிறந்தவனாயிருந்தான். பணம், குடி, ஆடம்பரம் இதுதான் அவன் லட்சியம்! மனைவியான உமா கர்ப்பிணியான போது, உமாவையும், அவள் வயிற்றிலிருந்த சிசுவையும் கொல்ல வேண்டும் என்ற எண்ணத்தோடு பல துர்ப்ரயோகங்கள் செய்து வந்தான். ஒன்றும் பலனளிக்காமல் போகவே அவனது கோபம் பலமடங்காயிற்று. தந்திரத்தால் உமாவின் மனதை மாற்றி தேவியின் நினைவிலிருந்து மாற்றினான். அவள் அணிந்திருந்த துர்க்கா யந்திரத்தை தண்ணீரில் எறிந்தான். இனிமேல் சாமர்த்தியமாக உமாவை இல்லாமல் ஆக்க வேண்டும் என்று தீர்மானித்தான்.

உமாவை, காட்டிலுள்ள ஓர் அருவிக்குக் கூட்டியப் போனான். இயற்கையின் அருவி, கண்களுக்கு விருந்தாய், மனதிற்குக் குளுமையாய் இருந்தது. ஒருபெரிய பாறையிலிருந்து அற்புதமான அந்தக் காட்சியை ரசித்த உமா,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பின்னால் நடக்கவிருக்கும் குரூரமான சம்பவத்தைத் தெரிந்து கொள்ளவில்லை.

ஒரேநிமிஷம். பலமான இரண்டு கைகள் அவளைப் படுகுழியில் தள்ளின. அவள் வாழ்வு எவரும் அறியாமல் படுபாதாளத்தில் ஒடுங்கியது.

ஆனால், இயற்கை யாரையும் கர்மங்களிலிருந்து விடுவதில்லை. துர்மரணத்தில் இறந்த உமா, அதிபயங்கரமான ஒரு ஆவியாக மாறினாள். ரத்த நிற கண்களும், தாகமுடைய நாக்கும், பெரும் அலறலுடன் எல்லா இடத்திலும் அலைந்தாள். எத்தனையோ ஆண்களும், பெண்களும் அந்த ஆவிக்கு இரையானார்கள்.

மகாதேவன் குடும்பத்தில் எல்லோரையும் கொன்றாள். அவனை மாத்திரம் ஒன்றும் செய்ய முடியவில்லை. அவன் உடலில் மகிஷமர்த்தினி சக்ரம் தரித்திருந்தான். அந்த கொடூரனை வதைக்க சந்தர்ப்பம் பார்த்து, நாட்டில் பீதியும், மரணமும் உண்டாக்கி கராள ரூபியான அந்த ஆவி தீமைகளை நடத்தியது.

திறமைமிக்க மந்திரவாதிகளால் கூட அதை அடக்க முடியவில்லை, என்றபோது, அதற்குத் தகுந்த ஒருவர் இருந்தார். அவர் சக்குளத்து காவில் பூஜை செய்பவர். மிகவும் பக்தியுடைய, வயதானவர். அவரைத்தேடி நாட்டில் உள்ளவரும், மகாதேவன் குடும்பத்திலுள்ள முக்கியமானவர்களும் வந்தார்கள். திருமேனி சொன்னார், "அவள் பிசாசானாலும் பரமகாருண்யமான பகவதி அவளுடன் இருக்கிறாள். அவளுக்கு சரீர ரட்சை இருந்து, அது தொலைந்துவிட்டது என்று நினைக்கிறேன். தேவியை ப்ரீதி படுத்தினால் மாத்திரமே தப்பிக்க முடியும்." மகாதேவ சர்மாவுக்கும், அவன் குடும்பத்தாருக்கும் ஊரில் முக்கியமானவர்களுக்கும், அணிவதற்கு சக்தி மிகுந்த யந்த்ரங்கள் கொடுத்தார். திமிர் பிடித்த மகாதேவன், அந்த யந்த்ரத்தை உடைத்து அடுத்திருந்த சர்ப்பக்காவில் எறிந்தான். தனக்குத் தெரிந்த மந்திர சக்தியிலும், சித்தியிலும் அகம்பாவம் கொண்டிருந்த அவன், தன்னைச் சூழ்ந்திருக்கும் ஆபத்தைப் பற்றி உணரவில்லை.

ஒருநாள், குளிப்பதற்காக அவன் குளத்திலிறங்கியபோது, உமாவின் ஆவியும் கூட வந்து சேர்ந்தது. அந்த சமயம், மகாதேவன் மனதில், அகம்பாவமும் உதடுகளில் இளக்காரத்தின் புன்சிரிப்பும் இருந்தது. திடீரென்று தன் முன்னால் தோன்றிய அழகிய பெண்ணை உற்றுப் பார்த்தான். அந்த முகத்தை எங்கேயோ பார்த்தது போலிருந்தது.

உடனே திடீரென்று அந்த உருவம் மாறியது. கண்ணிலிருந்து அக்னிஜ்வாலை வீசியது. மாமரத்திலிருந்த ரத்த துளிகள் துளித்துளியாக

In Public domain Digitization Muthulakshmi Research Academy

விழுந்தது. கொடூரமான ஒரு அட்டகாசம், குளத்தில் இருக்கும் அலைகளைக் கூட பயப்படுத்தியது. மகாதேவன் பதறிப்போய் சுற்றுமுற்றும் பார்த்தான். இரண்டு கைகள் எதிரே நீண்டு வந்து தொட, மறு நிமிடம் எலும்புகள் நொறுங்கும் சப்தம், மனித ரத்தம் பீய்ச்சியடிக்கிற காட்சி. முனகலின் ஆரம்பம். பழிவாங்கும் மனம்கொண்ட அந்த ஆவியின் கைகளில் சிக்கி மகாதேவன் அழிந்தான்.

"இனிமேலும் பிசாசைக் கட்டுப்படுத்தாமல் இருக்க முடியாது" என வயதான பூஜாரி சொன்னார். மற்றொரு இடத்தில் பூஜைகளை ஆரம்பித்தார். கணபதியை ப்ரீதிபடுத்தி, பகவதியை பீடத்தில் ஆவாஹித்து மிக சக்திவாய்ந்த ஒரு பூஜைக்கு ஆயத்தமானார். உதவி பூஜாரிகளிடம் சொன்னார், "ஜாக்கிரதையாயிருங்கள்! மனதில் தேவியை மிக பக்தியோடு ஜபியுங்கள். கொடுமையான உமாவின் ப்ரேதத்தை நான் வரச்சொல்லப் போகிறேன்!"

சுடர் விட்டெரியும் ஹோமகுண்டத்தில் பூஜாதிரவியங்களை இட்டு, சக்குளத்து அம்மாவை மனதில் முழுமையாக நினைத்து திருமேனி, மந்திரங்களை சொல்லத் துவங்கினார். எங்கிருந்தோ சீறிப் பாய்ந்து வந்த காற்று, அங்கெல்லாம் அலையடிப்பதுபோல் வீசியது. முற்றத்தில் நூறு, நூறு நரிகளும் ஓநாய்களும் ஊளையிடுவதுபோல் கிடுகிடுத்தது. ஆவாஹன மந்திர முடிவில் அவள் வந்துவிட்டாள். கோர ரூபமான அந்தப் ப்ரேதம் இப்போது அலறவில்லை. பதிலாக அழுதுபுலம்பியது,

"திருமேனி, நானும் தேவி பக்தை. என்னைக் கட்டுப்படுத்தாதே!" எனக் கெஞ்சினாள்.

ஆனால், பூஜாரி, "நீ, முன்ஜன்ம கர்மவினால் அவஸ்தைப்பட்டாய். சரீர ரட்சையைத் தொலைத்து பகவதியை நிந்தித்தாய். உன்னால் எத்தனையோ மனிதர்கள் இல்லாமல் ஆனார்கள். இனிமேலும் அதுபோல் நடக்கக்கூடாது. உன் தோஷங்களையெல்லாம் போக்கி உன்னை பகவதிக்கு அடிமையாய் இருந்துகிறேன்" என்றார்.

ஒரு பாலைமரத்தில் அவளை தரச்சு சுத்தி வருத்தினார். சக்குளத்தம்மாவின் அடிமை ஆக்கிவிட்டார். ஒருபொழுதும் இனிமேல் தொந்தரவு உண்டாகாது என்றார். பக்தர்கள், தேவியின் நாமத்தை உரக்கப் பாடினார்கள். சக்குளத்தம்மா! தேவி! என்று திருமேனியும் இருகைகளைக் கூப்பினார்.

★ ★ ★

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்குளத்தும்மா சரணம்

சஞ்சீவினி அரக்கட்டளை

சக்குளத்துகாவு பகவதி அம்மன் கோவிலின் சார்பாக மக்கள் சேவை சங்கம் ஒன்று நடத்தப்பட்டு வருகிறது, மக்களின் உடல் மற்றும் மானசிகமான பிரச்சனைகளுக்கு, பரிகாரம் காணுவதற்காக சக்குளத்து அம்மன் சஞ்சீவினி அரக்கட்டளை என்ற தர்மசங்கம் தேவியின் நாமத்தால் நடந்து கொண்டிருக்கிறது! அறக்கட்டளையின் லட்சியம் பாரதத்தின் பலமாநிலங்களிலும், வெளிநாடுகளிலும், செயல்படுகின்ற அறக்கட்டளையின் கிளைகள் வழி கஷ்டங்கள் அனுபவிக்கிற மக்களுக்கு உதவிகள் செய்வதாகும்! ஆத்மவிசுவாசமும், தன் நம்பிக்கையும் அளிக்க ஒரு அறக்கட்டளையால் முடியும்! வார்டு யூனிட்டுகள், மாவட்ட யூனிட்டுகள் என்ற முறையில் செயல்பட்டு வருகிறது! ஜாதிமதம், ஏழை, பணக்காரன், அரசியல் எண்ணங்கள் இல்லாத எல்லோர்க்கும் இதில் சேர்ந்து சேவை செய்யலாம்! சக்குளத்து அம்மன் பிரார்த்தனை சங்க மூலமாக குழந்தைகளுக்கு நல்ல எண்ணங்களையும், நல்ல பழக்கங்களையையும், போதிக்க வேண்டும்! மக்கள் சேவையே மகேசன் சேவை! சத்தியமும், தர்மமும் இந்த உலகத்தில் உண்டாகவேண்டுமென்று எண்ணத்தோடு தொடங்கப்பட்டுள்ள இந்த அறக்கட்டளைக்கு எல்லோரையும் பக்தி பூர்வமாக வரவேற்கிறோம்!

இந்த அறக்கட்டளை கேரளத்தில் முக்கியமான பலபகுதியில் செயல் பட்டு வருவதுமின்றி, டில்லி, மும்பை, பெங்களூர், போன்ற இடங்களிலும் செயல்பட்டு வருகிறது! தமிழகத்தில் தேனி மாவட்டம் சின்னமாணூரிலும் அதை பின்பற்றி கம்பம், தேனி பகுதியிலுள்ள பக்தர்களும் இந்த அறக்கட்டளை மூலமாக மக்களுக்கு உதவிகள் பல புரிந்து வருகிறார்கள்! கன்னியாகுமரி மாவட்டத்திலும் அறக்கட்டளை கிளைகள் செயல்பட்டு வருகிறது! அதுபோல் தமிழகத்தின் பல பகுதிகளிலும் சக்குளத்துஅம்மன் நாமத்தில் மக்களுக்கு சேவை செய்ய விரும்புவோர் அறக்கட்டளையின் தலைமை அலுவலகமாய் தொடர்பு கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறோம்!

விஷேச நாட்கள்:

எல்லாவெள்ளிக்கிழமைகளிலும் (ஓழிச்சல்) தேவியின் முன்நிறுத்தி கண்திஷ்டி கழித்தல்! (மருந்து வெள்ளம்) பலமூலிகைகள் முலம் தயாரித்து தேவிக்கு அபிஷேகம் செய்து வழங்கப்படும் இந்த மூலிகை தீர்த்தம் அருந்துவது முலம் உடம்பிலுள்ள வசீகம், மற்றும் பலதரப்பட்ட வியாதிகள் மாற்ற உவந்ததாகும்! இது வெள்ளிக்கிழமைகளில் இலவசமாக வழங்கப்படும்!

தமிழ் மாதம் முதல் வெள்ளிக்கிழமை மிகவும் விசேஷஷமானதாகும்! அன்றேதினம் தேவியை வெளியில் எழுந்தருளித்து கூட்டு பிராத்தனை செய்யப்படும்! போதை வஸ்துகளுக்கு அடிமையானவர்களை அதிலிருந்து மீட்க விஷேச பூஜைசெய்யப்படும்! மேலும் தேவியின் வாள் தொட்டு சத்தியம் வாங்கப்படும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கார்த்திகை மாத விஷேசம்: (பொங்கல் விழா)

கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சத்திரத்தில் தேவிக்கு இஷ்ட முவேத்தியமான **பொங்கல்** படைத்து வேண்டுதல் நிறை வேற்றுதல், முக்கியமானதில் **ஒன்றாகும்!** லட்சக்கணக்கான பெண்கள் அன்று பொங்கலிடுவார்கள்! **காலை9**மணிக்கு பொங்கல் விழா தொடங்கும் 11 மணிக்கு பொங்கல்நிவேத்தியம் நடத்தப்படும்! அதைதொடர்ந்து திவ்விய அபிஷேகம் உச்ச தீபாராதனையும் நடத்தப்படும்! மாலை லட்சத்தீபமும், கார்த்திகை ஸ்தம்பம்(சொக்கபானை) கொளுத்தப்படும்!

பன்னிரண்டு நோம்பு (விரதம்)

மார்கழி மாதம் 1ம் தேதி முதல் 12ம் தேதி வரை பன்னிரண்டு நோம்பு மஹோற்சவம் மார்கழி மாதம் 11ம் தேதி கலசபூஜை: 11ம் தேதி மாலை திருவல்லா காவும்பாகம்: திரு ஏரன்காவு பகவதிகோவிலிருந்து தங்க திரு ஆபரணம் ஊர்வலமாக சக்குளத்துகாவு கோவிலுக்கு எடுத்து வரப்பட்டு தேவிக்கு சார்த்தி விஷேச தீபாராதனை நடத்தப்படும்! 12ம் தேதி பன்னிரண்டு நோம்பு மஹோற்சவம் முடிவடையும்!

நடைதிறக்கும் நேரம்

சாதரண நாட்களில் காலை 5 மணிக்கு நடைதிறந்து மதியம் 1 மணிக்கு நடை அடைக்கப்படும்! மாலை 4.30க்கு திறந்து இரவு 8 மணிக்கு அடைக்கப்படும்! வெள்ளி ஞாயிறு மற்றும் விசேஷசதினங்களில் காலை 5 மணிக்கு திறந்து மதியம் 1.30 மணிக்கு நடை அடைக்கப்படும். பின்பு மாலை 4.30மணிக்கு திறந்து 8.00 மணிக்கு நடை அடைக்கப்படும்!

சக்குளத்து காவு பகவதியின் மூல குடும்ப கோவில் சரித்திரம்

ஆதி குடும்ப கோவில்:

3500 வருடங்களுக்கு முன் நாரத மகிரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட சைதன்ய தன்மாய ஆதி பராசக்தி ஸ்ரீ துர்க்கா பகவதி குடி கொண்டிருக்கின்ற புனிதமான வழிபாடு ஸ்தலமான ஸ்ரீ சக்குளத்து காவு பகவதி கோவில். நாடோடிகளாக வாழந்து வந்து பின் கடவுள் அருள் கொண்டு பக்தி மார்க்கத்தில் வந்த வேடர் குடும்பத்திற்காக இந்தபிரதிஷ்டை செய்யப்பட்டது நாளடைவில் வேடர் குடும்பம் மாயமானது.

கரையான் புற்று கொண்ட குளக்கரையில் தேவிஅஷ்ட ஐஸ்வரிய தேவதையாய் சக்தி சொரூபிணியாய் குடி கொண்டிருந்திருக்கிறாள் தேவி. கரையான் புற்றில் இருந்து சுயம்புவாய் தோன்றி நாரத மகிரிஷியால் பிரதிஷ்டை செய்யப்பட்ட ஸ்ரீ சக்குளத்து காவு தேவியின் மூலஸ்தானம் இன்று காண்கின்ற சக்குளத்து தேவியின் ஸ்ரீ கோவில் தான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவியை பூஜை செய்து கொண்டிருந்த வேடர் குடும்பம் மாயமான பின் எங்கிருந்தோ வந்த யார் என்று தெரியாத ஒரு பிராமணன் தேவியின் பூஜாரியாக வந்து சேர்ந்தார். பக்திமானாக இருந்தார். பரம பக்தனான அவரின் பூஜை நேரத்தில் சக்குளத்து தேவி நேரில் தோன்றி வந்தாள் பக்தியும், அறிவும் மட்டும் எனக்கு தர வேண்டும் என்று பிரார்த்தனை மட்டும் தான் அவர் மனதில் இருந்தது. கோவிலின் வடக்கு பாகத்தில் அற்புதமாக எழுப்பிய மண்டபத்தில் அந்த பிராமணர் குடியிருந்தார். அந்த மண்டபத்தில் நித்ய தேவார மூர்த்தியமாக ஸ்ரீ ஆஞ்சநேயர் சுவாமியையும், அஷ்டதிக் பாலகரையும் பூஜை செய்து வந்தார். பூஜை செய்து வந்த பிராமணன் தேவியின் சக்தியால் ஒரு ஒளியாகி ஐக்கியமாகி மறைந்து விட்ட பின் அந்த பிராமணரை யாரும் கண்டவர் இல்லை.

சக்குளத்து தேவியை முதலில் பூஜை செய்யும் பாக்கியம் பெற்ற அந்த மகா பிராமணனின் ஆவிக்கு ஆதிரக்ஷயாய் சாலகிராமத்தில் பிரதிஷ்டை செய்து பூஜித்து வருகிறார்கள். அப்படி தேவியை நேரில் கண்டு பூஜை செய்து வந்த முதல் பூஜாரியுடைய குடும்பமும், அவரின் தேவார மூர்த்திகளையும் பிரதிஷ்டிக்கப் பட்ட இந்த மண்டபம் சக்குளத்து தேவியுடைய மூல குடும்ப கோவிலாக அறியப்படுகிறது.

சக்குளத்து அம்மனை தரிசிக்க வருபவர்கள் தேவியின் இடது பக்கத்து (வடக்கு திசை)யில் இருக்கின்ற ஆதி குடும்ப கோவிலிலும் தரிசனம் நடத்தி வழிபாடுகளும் நடத்தி வருகிறார்கள். நினைத்த காரியங்கள் நடப்பதற்க்கு காணிக்கையாக தங்கத் தாலி, பொட்டு, சந்திரக் கலை இங்கு செலுத்துகிறார்கள். இங்கு தரிசித்த பின் பக்தர்கள் சக்குளத்து காவு தேவி சன்னதியில் முடி காணிக்கை செலுத்துபவர்களும் உண்டு.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தானத்தில் சிறந்தது அன்னதானம்:
அன்னதானம் மஹாதானம்:

"கஜதுரங்கா சகஸ்ரம் கோகுலம் கோடி தானம்"
கனகா, ரஜிதா பாத்திரம் மேதினி கிஹராந்தம்
உபயகுலா விசுத்தம் கோடி கன்னியா பிரதானம்
நஹீ, நஹீ, பெருதானம் அன்னதானம் சமானம்:

ஆதிபராசக்தியும், அன்னபூர்ண ஈஸ்வரியுமாய் ஸ்ரீசக்குளத்துகாவு பகவதி அம்மனின் திரு நாமத்தில் நடந்து கொண்டிருக்கின்ற அன்னதானம் வழிபாடு! வேறு எந்த தானமும் அன்னதானத்திற்கு நிகரானதல்ல! பசியுடன் வருகின்ற ஒருவருக்கு உணவு கிடைக்கும் போது உண்டாகும், மகிழ்ச்சியும், உண்டபின் ஏற்படும் ஆத்ம திருப்தியும், அன்ன தானத்தை வழங்குகின்றவர்க்கு கிடைக்கின்ற ஒரு அனுக்கிரஹமாகும்! வேறு எந்த தானம் கொடுத்தாலும், அதை பெருகின்ற நபர்க்கு பூர்ண திருப்தி உண்டாகும் என்பதில் உறுதியில்லை! அதே நேரத்தில் அன்ன தானம் உண்டபின் அந்த நபர் போதும், போதும், யென்று சொல்லும் ஒரே தானம் அன்ன தானம் ஆகும்! அந்த அன்னதானத்தை ஏற்றுக் கொண்டவர்க்கு பரிபூர்ண திருப்தி உண்டாகும்! இதை வேறு எந்த தானத்தின் மூலமாகவும் பெற முடியாது! ஸ்ரீ சக்குளத்துகாவு பகவதி அம்மனின் அன்னதான வழிபாட்டிற்கு எல்லோரும் முழு மனதுடன் பங்கு கொண்டு, தேவியின் அனுக்கிரகங்களை இந்த வழிபாட்டிற்கு முழு மனதுடன் நிதி உதவி செய்து தேவியின் பரிபூர்ண அனுக்கிரத்தை பெற வேண்டுகிறோம்!

பிறந்த நாள், சஷ்டி பூர்த்தி, சதாபிஷேகம், கிரகபிரவேஷம், திருமண நாள், மற்றும் எல்லா விஷேஷ நாட்களிலும், பிதுருக்களுடைய திருப்திக்காகவும், விவசாயம், தொழில், வியாபார, வெற்றிக்காகவும், சக்குளத்து அம்மனின் திருநடையில் அன்னதானம் வழிபாடு நடத்துவது என்பது கோடி புன்னியத்திற்கு நிகராகும்! மேலும் சகல ஐஸ்வரியங்களும் உண்டாகும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு நாள் அன்னதான வழிபாட்டிற்கு **Rs. 5000/–** (ஐயாயிரம்) ரூபாயாகும்!அவ்வளவு தொகை செய்ய இயலாதவர்களுக்கு அவர்களின் வசதிக்கேற்றபடி,நன்கொடை வாரி வழங்கி இந்த மஹாத்தூய அன்னதானம் திட்டத்துக்கு ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்! இந்த திட்டத்திற்காக வழங்கப்படும் நன்கொடை சிறிதோ, பெரிதோ, எதுவாக இருந்தாலும், ஏற்றுக் கொள்ளப்படும்!

இந்த அன்னதான வழிபாடு நடத்த விருப்பமுள்ளவர்கள் நன்கொடைக்கான தொகையை கோவிலில் உள்ள வழிபாடு கவுண்டரில் நேரிடையாக கொடுத்து ரசீது பெற்றுக்கொள்ளவோ அல்லது கோவிலின் நிர்வாகிக்கு மணியார்டர் ஆகவோ, அல்லது இந்தியன் ஓவர்சீஸ் பாங்கு நீராட்டுபுரம் கிளையில் கோவிலின் அறைக்கட்டளைக்கான **A/c. No. : 8276** நம்பருக்கு டிராப்டாகவோ, அல்லது செக்காகவோ, எடுத்து அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்!

ADMINISTRATOR
CHAKKULATHUKAVU DEVASOM
SRI CHAKKULATHUKAVU AMMA ANNA DHANA NEETHI
CHAKKULATHUKAVU,
NIRATTUPURAM- POST, TIRUVALLA,
ALLEPPEY-DIST. - 689571, KERALA.
PHONE : (0477) 2213550, 2215035, 2213521.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அம்மேசரணம்! தேவிசரணம்!

"சர்வ சக்தி ஸ்ரூபினி சக்குளத்து அம்மா,
அசதோ, மா சத்கமயா:
தமசோ மா ஜோதிர்கமயா:
மித்யோர்மா அமிர்தம் கமயா:
லோக சமஸ்தா சுகினோ பவந்து:"

நாதத்தை வேதமாக்கி மாற்றுகிற ஞானாம்பிகையாகிய சக்குளத்து அம்மா, அபிஷ்டவரதாஹினியும், சோகநாசினியும், சர்வ ஐஸ்வரியபிரதாஹினியும் ஆய ஸ்ரீ ஜெகதாம்பிகை அனுக்கிரகம் வாரி வழங்கிகொண்டு என்றும் நம்முடன் குடி கொண்டிருக்கிறாள்! தினம், தினம், வந்துகொண்டிருக்கின்ற பக்தர்களின் எண்ணிக்கையிலும் ஆஜார, அனுஷ்டானங்களின் பூரண்த்தையும் ஜாதி மத பேதமில்லாமல் ஆராதனையும் இங்குள்ள விஷேஷமாகும்!

பாமரனையும் பண்டிதனாக்கின்ற, ஞான சைதன்யங்களும் அஷ்ட ஐஸ்வரியங்களும் வாரி வழங்கின்ற அபயாம்பிகையுமான ஸ்ரீசக்குளத்துகாவு பகவதி அம்மன் பெண்களின் சபரிமலையான சக்குளத்து காவில் குடிகொண்டிருக்கிறாள்! ஆதிபராசக்தியும், சாட்சால் துர்க்கா பகவதியும், சர்வ ஐஸ்வரிய கலைகளோடு குடி கொண்டிருக்கின்ற இந்த ஆலயத்தில் வித்யா தேவதையாக சரஸ்வதி சங்கல்பத்திலும், அஷ்ட ஐஸ்வரிய ஸ்ரூபினிமாய் பார்வதியின் உருவிலும், சத்ருசம்ஹார மூர்த்தியுமாய் பத்திரகாளியின் தோற்றத்திலும், சர்வ துக்கங்களையும் போக்கும் சண்டிஹா தோற்றத்திலும், பூஜைகள் ஆஜாரங்கள்களை ஐதிகத்துடன் நடப்பதினாலும், பக்தர்களுடைய, சர்வ வேண்டுதல்களுக்கு, இந்த திருநடையில் பரிஹாரம் காணப்படுகிறது! சர்வ ஐஸ்வரிய தேவதையான ஸ்ரீ சக்குளத்துகாவு பகவதி அம்மனின் படம் (போட்டோ) வைத்து பூஜை செய்கின்ற வீடுகளிலும், தொழில் ஸ்தாபனங்களிலும் சர்வ மங்களமும் உண்டாகும்!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்குளத்துக்காவில் அன்னை பாடல்கள்

கருணையோடு காப்பாய் அம்மா

சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே
சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே
சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே
சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே

ஹரிநாராயணனும் பிரம்ம தேவனும்
சிவனும் ஸ்ரீ பரமேஸ்வரி வாணியும்
ஸ்ரீ கணபதியும் சுப்ர மணியனும்
காத்து ரட்சிப்பாய் தேவி நமோஸ்துதே
ஸ்ரீ சரஸ்வதி தேவி கார்த்யாயனி
வேதப் பொருளே மஹேஸ்வரி சாரதே
எங்கள் துக்கங்கள் போக்கி அருள்வாயே
தம்புராட்டியே பகவதி நமோஸ்துதே

கதியில்லாமல் உழன்று அலையும்போது
கதி தந்து காத்து எங்களை ரட்சிப்பாய்
கருணையோடு கடைக்கண்ணால்
பார்ப்பாய்
கருணாகரி அம்மா நமோஸ்துதே

அருள் மிகுந்த உன்னுருவைக் காணவே
அருள் தருவாய் அம்மா நமோஸ்துதே
துக்க பாரங்கள் தீர்த்து ரட்சிக்கவே
துர்க்கா தேவி உன் பாதம் நமோஸ்துதே

சக்தி ஸ்வரூபிணி ஸ்ரீ பகவதி
சக்தியைத்தா உன்னை பூஜிக்கவே
திருப்தியாய் கருணை செய்வாயே
பக்த ப்ரியே அம்மா நமோஸ்துதே

பத்மநாப ப்ரியே தேவி அம்பிகே
பக்தரைக் காக்கும் தேவி துர்க்கையே
தர்க்கமில்லாமல் உன்னை
நினைக்கிறேன்
திருக்கண் பார்த்து அருள்வாயே
தேவியே

எங்கள் துக்க மெல்லாம் நீ போக்கணும்
எங்கள் பாபங்க ளெல்லாம் நீ நீக்கணும்
எங்கள் ஆபத்தை யெல்லாம் நீ
அகற்றணும்
எங்கள் தாபத்தை யெல்லாம் நீ
மாற்றணும்

நல்ல செயல்கள் செய்ய நீ வைக்கணும்
நல்ல வார்த்தைகள் சொல்ல நீ
வைக்கணும்
நல்லவர்களின் நட்பு நீ கொடுக்கணும்
அல்லல் நீக்கி எங்கள் குலத்தைக்
காக்கணும்

சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே
சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே
சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே
சக்குளம் காவில் தேவி நமோஸ்துதே

கோலாட்டப் பாட்டு

பக்தியுடனே பூஜித்திடுவோம் பராசக்தி உன்பாதம்
பாதார விந்தம் தந்தெமைக் காப்பாய் ஆதிபராசக்தி
நீரேற்று புறத்தின் ஐஸ்வர்யமாக நீ விளையாடுகிறாய்
சக்குளத்தம்மா நின் திருப்பாதம் பாடித் துதிக்கின்றேன்.
கார்த்திகையன்று பொங்கலிட்டு நாங்கள் வணங்குகிறோம்
பூவில் மது உண்ணும் வண்டினைப் போல நீ வந்து உண்டிடுவாய்
சக்தி ஸ்வரூபிணி கருணாகரியே சக்குளத்தம்பிகையே
சக்தியைத் தந்து சாந்தியும் தருவாய் சத்ய ஸ்வரூபிணியே
துர்க்கே, பகவதி, காளி, ருத்ரே, ஹைமவதி, வரதே
துஷ்டர்களுக்கு கஷ்டம் கொடுத்திடும் துர்க்கே ரூபிணியே
இடியும், மழையும், வெயிலும், காற்றும் மாறிவரும் ரூபம்
ஈடில்லாத சக்திகள் கொண்டது அம்மா உன் உருவம்.
கார்த்திகையும் நீ கார்த்யாயனியும் நீ கருணையின் உருவம் நீ
காத்து ரக்ஷிக்க ஓடி வருவாய் கருணாகரியே நீ
நாத ஸ்வரூபிணி தேவஸ்வரூபிணி நாதம் தந்திடுவாய்
பாதத் தாமரையில் சரணம் அடைந்திடும் பக்தர்களைக் காப்பாய்
வாணி வைபவ் மோஹினியே வனதுர்க்கை பகவதியே
மாணிக்க ஒளியே மரகத வல்லியே மனக்குறை தீர்த்தருள்வாய்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சரணம் சரணம் சக்குளத்தம்மா

சக்குளத்தம்மா சரணம்
சக்குளம் அம்மா லோக நாயகி
சரணம் சரணம் ஸ்ரீ அம்பிகே
சரண பங்கஜம் அடியேனுக்கு
தருவாய் எப்போதும் எந்தன் பகவதி
கிரிஜே பாவன சரிதே
காருண்ய நிரதே பாக்கியம் அருளுவாய்
துன்பம் வந்து நான் துயருரும் போது
கரைகாண வழி காட்டுவாய்
காலை, மாலை உன் நாமங்கள் சொல்ல
கார்த்திகே கனிவாகுவாய்.
ஆலயம் வந்து நான் தொழுதிட
அருள்வாய் சக்குளம் அம்மா
அழகு தெய்வமாய் சக்குளம் காவில்
அவதரித்த நீ வனதுர்க்கே
பிழைகள் பொறுத்தென்னை ஆட்கொள்வாய் தேவி
அழைத்தால் வந்திடும் அம்பிகே

கடைக் கண்ணால் பார்த்து காருண்யம் செய்து
கரையேர வழி காட்டுவாய்
கனிவோடு எங்கள் குறைகள் தீர்த்திட
அடைக்கலம் நீயே அம்பிகே

உடலை விட்டெடுந்தென் உயிர் பிரியும்போது,
உடனே வருவாய் ஒளிமின்னல் போல்
ஆத்மாவில் வந்து சாயுஜ்யம் தந்து
ஆதரித்தருள் துர்க்கையே

உன்னைத் தொழுவதல்லாமல் வேறு
ஒன்றுமே என் கையில் இல்லை பகவதி
கைவிடாமல் என்னை ரட்சிப்பாய் தேவி
சக்குளம் வாழும் ஸ்ரீ தேவி.

தேடிவந்தேன் அம்மா

தேடி வந்தேன் நான் அம்மா உந்தன் கோவிலில்
திவ்ய தரிசனம் கண்டு கைகள் கூப்பவே
பக்த ரட்சகி அம்மா முக்தி தாயினி
காத்தருள்வாய் நீ என்றும் எப்போதும்
எந்தன் துக்கங்கள் நீக்கி நித்தமும் தேவி
எனக்குள் பொழியணும் உந்தன் காருண்யம்
ஆறுதலளிக்கும் தாயே சக்குளத்தம்மா
ஆதரிப்பது உந்தன் கடமையாமே

In Public domain, Digitization Muthulakshmi Research Academy

கஷ்டகாலங்கள் எல்லாம் போக்கி என்னை நீ
இஷ்டமாகவே காத்து ரட்சிப்பாய் அம்மா
துஷ்ட நிக்ரஹம் செய்து தூய்டையாக்கு நீ
அஷ்ட ஐஸ்வர்யம் தந்து ஆதரிப்பாய் நீ
ச்சகுளத்தில் வாழும் அம்மா ஆதிசக்தியே
துக்கங்களைப் போக்கி நீயும் துணையிருப்பாயே
திக்குகள் எல்லாம் உந்தன் புகழ் ஒலிக்கவே
திவ்ய நாமம் சொல்லிடுவோம் அம்மா துர்க்கையே (தேடி)

காலையும் மாலையும் தினமும் பாடினேன் நான் உன்னை
மானசீகமாய் எப்போதும் தியானமும் நான் செய்தேன்
லீலைகள் புரியும் சக்குளத்தம்மா
காலதோஷங்கள் எல்லாம் நீங்கிடச் செய்வாய்
பத்ர காளியே வன துர்க்கா தேவியே
சத்ரு தோஷங்கள் விரட்டி சாந்தியும் தருவாய்
புத்திர பாக்கியமும் அருள்வாய் புவனேஸ்வரியே

சக்திஸ்வரூபிணி

தேசாதி பத்யம் வகிக்கும் நீ தேவதை
சாட்சாத் பராசக்தி வணங்குகிறேன்
சக்குளம் காவிலே சக்தி ஸ்வரூபிணி
நித்யே நிராமயே வணங்குகிறேன்

ஓங்கார நாத ஸ்வரூபிணி கிருபாகரி
சர்வ சஞ்சல நாசினி தேவி
செளந்தர்ய காரிணி மூலப்ரகாரிணி
சர்வ மங்களயே வணங்குகிறேன்
சத்ய ஸ்வரூபிணி சக்தி மஹேஸ்வரி
நித்யம் உன் பூஜைக்கு வணங்குகிறேன்

வித்யா ரூபிணி விமலே பார்வதி
சத்வ குணங்களை தந்தெனை
ஆதரி

காமமும், க்ரோதமும், லோபமும்,
மோஹமும்
என்னில் வராமல் நீ காத்திடுவாய்
சாமகானப்ரியே சண்டிகே
என்னை நீ
ஹோமாக்னி குண்டத்தில்
ஹவிஸாக்குவாய்

சரணாகதம்

சிவசக்தி மைந்தனே சரணாகதம்
சித்தி விநாயகனே சரணாகதம்
சரவணனின் அண்ணனே சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

சற்குரு நாதனே சரணாகதம்
சர்வ குருபரனே சரணாகதம்
சகலரையும் காத்திடுவாய் சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்
சரஸ்வதி தேவியே சரணாகதம்
வரமருள் வாணியே சரணாகதம்
கரம் குவித்தேன் உனக்கு சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

துர்க்கா தேவியே சரணாகதம்
துன்பங்கள் தீர்ப்பாய் சரணாகதம்
துக்கங்கள் நீக்குவாய் சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

ஐஸ்வர்ய தேவியே சரணாகதம்
அஷ்ட லட்சுமியே சரணாகதம்
கஷ்டமெல்லாம் தீர்ப்பாய்
சரணாகதம்
சக்குளத்தம்மாவே சரணாகதம்

பார்வதி தேவியே சரணாகதம்
பரமனின் நாயகியே சரணாகதம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆர்வமுடன் தொழுதேன்
சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

கருணையின் உருவமே சரணாகதம்
பரிவுடன் காத்தருள் சரணாகதம்
உருகியே நினைத்தேன் உனை
சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

அம்பிக்கையே உன்பாதம்
சரணாகதம்
நம்பினேன் அருளுவாய் சரணாகதம்
தம்புராட்டி பகவதி சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

நித்தமும் வணங்கினேன் சரணாகதம்
பக்தியைத் தந்தருள் சரணாகதம்
சத்ய ஸ்வரூபிணி சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

ஆதிபராசக்தி சரணாகதம்
அம்மா வனதுர்க்கே சரணாகதம்
சாதிமத பேதமற்றவளே சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

கார்த்திகை தேவியே சரணாகதம்
கார்தியாயனி தேவியே சரணாகதம்
காத்து ரட்சிப்பாய் சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

ஓங்கார ரூபிணியே சரணாகதம்
ஆங்காரம் தீர்த்திடுவாய் சரணாகதம்
தீங்கெல்லாம் விரட்டிடுவாய்
சரணாகதம்
சக்குளம் தேவியே சரணாகதம்

ராப்பகலாய் நினைக்கிறேன்
சரணாகதம்
கூப்பிட்ட உடன் வருவாய்
சரணாகதம்
காப்பது உன் கடமை சரணாகதம்
சக்குளத் தம்மாவே சரணாகதம்

நீரேற்று புரத்தம்மா சரணாகதம்
பேர் பெற்ற துர்க்கையே சரணாகதம்
பார் போற்றும் பகவதியே
சரணாகதம்
சக்குளத்தின் சக்தியே சரணாகதம்

தேவி சரணம்

சரணம் சரணம் சரணம் சரணம் சக்குளத்து அம்மா
சங்கடங்கள் 'தீர்த்தருள்வாய் சக்குளத்தம்மா
ஏழைகளின் தெய்வம் நீயே சக்குளத்தம்மா
நீ அல்லாமல் எங்களுக்கு கதி ஏதம்மா?

அருள் பெரும் ஜோதியே ஆதிபராசக்தியே
நீயே எங்களுக்கு தீபஜோதியே
வழிகாட்டும் தெய்வம் நீயே வந்தருள்வாயே
வேதனை போக்கியே நீ காத்தருள்வாயே

உனது பாதம் சரணம் என்று ஓடிவந்தேன் அம்மா
உனது செவியில் அபயக்குரல் கேட்கவில்லையோ?
ஏன் இந்த மௌனம் என்று புரியவில்லையே அம்மா?
ஏன் இந்த சோதனை தான் தெரியவில்லையே?

தீபங்களில் காட்சி தரும் தீபரூபிணி அம்மா
திரிசூல நாயகியே ஆதிபராசக்தியே
ஆடி ஆடி அசைந்தாடி இரங்கிவா அம்மா
யாரும் இல்லா எங்களுக்கு அருள் புரிவாயே (சரணம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்குளத்துக்காவு ஸ்ரீ பகவதி அம்மன் கோவில் டிரஸ்ட் அங்கத்தினர்கள்

P.B.K. நம்பூதிரி

R.K. நம்பூதிரி

மணிக்குட்டன் நம்பூதிரி

தாமோதரன் நம்பூதிரி

உன்னி கிருஷ்ணன் நம்பூதிரி

அசோகன் நம்பூதிரி

B. ரஞ்சித், நம்பூதிரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வழிபாடுகள்(பூஜைகள்)

	ரூபாய்:
கணபதி ஹோமம்	15
அர்ச்சனை	5
குடும்ப அர்ச்சனை	10
புஷ்பாஞ்சலி	30
ரக்த புஷ்பாஞ்சலி	40
சத்ருசம்ஹார அர்ச்சனை	10
சத்ருசம்ஹார பூஜை	100
துர்க்கா சூக்தம் அர்ச்சனை	10
வித்யா சூக்தம் அர்ச்சனை	10
சுயம்வரம் அர்ச்சனை	10
மிருத்ஞ் ஜெய அர்ச்சனை	10
பாக்ய மத்ய ஆத்தம் அர்ச்சனை	10
திரு மதுரம்	5
ஆடிய எண்ணை	5
சரடு, தகடு, போட்டோ பூஜை	2
பாக்ய சூக்தம் அர்ச்சனை	10
ரக்த புஷ் பார்ச்சனை	10
அஷ்டோதிர அர்ச்சனை	20
அரவணை பாயாசம்	25
மஹாலெக்ஷ்மி மந்திர அர்ச்சனை	10
அகோர மந்திர அர்ச்சனை	10
தாரா	10
சுயம்வரம் பூஜை	15
சஷ்டி பூஜை	15
வித்யா பூஜை	15
நீராஞ்சனம்	15
மிருதஞ் ஜெயபூஜை	30
லலிதா சக்ஸ்ஹர பூஜை	50
நிரபா	50
வித்யா நமஷ்ஹாரம்	25
நடகுருதி	50
வரநிவேத்யம்	15
சர்பநிவேத்யம்	25
சோறுனு (அன்னம் ஊட்டுதல்)	15
குங்கும பூஜை	100
உச்சாடன பூஜை	100
நவக்கிரக பூஜை	100
பகவதி பூஜை	100
தீணகுருதி	100
கலசகுருதி	100

	ரூபாய்:
கருங்குருதி	200
அகோரகுருதி	250
செங்குருதி	250
செவ்வாய் பூஜை	350
அஞ்சன குருதி	350
கர்ம பூஜை	400
பீட பூஜை	500
வலியகுருதி	500
இரட்டகுருதி	500
பீட சக்தி பூஜை	650
வலிய கருங்குருதி	750
வலிய பூஜை	500
சர்வ ஐஸ்வர்ய பூஜை	100
சிறுகுருதி	200
தம்பதி ஐக்ய மத்திய பூஜை	50
வாகன ஐஸ்வர்ய பூஜை	50
வித்யா விஜய பூஜை	50
ரோக சாந்தி பூஜை	50
பாவ சாந்தி பூஜை	50
ஆபத் சாந்தி பூஜை	50
திரிபுர சுந்தரி பூஜை	50
சந்தான கோபால பூஜை	50
குஜனு பூஜை	10
வியாழன் பூஜை	10
சுக்ரன் அர்ச்சனை	10
சந்திரன் அர்ச்சனை	10
ராகு அர்ச்சனை	10
கேது அர்ச்சனை	10
சனி அர்ச்சனை	10
புதன் அர்ச்சனை	10
திரிபுர சுந்தரி அர்ச்சனை	10
புருஷ சூக்தம் அர்ச்சனை	10
ஸ்திரி சூக்தம் அர்ச்சனை	10
பௌர்ணமி அர்ச்சனை	10
ஆயுள் சூக்தம் அர்ச்சனை	10
ருத்ர சூக்தம் அர்ச்சனை	10
சந்தான கோபால் அர்ச்சனை	10
மங்கல்ய சூக்தம் அர்ச்சனை	10
மலர் நிவோத்யம்	5
வெள்ளை நிவோத்யம்	5

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முன்பதிவு செய்யவேண்டிய பூஜைகள்:

	ரூபாய்
அஷ்டதிரவிய கணபதிஹோமம்	250
கணபதி ஹோமம்	25
ஒருநாள் பூஜை	1500
ஒருநேர பூஜை	1000
கார்த்திகை பூஜை	1500
அடியேந்திர பூஜை	2000
கலசபூஜை	150
நூறும் பாலும்	100
பால் பாயாசம்	20
அர நாழி பாயாசம்	450
முரியா பாயாசம்	50
மஞ்சள் நீராட்டு	2000
சக்திபூஜை	1500
ஒரு தினவாயன	650
முழுகாப்பு (தேவிக்கு)	250
முழுகாப்பு (உபதேவர்மாரக்கு)	150
வெள்ளி அங்கி சார்தத்தல்	500
தங்க அங்கி சார்த்தி பூஜை	5000
உதயாஸ்தமன பூஜை	5000
உற்சவ பூஜை	5000
அஷ்டகுருதி	2000
அபஸ்மாரகுருதி	300
பஞ்சகுருதி	1250
அன்பொளி வழிபாடு	2000
சுற்றுபுற விளக்கு	4000
களம் எழுத்துப்பாட்டு	2500
நிரபர	5000
அகண்ட நாமஜெயம்	3500
மஞ்சள் ஆட்டம்	7000
குங்கும அபிஷேகம்	7000
களகாபிஷேகம்	7000
அன்பொளி ஆட்டம்	5000
விவாகம் (திருமணம்)	500

பூஜைகள் செய்ய தபாலில் பணம் அனுப்பவேண்டிய முகவரி:

மணிகுட்டன் நம்பூதிரி

நிர்வாகி – சக்குளத்துகாவு பகவதிகோவில்
நீரோற்றுபுரம் – திருவல்லா, கேரளா – 689 571

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சக்குளத்தம்மன் ஆலயத்திற்கு செல்லும்வழி!

சக்குளத்து காவு பகவதி ஆலயம், கோட்டையம் ரயில் நிலையத்திலிருந்து 35 கி.மீ.யிலும், செங்கணாச்சேரியில் இருந்து 16 கி.மீ.யிலும், திருவல்லாவில் இருந்து 9 கி.மீ.யிலும், செங்கன்னூரிலிருந்து 18 கி.மீ. தொலைவிலும், ஆலப்புழையில் இருந்து 30 கி.மீ.யிலும் அமைந்துள்ளது.

மேற்கண்ட ஊர்களின் பேருந்து நிலையத்தில் இருந்தும் குறிப்பிட்டுள்ள தொலைவிலேயே ஆலயம் உள்ளது.

கேரளத்தின் முக்கிய இடங்களான திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், கொட்டாரக்கரை, பத்தனம்திட்டை போன்ற பல இடங்களிலிருந்தும் சக்குளத்துகாவிற்கு நேரடி பேருந்துகள் உண்டு.

திருவல்லாவில் இருந்து 15 நிமிடத்துக்கு ஒருமுறை தகழி - இடத்துவா வழியாகச் செல்லும் பேருந்துகள் அனைத்தும் சக்குளத்து காவுக்குச் செல்லும்.

வெளிமாநிலங்களில் இருந்து (சென்னை, மதுரை, கோவை, தூத்துக்குடி, நெல்லை, தென்காசி, நாகர்கோவில் ஆகிய இடங்களிலிருந்து) தமிழ்நாடு அரசுப் பேருந்துகளும், கேரள அரசு பேருந்துகளும், கோட்டயம், திருவல்லா, செங்கணாச்சேரிக்கு செல்கின்றன. அங்கிருந்து சக்குளத்து காவு செல்வது எளிது.

திருவனந்தபுரம் மற்றும் கொச்சியில் விமானதளம் அமைந்துள்ளது.

ROUTE MAP



- 135 K.M. From Tiruvananthapuram Airport by NH 47, Diviation, Kayamkulam Mavelikkara Via
- 110 K.M. from Nedumbassery International Airport Via Allappuzha
- 35 K.M. from Kottayam Railway Station Via Changanacherry
- 28 K.M. from Allappuzha to Chakkulath Kavu by road.
- 18 K.M. from Chengannur Railway Station Via Thiruvalla by Road
- 9 K.M. West of Tiruvalla in Thakazhi Road



குடிப்பழக்கம் உள்ளவர்கள் குடியை நிறுத்துவதற்கு இந்த ஆலயம் ஒரு புகலிடமாக இருக்கிறது. இதை மாபெரும் சமூகப் புரட்சி என்று முன்னாள் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன், பாராட்டி சிறப்பித்திருக்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காரியதரிசி

பிரம்மஸ்ரீ மணிக்குட்டன் நம்பூதிரி

முக்கிய காரியதரிசி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரம்மஸ்ரீ ராதாகிருஷ்ணன் நம்பூதிரி

RADHAKRISHNAN NAMBOOTHIRI

குடிப்பழக்கம், போதைப் பழக்கம், சூதாட்டம் இவை, உடல்நலம், தன்மானம், பணம் ஆகியவற்றை சீர்குலையச் செய்கின்றன. இவற்றுக்கு அடிமையாகின்றவர்கள், தாங்களும் அழிந்து தங்களைச் சார்ந்தவர்களின் அழிவுக்கும் காரணமாகின்றனர். சமுதாயத்திலிருந்து தனிமைப்படுத்தப் படுகின்றனர். அழிவுக்குக் காரணமாகும் இந்தக் கொடிய பழக்கங்களை நிராகரித்து விடுங்கள். உங்கள் துயரம் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும், சர்வ சக்தியுள்ள சக்குளத்தம்மாவை வணங்குங்கள். தேவி, நிச்சயம் உங்களை காப்பாற்றுவார்கள்.

ADMINISTRATOR,
CHAKKULATHUKAVU DEVASOM.

Ph: 0477-2213550 (O)
2213521 (R)

CHAKKULATHUKAVU SREE BHAGAVATHY TEMPLE, NEERETTUPURAM P.O., **TIRUVALLA - 689 571,** KERALA, SOUTH INDIA.